1235

Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

8

இதழ் 5, 6

செந்தமிழ் மாதசஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1356, ஸபர், ரபீஉல் அவ்வல் மீ
1937ஹு மே, ஜூன் மீ

1. அல்குர்ஆன் ... 105
2. அல்ஹதீது ... 107
3. முஸ்லிம்களது ஒற்றுமை ... 109
4. நன்றியும், நன்றி மறந்த செய்கையும் ... 112
5. இஸ்லாம் மதமும், பிற்போக்கான சமுகங்களும் 115
6. உலகின் மிக நூதன நகரம் ... 119
7. இஸ்லாமிய உலகின் முக்கால நிலைமை ... 123
8. இஸ்லாமிய அரசாங்கங்களில் முஸ்லிமல்லாதாருக்களிக்கப்பட்ட உரிமைகள் ... 127
9. முஸ்லிம் பெண் கல்வியும், கல்வி சீர்திருத்தமும் 130
10. ஆசிரியா ஐரோப்பா கற்றுக்கொண்டதென்னை? 131
11. பாலஸ்தீன் பிரச்சினை ... 132
12. ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு உமர் ... 136
13. திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம்களின் விழிப்பு 139
14. நான் என் மதம் மாறினேன்? ... 141
15. சுகாதாரம்—ஆரோக்கியம் ... 144

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	”	4 0 0
தனிப் பிரதி ...	”	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

20235

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 8	ஹிஜ்ரி 1356 ஸபர், ரபீஉல்அவ்வல் மீ 1937ஹு மே, ஜுன் மீ	இதழ் 5 & 6

அல் குர்ஆன்

அவர்கள் அல்லாஹ்வின் ஒளியை தங்கள் வாயினுல் நூற்றுவிடுவேதற்கு நாடுகின்ருர்கள். அல்லாஹ் தன்னுடைய ஒளியை பூர்ணமாக்கி வைத்துக் கொண்டிருக்கிறுன்; காபிர் (அவிசுவாசி)கள் போருத்தக் கேட்டாலும் சரியே. அவன் நேர்வழி, உண்மையான மார்க்கத்தைக் கொண்டு தனது ரஸூலை அனுப்பி வைத்தான். இந்த மார்க்கம் சகல மார்க்கங்களைவிட சிரேஷ்டமாக விளங்குவதற்காக. முஷ்ரிக் (இணைவைப்போர்)கள் போருத்தக் கேடானபோதிலும் சரியே.

சோதரீர்! மேலே கூறப்பட்டுள்ள ஆயத்துகளில், அல்லாஹ்தஆலா இரண்டு விஷயங்களைக் குறிப்பிடுகிறுன். முதலாவது இஸ்லாம் மார்க்க சம்பந்தமாய் இதரர்களின் முழுப் பிரயாசை யாதாகும்? இரண்டாவதாக அப் பிரயாசையின் முடிவு எவ்வாருகும்? என்பதே. அல்லாஹ்தஆலா மேலே கூறப்பட்டுள்ள ஆயத்துகளின் ஆரம்பத்தில், இஸ்லாம் மார்க்கத்தை அழித்து நாசமாக்கிவிட குப்பார், முஷ்ரிகீன்கள் பகீரதப்பிரயத்தனப்படுவதாகவும், தான் அதனை பரிபூர்ணமாகச் செய்துவிட நாடுவதாகவும், தெரிவிக்கிறுன்.

மேலும், தனது மார்க்கம் இதர மார்க்கங்களைவிட ஜெயம் பெற்றதாகவும், மிகைத்ததாகவும் மிளிர்ந்திலங்குவதற்காக அல்லாஹ்தஆலா தனது ரஸூலுக்கு நேர்வழியையும், சத்திய மார்க்கத்தையும் அளித்து அனுப்பியிருப்பதாக இரண்டாவது ஆயத்தில் குறிப்பிடுகிறுன். எனவே நாம் இவ்விரண்டு ஆயத்துகளையும் ஒன்று சேர்த்துப் பார்ப்போமாகில், அல்லாஹ்வின் சன்மார்க்கம் ஹஸ்ரத் முகம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களால் மிகைத்துநிற்கும் என்பது நன்கு புலனுகும்.

நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் இவ்வுலகின்கண் தோன்றி, இஸ்லாம் மார்க்கம் இதர மார்க்கங்களைவிடச் சிறந்ததெனத் தங்கள் செய் முறைகளால் விளக்கிக் காண்பித்திருக்கிருர்கள். இன்றைக்கு 1350 வருடங்களுக்கு முன் பெருமானுர் (ஸல்.) அவர்களது காலத்தில் இஸ்லாம் மிளிர்ந்திலங்கியதும், பின்னர் இதுகாலை அது மிகைத்து நிற்பதும் பெருமானுர் (ஸல்.) அவர்கள் பொருட்டாலேயாகும்.

ஹஸ்ரத் பாரூக் அஃலம் உமர்கத்தாப் (ரலி.) அவர்கள் காலத்திலும், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி), காலித் (ரலி.) இவர்களது காலங்களிலு மேற்பட்ட அபரிமித ஜெயங்களும் நபிகள்பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களது பொருட்டாலே ஏற்பட்டவைகளாகும். எனவே, இஸ்லாத்திற்கு ஜெயம் கிடைப்பதன் இரகசியம் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் வசமிருந்ததென்றே கூறலாம். இவ்வுண்மையை நாம் தெரிந்துகொள்வோமாகில், இஸ்லாத்திற்கு ஏற்படும் ஒவ்வொரு உதவி, ஜெயத்தின் அஸ்த்திவாரமும் நம் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களாகயிருக்கும் என்பது நன்கு புலனாகும்.

சோதரீர்! இஸ்லாத்திற்கேற்படும் உதவி, ஜெயம் இவைகளின் சட்ட திட்டங்களை பரீக்ஷித்துப் பார்க்கும் உறைகல் இன்னதென்பது நமக்குத் தெரிந்துவிட்டதால், அதைக்கொண்டு இஸ்லாமிய சரித்திரங்களை நாம் நன்கு பரிக்ஷித்துப் பார்த்தல் முடியும். சுல்த்தான் ஸலாஹுத்தீன் அவர்கள் தனியே ஐரோப்பா முழுவதிலுமுள்ள வல்லரசுகளைத் தோற்கடித்து வாகைமாலைசூட்டியது பெருமானார் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடந்ததேயாகும். இந்தியாவிலுள்ள முஸ்லிம் சிப்பாய்கள் ஆங்கிலேயர்களால் முறியடிக்கப்பட்டு தோல்வி யடைந்ததற்குக் காரணம் அவர்கள் பெருமானார் (ஸல்.) அவர்களைப் பின்பற்றாததேயாகும். அறப் முஸ்லிம்களாகட்டும், ஈரான் அப்கானிஸ்தான் முதலிய எத்தேசத்தில் வதியும் முஸ்லிம்களாகட்டும் அன்னோர் புதிய உணர்ச்சியுடன் புத்துயிர்பெற்றெழும்ப நாடுவார்களாயின், எப்பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்களிடமிருந்து அன்னோர்பாடங்கற்றுக்கொண்டு அப்படிப்பினையின் மீது ஸ்திரமாகயிருப்பதும், அவர்களுடைய ஒவ்வொரு சொல், செயல் இவைகளின் கடிவாளத்தை பெருமானார் (ஸல்.) அவர்களிடம் ஒப்புவித்து விட வேண்டுவதும் அவசியம். நாம் இவ்வாறு செய்துவிடுமோகில் எந்த சக்தியும் முஸ்லிம்களைத் தோற்கடித்துவிட முடியாது.

"அல்லாஹ்தஆலா, முந்திய நபிமார்கட்கு அளித்திராத அநேக காருண்யங்களை எனக்கு அளித்திருக்கிறான்; அதிலொன்று 'ருஅப்' என்னும் கெம்பீரத் தோற்றமாகும். இதன் பொருட்டால் எனக்கு பற்பல ஜெயங்கள் கிடைத்திருக்கின்றன. இரண்டாவது யுத்தங்களில் கிடைத்த முதல்கள் எனக்கு ஆகுமாயிருக்கிறது; எனக்கு முன்னிருந்த எந்த நபிக்கும் அம்முதல் ஆகுமாக்கப்படவில்லை. 3, உலக முழுதிலுமுள்ள எல்லா இடங்களிலும் நான் 'ஸஜ்தா' செய்வது ஆகுமாக்கப்பட்டிருக்கிறது. 4, 'ஷபாஅத்' ஸிபாரிஷ் செய்யும் பதவியை அல்லாஹ்தஆலா எனக்களித்திருக்கிறான். ஐந்தாவது ஒவ்வொரு நபியும் ஒவ்வொரு வகுப்பார்களுக்கென்றே அனுப்பப்பட் டிருந்தார்கள். ஆனால் யான் உலகம் முழுதிற்கும் நபியாக அனுப்பப்பட்டுளேன். ஆறுவது எனக்குமுன்னுள்ள ஒவ்வொரு நபிக்குப்பின் மற்றொரு நபி வந்துகொண்டிருந்தனர். ஆனால் என்னோடு நபித்துவம் முடிவடைந்துவிட்டது. ஏழாவது முந்திய நபிமார்கட்குக் கொடுக்கப்பட்ட வேதங்கள் குறிப்பிட்ட ஒரு காலவரைக்குட்பட்டிருந்தது. ஆனால் எனக்கருளப்பட்ட குர்ஆன் திருவேதம் கியாமம் மறுமை நாள் வரை உயிரோடேயிருக்கும். எட்டாவது இதர நபிமார்களைப் பின்பற்றிய உம்மத்தோர்களைவிட என்னைப் பின்பற்றியோர் அதிகமிருப்பர்" என, நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியதாக புகாரீ, முஸ்லிமில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள காருண்யங்களில், எதிரிகளை மிகைத்துக்கொள்ளல், ஜெயபேரிகை அடைதல், உலகமாந்தர்கள் நேர்வழி பெறுவதற்காக தங்களை அனுப்பியது, தங்கள்மீது நபித்துவம் முற்றுப்பெற்றது, ஒரு லக்ஷத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களில் சிபாரிஷ் செய்யும் பதவி அளிக்கப்பெற்றது ஆகிய இந்நான்கு காரியங்களும் பிரதானவைகளாகும். "மக்களிடையே கம்பீரமாகத் தோன்றும் ஓர் மகிமையை அல்லாஹ்தஆலா எனக்களித்திருப்பதால், எனக்கு ஜெயத்தின் தலைவாயல் திறக்கப்படுகிறது; யான் யுத்தகளத்திற்கு வெகு தூரத்திலிருந்தபோதிலும் பகைவர்கள் தாமே நடுக்கமுறுகின்றனர்" என, நபிகள் பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாக புகாரியில் கூறப்படுகிறது. நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது அரும்மொழிகளை நாம் பரீக்ஷித்துப் பார்க்க நாடுவோமாயின் நபித்துவ காலத்தில் நிகழ்வுற்ற ஒவ்வொரு யுத்தமுமே அதற்கு போதிய சான்றாக யிலங்கும். 'பத்ர்' போரில் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களுடன் 313 சஹாபிகள் யிருக்கும் நிலமையில் எதிரிகளான 1000 குரைஷியர்களை ஜெயித்தனர்.

'உஹத்' யுத்தத்தில் பெருமானார் (ஸல்.) அவர்களுடன் எழுநூறு சஹாபிகளிருக்கும்போது 3 ஆயிரம் எதிரிகளை ஜெயித்தனர். 'கத்தக்' ஆகிழி யுத்தத்தில் பெருமானார் (ஸல்.) அவர்களுடன் 3 ஆயிரம் பேர்களிருக்கும்போது 10 ஆயிரம் யூத கிறிஸ்தவர்களை ஜெயித்தனர். 'கைபர்' போரில் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களுடன் 1400 பேர்களிருக்கும் நிலைமையில் 30 ஆயிரம் யூதர்களை ஜெயித்தார்கள். அதற்குப்பின் 'காதிஸிய்யா' போரில் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களது சிப்பாய்கள் 36 ஆயிரம் பேர்களிருக்கும் நிலைமையில் ஒரு லக்ஷம் ஈரானியர்களை ஜெயித்தார்கள். 'யர்மூக்' போரில் நபிகள் கோமான் (ஸல்.) அவர்களது 40 ஆயிரம் சிப்பாய்கள் 2 லக்ஷத்து 40 ஆயிரம் கிறிஸ்தவர்களை ஜெயித்தார்கள் எனத் தெரிய வருகிறது.

இச்சம்பவ நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் நன்கு ஆராய்ந்துபார்ப்போமாகில், இஸ்லாத்தின் திருநபி அவர்களுடையவும், இஸ்லாத்தைப் பின்பற்றி நடந்தவர்களுடையவும் ஜெயமெல்லாம் எண்ணிக்கையின்பேரிலும், தளவாட சாமான்களின்மீதும், இதர யுத்த தந்திரங்களின்மீதும் இல்லாது உண்மையில் அவர்கள் இஸ்லாத்தைப் பின்பற்றி நடந்ததின்மீதும், இஸ்லாத்தின் தோற்றம் குப்பார்களின் மனதில் ஊடுருவிப் பாய்ந்திருந்ததின்மீதுமே இருக்கிறதென்பது நன்கு புலனாகும்.

இவ்வாறு ஜெயத்துடன் திகழ்ந்து இலங்கிய சன்மார்க்கத்தை குப்பார்கள் அழித்துவிட முயற்சித்தது வெறும் கனவாகவே முடிந்துவந்தது. ஆனால் இதுபொழுது நம்மனோர் உத்த மார்க்கத்தின் உயரிய குணங்களைக் கைவிட்டு சன்மார்க்க நெறிதவறி நடப்பதன் பயனாகவே பலவாறான தோல்விகளும் அபஜெயமும் நம்மைச் சூழ்ந்து நிற்கிறதென்பது வெளிப்படை. இத் துர்அதிர்ஷ்டவசத்தை ஏகவல்ல நாயன் நீக்கிவைத்து நாம் சன்மார்க்க பக்தர்களாய்த் திகழ்ந்து ஜெயபேரிகை முழக்குடையயோர்களாகச் செய்வானாக.

அல்ஹதீது

"அல்லாஹ்தஆலா நிகரற்ற அன்புடையோனாகவும், அளவற்ற கொடையாளனாகவும் இருப்பதால் அவன் அன்பு, கொடை இவைகளை விரும்புகின்றான். எனவே எவன் மக்கள்மீது அன்புகாட்டவில்லையோ அவன்மீது அல்லாஹ் அன்பு காட்டுவதில்லை" என, நாயகம் (ஸல்.) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சோதரீர்! மக்கள், அல்லாஹ் தஆலாவின் படைப்புகள் ஒவ்வொருவர்மீதும் கிருபை காட்டவேண்டுமெனவும், அழகிய முறையில் நடந்துகொள்ள வேண்டுமெனவும், நாம் அவனது படைப்புகள்மீது அன்புகாட்டாவிடின், எவனுடைய அன்பு, கிருபையை நாம் சதாவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோமோ அவன் நம்மீது அன்புகாட்ட மாட்டானெனவும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்கள். சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களது இவ்வரும் மொழிகளில் நாம் பின்பற்றி நடக்கவேண்டிய பற்பல விஷயங்கள் மிளிர்ந்திலங்கிக்கொண்டிருக்கின்றன. இதுகாலை நமது ஹிருதயத்தில் துருப்படிந்திருப்பதால், நமதூர், நமது தெருவு, நமது அயல்வீடு இவைகளில் எத்தனையோ ஏழைகள், கைம்பெண்கள், பசி, தாகத்தால் வாடி வருந்துவதை நாம் சற்றேனும் கவனிக்கிறோமில்லை; அவர்களது நிலைமைகளைத் தெரிந்து சற்றும் கவலைகொள்கிறோமில்லை. இந்த நம்முடைய நிலைமைக்காகத்தான் அல்லாஹ்தஆலா நம்மீது கிருபைசெய்ய மாட்டேனென அறிவித்துள்ளான்.

நாம் முற்காலத்திய சரித்திரங்களை நோக்குவோமாகில், நமது நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அளவற்ற கிருபையாளராக விருந்ததால் இரப்போர்க்கு இல்லை எனச் சொல்லாதவர்களாய் இருந்தார்களென்பதையும், தங்களிடம் அதுசமயம் இல்லாதுபோயினும் இதரர்களிடம் கடன் வாங்கியேனும் கொடுப்பவர்களாக யிருந்தார்களென்பதையும் தெரிந்து கொள்கிறோம். மேலும் தங்களுக்கு அளவற்ற பலவாறான கஷ்டங்களைக் கொடுத்த பகைவர்கள்மீதும் கிருபை புரிந்திருக்கிறார்கள். 'உஹத்' போரில் தங்கள்

மீது கல்லெறிந்து தங்கள் அருமைப் பல்லைப் போக்கி வதனத்தையும் காயப்படுத்திய "உத்பாபின் அபீவக்காஸ்" என்பாரை கைதுசெய்து தர்பாருக்குக் கொண்டு வந்தபோது சத்தியத் தூதர் (ஸல்.)அவர்கள் அவருடைய குற்றத்தை மன்னித்து "யான் பழிவாங்க விருப்பமில்லை" என, அன்பாய் அறிவித்து விட்டார்கள். இவ்வாறே தங்கள் சஹாபிகள்மீது அதிக்கிரமம் புரிந்த பகைவர்களின் குற்றங்களையும் மன்னித்தருளி யிருக்கின்றார்கள். இச்சம்பவ நிகழ்ச்சிகளை நாம் நன்கு ஆராய்ந்து பார்ப்போமாகில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அன்பு, தயாளத்திற்கு அரசராக விருந்தார்களென்பது நன்கு புலனாகும். இம்முன் மாதிரியைப் பின்பற்றி நடக்க ஏகவல்லோன் அல்லாஹ்தஆலா நம்மனோருக்கு நல்லருள்புரிவானாக.

"ஏழைமக்களுக்கு உதவி புரிவதில் முயற்சிப்பவன் அல்லாஹ்வுக்காக ஜிஹாது (மார்க்க யுத்தம்) புரிபவனைப்போலிருக்கிறான். எவன் தன் ஏழை சகோதரனுடைய தேவைகளை நிறைவேற்றிக் கோடுப்பதிலீடுபட்டிருக்கிறானோ அல்லாஹ்தஆலா இவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துவைக்கிறான்" என, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் கூறி யிருக்கிறார்கள்.

ஹதீதின் விரித்துரைக் கர்த்தாக்களில் முதன்மை ஸ்தானம் பெற்று விளங்கும் ஹஸ்ரத் அபூஹாத்திம் ராஜீ அவர்கள் மேலே கூறப்பட்டுள்ள நாயக வாக்கியத்தை விரித்துரைக்குங்கால், இஸ்லாம் உலகின்கண் தன் ஒளியை வீசி இலங்குவதற்குமுன் உலகின் நானா பாகங்களிலும் அநீதி, அதிக்கிரமம், வஞ்சகம், மிருகத்தன்மை முதலிய துற்குணங்கள் தாண்டவமாடிக்கொண்டிருந்ததெனவும், இஸ்லாம் தோன்றி மக்களுக்கு நீதி சமாதானம், கிருபை, தயாளம் இவைகளைக் கற்றுக்கொடுத்ததின் பயனாக அநீதி புரிந்துவந்தோர் தயாளசிந்தை யுடையவர்களாய் மாறிவிட்டார்களெனவும், எதுவரை முஸ்லிம்களில் இச்சிறந்த குணங்கள் சிறப்புற்று இலங்கிக்கொண்டிருந்ததோ அதுவரை அன்னோர் ஒவ்வொரு விஷயத்திலும் ஜெயம் பெற்று விளங்கினார்களெனவும், உலகின் மக்களெல்லோரும் அன்னோருக்கு சங்கை மரியாதை செய்து வந்தார்களெனவும், எதுபொழுது மக்களில் சுயநல உணர்ச்சி தோன்ற ஆரம்பமாயிற்றோ அதுமுதல் அவர்கள் கேவலமாகவும் தாழ்மையாகவும் மதிக்கப்படுகின்றார்களெனவும் கூறியிருக்கின்றார்கள்.

"தன் சிநேகிதர்களோடும், தன் அயல்பாகக்காரர்களோடும் அழகிய முறையில் நடந்துகொள்பவன்தான் அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானவனாகும்" என, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுறைறா (ரலி.) தெரிவித்திருக்கிறார்கள்.

ஹஸ்ரத் அபூஹாத்திம்றாஜீ அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், தன் அயல்பாகக்காரர்களுடன் அழகிய முறையில் நடந்துகொள்ள வேண்டியது ஒவ்வொரு மானிடர் மீதும் கடமையாகும். ஆதலின் சங்கைவான்களான சஹாபாக்கள் தங்கள் அயல்பாகக்காரர்களுடன் அழகிய முறையில் நடந்துவர முற்பட்டு தாங்கள் பசியுடனிருக்கும் நிலைமையில் அவர்களுக்கு அன்னமளிப்பார்களெனவும், ஹஸ்ரத் மாலிக்இப்னு அப்துர் ரஹ்மான் (ரலி.) காலைமுதல் மாலைவரை கூலிவேலை செய்து அதில் கிடைக்கும் சம்பளத்தில் பாதியை அயல்பாகக்காரர்களில் ஏழைகளாயுள்ளோருக்கு கொடுத்துவிடுவார்களெனவும், ஒருநாள் வேலை கிடைக்காவிடில் அன்று தாங்கள் பட்டினியாகவிருந்து தாங்கள் சாப்பிடுவதை அன்னோருக்குக் கொடுத்துவிடுவார்களெனவும், சஹாபிகள் இச்சற்குணங்களை அனுஷ்டித்து வந்ததனால்தான் அன்னோர் மக்களிடையே சிறந்து விளங்கினார்களெனவும் கூறியிருக்கிறார்கள்.

"எவன் அல்லாஹ்வின்மீதும், மறுமை நாளின்மீதும் 'ஈமான்' நம்பிக்கை வைக்கிறானோ அவன் தன் வேலையாளுடன் தக்க முறையில் நடந்து கோள்வானாக. அந்த வேலைக்காரன் நம்முடைய சோதரனாக விருப்பதால் நாம் எதை சாப்பிடுவோமோ அதனையே அவனுக்கும் கொடுப்போமாக" என, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் இமாம் அபூஹாத்திம் அவர்கள் இந்த ஹதீதை விரைத்துரைக்குங்கால், சங்கைவான்களான சஹாபாக்கள் அடிமைகளுடன் அழகிய முறையில் நடந்துகொண்டு தாங்கள் எதைச் சாப்பிடுகின்றார்களோ, எதை அணிகின்றார்களோ அவைகளை அன்னோருக்கும் கொடுத்து அழகிய முறையில் நடந்து வந்தார்களென அறிவிக்கின்றார்கள்.



முஸ்லிம்களது ஒற்றுமை

இஸ்லாம் மதம் இவ்வுலகில் பிரத்தியக்ஷ மாகச் செய்து காட்டிய அரும்பெரும் சேவைகளில் ஒற்றுமையும் ஒன்ருகும். எம்பெருமானர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மக்காவை ஹிஜ்றத் செய்து மதீனவை அடைந்தவுடன் செய்த அவ சரமான காரியங்களுள் மக்கத்து முஸ் லிம்களுக்கும் மதீன முஸ்லிம்களுக்கு மிடையே சகோதரத்துவத்தை ஏற்படுத் தியதும் ஒன்ருகும். இது மட்டுமல்ல மதீனவில் ஒரே தந்தையின் மக்களாகத் தோன்றிய ஒளஸ், கஜ்றஜ் என்ற இரு கோத்திரத்தினர் பல நூற்ருண்டுக ளாகச் சண்டையிட்டுக் கொண்டிருந் ததை அகற்றி அவர்களைச் சகோதரர்க ளாக ஆக்கினர்கள். இப்படி ஒற்றுமை யையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத் தியதன் பயனக மதீனவில் முஸ்லிம்கள் மிகச் சொற்பமாக இருந்தும் மக்கத்துக் காபிர்களையும், மதீனத்து யூதர்களையும், நஜ்ரூன் கிறிஸ்துவர்களையும் கண்டஞ் சாமல் அவர்களது எதிர்ப்புகளையும், நாசவேலைகளையும் சமாளித்து இஸ்லாத் திற்கு கீர்த்தியையும் உயர்வையும் உண்டு பண்ண முடிந்தது. நபிகள் நாய கம் (ஸல்.) அவர்களை முகமுகமாகக் கண்டு பழகிய ஸஹாபிகள் தங்கள் குரு நாதரிடமிருந்து கற்றுக்கொண்ட இத் தன்மையைக் கடைப்பிடித்தொழுகிய தன்பயனக பெரும் பெரும் ஏகாதிபத் தியங்களையும், லக்ஷக்கணக்கான போர் வீரர்களையும் மிகச்சொற்ப ஜனங்களின் மூலமாக எதிர்த்துப்பணியச் செய்து உல கில் ஜெயக்கொடியை நாட்டினர்கள். முஸ்லிம்களது இவ்வெற்றிகளையும், கிறிஸ்தவர்களது தோல்வியையும் குறித்து ஆலோசனை செய்வதற்காக உரோமச் சக்கரவர்த்தியான 'ஹிர்க்கல்' தர்பாரைக் கூட்டியபோது, ஆங்குள்ள வர்களில் வயது முதிர்ந்தவரும் அனுபவ சாலியுமான பாதிரியார் ஒருவர் இவ் வொற்றுமையைக் குறித்துப் பேசிய விபரம் முஸ்லிம்களுக்குத் தெரியாத விஷயமன்று. இவ்வித ஒற்றுமை முஸ் லிம்களுக்குள் இருந்த காலம் வரை முஸ் லிம்களைப் பற்றிப் பிறர் நடுங்கிக்கொண் டிருந்ததுடன் அவர்களுடைய நியாய மான கோரிக்கைகளை அளிப்பதற்கு எந்நேரமும் காத்துக்கொண்டிருந்தார் கள். அப்புறம் முஸ்லிம்களுள் சுயநலம் தோன்றி, ஒற்றுமை குறைந்துபோகவே இஸ்லாம் மத விரோதிகள் முஸ்லிம் களைத் தாக்கவும் அவர்களது உரிமை களை அபகரிக்கவும் தொடங்கி, முஸ்லிம் ராஜ்யங்களை எல்லாம் ஒன்றன்பின் ஒன் ருகத் தங்கள் வசப்படுத்தத் தொடங்கி னர். ஐரோப்பாவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள பிரான்சு தேசத்தின் பாதிப் பிரதேசம்வரை இருந்த இஸ்லா மிய அரசாங்கம் முஸ்லிம்களது ஒற்று மைக் குறைவின் பயனக கிறிஸ்து வர்கள் கையில் போயிற்று. மத்திய ஐரோப்பாவில் ஹங்கேரி, ஆஸ்டிரி யா, இத்தாயின் ஒரு பகுதிவரை பரவி யிருந்த நாடுகளெல்லாம் கிறிஸ்துவ ஆதிக்கமாக மாறிற்று. சுருங்கச் சொல் லின் ஐரோப்பாவிலுள்ள ஸ்பெய்ன்,

போர்ச்சுகல், ஹங்கேரி, யுகோஸ்லேவியா, ரொமேனியா, பல்கேரியா, கிரீஸ் முதலிய கிறிஸ்துவ அரசாங்கங்களும், ஆஸ்டிரியா, பிரான்சு, இத்தாலி ரஷியா ஆகியவைகளின் பகுதிகளும், இஸ்லாமிய ஆதிக்கத்திற் குட்பட்டிருந்தன. ஆப்பிரிக்காவிலுள்ள மொரொக்கோ, டூனிஸ், அல்ஜிரியா, திருப்போலி, அபிசினியா முதலிய நாடுகளெல்லாம் ஒரு காலத்தில் முஸ்லிம்களது ஆட்சிக்குட்பட்டனவாக இருந்தன. ஆப்பிரிக்காவிலுள்ள இந்த நாடுகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வசித்தும் கூட அவர்களில் ஒற்றுமையில்லாக் குறையால் அவர்கள் கிறிஸ்துவர்களுக்கு அடிமைகளாகி ராஜீய சுதந்திரத்தை இழந்ததுடன் மத சுதந்திரத்தையும் மானத்தையும் கூட இழந்து கொண்டிருந்தனர். திருப்போலியிலுள்ள முஸ்லிம் வீரர்களைக் கொன்று அவர்களது சின்னஞ் சிறு குழந்தைகளைப் பலவந்தமாக இத்தாலிக்குக் கொண்டுபோய் அவர்களைக் கிறிஸ்துவர்களாக்குவதாகவும், அந்தப் பெண் குழந்தைகள் இரிட்ரியாவிலுள்ள இத்தாலிய ராணுவத்தில் ஊழியக்காரிகளாக அனுப்பப்படும் கொடுமைகளைக் குறித்தும் சில காலத்திற்குமுன் திருப்போலியிலிருந்த ஷெய்கு இத்ரீஸ் ஸன்னூஸீ அவர்கள் இஸ்லாமிய உலகிற்கு விண்ணப்பம் செய்து கொண்டதும், அல்ஜீரியாவிலுள்ள பர்பரி முஸ்லிம்கள் வேத பாடசாலைகளை ஏற்படுத்தக் கூடாதென்று தடுத்தும் விவிலிய நூல்களைக் கற்கவேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தப்பட்டும் பிரஞ்சுக்காரர்களால் கொடுமைப்படுத்தப்பட்டும் வரும் விபரங்களும் சிலகாலத்திற்கு முன் பத்திரிகைகளில் வெளியாயின. ஐரோப்பாவிலுள்ள ஆட்சி சீர்குலைந்த பின் அங்குகுள்ள முஸ்லிம்களில் வயோதிகர்கள் கொல்லப்பட்டனர்; 25 வயதிற்கு மேற் பட்ட ஸ்திரீகளும், கிறிஸ்தவ மதத்தில் சேர இஷ்டப்படாதவர்களும் கடலில் வீழ்த்தப்பட்டனர்; 25 வயதிற்குட்பட்ட முஸ்லிம் அறபி பர்பரிய ஸ்திரீகள் கிறிஸ்துவர்களுக்கு மனைவியாகப் பலவந்தப்படுத்தப்பட்டனர். சுருங்கக்கூறு மிடத்து தற்போது ஸ்பெயினிலிருந்து வரும் கிறிஸ்துவர்களில் ஒருபெருங் கூட்டத்தினரின் நரம்புகளில் முஸ்லிம் உதிரம் ஓடிக் கொண்டிருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. இவ்விதமான கொடுமைகளுக்கும், அவமானங்களுக்கும், கஷ்டங்களுக்கும் உட்படநேர்ந்ததற்கு முஸ்லிம்களில் ஒற்றுமை யுணர்ச்சியும் இஸ்லாமிய பக்தியும் குன்றியதே காரணமாகும். தூரத்திலுள்ள விஷயங்களைக் கவனிப்பானேன்? சென்ற மகா யுத்தத்தின் போழ்து முஸ்லிம்களுக்குள் ஒற்றுமையில்லாமல் சுயநலம் ஏற்பட்டதாலன்றோ துருக்கியரை விட்டு அறபியர்கள் பிரியவும், இந்திய முஸ்லிம் வீரர்கள் இராக், ஷாம் முதலிய இஸ்லாமிய நாடுகள் சென்று தங்கள் சகோதர முஸ்லிம்களான துருக்கியர் மீது குண்டுப் பிரயோகம் செய்து அவர்களை நெருக்கித் தோல்வியுறச் செய்ததும் உலகறிந்த விஷயமாகும். தவிரவும் முஸ்லிம்கள் ஒற்றுமையில்லாமல் சுயநலங் கொண்டதன் பயனாக, ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் காலத்தில் கிறிஸ்துவர்களால் ஒப்புவிக்கப்பட்ட பைத்துல் முகத்தஸ், முஸ்லிம்களின் முக்கிய முதன்மையான புண்ணிய க்ஷேத்திரங்களி லொன்றான எருசலேம் நகர் இன்று கிறிஸ்துவர்களால் ஆட்சிபுரியப்படுகிறது; திருகுர்ஆனிலேயே இறைவனால் சபிக்கப்பட்டு நாடோடிகளாக ஆக்கப்பட்ட யூதவகுப்பாருக்கு பாலஸ்தீனம் தாய்நாடாக ஏற்படுத்தப்படுகிறது. வெளி நாடுகளில் தான் இவ்வாறு நடக்கிறதென்று நினைக்கின்றீர்கள்?

இந்தியாவில் முஸ்லிம்கள் 800 வருஷகாலம் ஆட்சி புரிந்தனர். காபூலிலிருந்து கன்னியாகுமரி வரை இஸ்லாத்தின் கொடி ஒருகாலத்தில் பறந்தது. அலா

வுத்தீன் கில்ஜி என்பவர் ராமேஸ்வரம் வரை வந்து தமது ஞாபகார்த்தமாக அங்கொரு மஸ்ஜிதையுங்கட்டிவைத்தார். ஆகவே இந்தியாவை எண்ணூறு வருஷ காலம் ஆட்சிபுரிந்து மிகப்பலமான சேனையை வைத்துக் கொண்டிருந்த முஸ்லிம்கள் சுயநலத்தாலும், ஒற்றுமையின்மையாலும் பிறஜாதியாரின் சூழ்ச்சிக்கு உட்பட்டும், அவர்களது லஞ்சத்திற் காசைப் பட்டும் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்களது அதிகாரங்களையும் உரிமைகளையும் இழந்து இன்று அடிமைப்பட்டிருக்கின்றனர். அடிமைப்பட்டதுடனில்லாமல் பொருளாதார நிலைமையையும், கல்வியையுமிழந்து பின்தள்ளப்பட்ட வகுப்பினராகவும் மாறிவிட்டனர். ஒற்றுமையின்மையால் அடைந்த இந் நிலைமையை முஸ்லிம்கள் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. முஸ்லிம்கள் பல்வேறு கக்ஷியினராகப் பிரிந்து பிற மதத்தாருக்குக் கையாளாகவும், அவர்கள் கூறுவதுபோல் ஆடுபவராகவும் இருந்து வருகின்றனர். கக்ஷிபேதத்தையும் சுயநலத்தையும் பாராட்டி முஸ்லிம் சமூகத்திற்குள்ள பொதுநலங்களை இழந்தனர். மேலும் மஸ்ஜிதுகள் பாடசாலைகளாக மாற்றப்படுவதையும், மஸ்ஜிதுகளை இடிப்பதையும், மஸ்ஜிதுகளைக் கிரயம் செய்வதையும் பற்றிய சமாச்சாரங்கள் அடிக்கடி பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. முஸ்லிம்கள் எத்துணை தரித்திரர்களாக இருந்தாலும், கல்வியறிவற்றவராக இருந்தாலும் மார்க்க பக்தியை மட்டிலும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்ற ஒரு நற்கீர்த்தியைப் பெற்றிருந்தனர். ஆனால், அக்கீர்த்திக்குங் கூட இக்காலத்தில் பங்கம் வந்துவிட்டதோ வென்று நினைக்கவேண்டியதாக இருக்கிறது. சில தினங்களாக முஸ்லிம்கள் குடும்பத்துடன் ஹிந்துமதத்தைத் தழுவுவதாக ஹிந்துக்களால் நடத்தப்படும் பத்திரிகைகளில் சமாச்சாரங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சுருங்கக்கூறுமிடத்து பிற மதவாதிகள் பல்வேறு பிரிவினராகப் பிரிந்து கட்டுப்பாடான முறையில் முஸ்லிம்களது ராஜீய, பொருளாதார மத உரிமைகளையும் பரிக்க முயலுவதுடன் முஸ்லிம்களைப் பிறமதத்தில் சேர்க்கும் வேலைகளையும் செய்துவருகின்றனர். இதற்காக அவர்கள் லக்ஷக் கணக்கான தொகைகளையும் செலவு செய்கின்றனர். கடந்த எலக்ஷன் முடிவுகள் பிறமதவாதிகளுக்கு இன்னும் அதிக தைரியத்தையுண்டாக்கிவிட்டது. முஸ்லிம்கள் ஒரு கக்ஷியாக ஒற்றுமையோடுநிற்காமல் பிரஜாகக்ஷி, லீக்கக்ஷி, தேசிய கக்ஷி, ஐக்கிய கக்ஷி, அபேத வாதக்கக்ஷி, காங்கிரஸ் கக்ஷி, ஜஸ்டிஸ்கக்ஷி, புரோகிரஸிவ்பார்ட்டி, சுயேச்சைக்கக்ஷி யென்றெல்லாம் பல்வேறு கக்ஷியாகப்பிரிந்து முஸ்லிம் அல்லாதாரும், அரசாங்கமும் முஸ்லிம்களை மதிக்காமல் அலக்ஷயம் செய்யும்படிச் செய்துகொண்டனர். முஸ்லிம்களுக்கு இந்த எலக்ஷனுக்குப் பிறகு கிடைத்த அவமரியாதையை அன்னோர் இன்னமும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. முஸ்லிம்கள் இது விஷயத்தில் இனியும் அஜாக்கிரதையாக இருப்பார்களாயில் முஸ்லிம் சமூகத்திற்குப் பிற்காலத்தில் என்னென்ன விதமான தீங்குகள் விளையுமோ என்று அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. முஸ்லிம்களை வேட்டை மிருகங்களைப்போல் நினைத்துத் தங்கள் கக்ஷியில் சேர்த்துவிடவேண்டு மென்ற நோக்கத்தால் இதுபொழுது ஒவ்வொருவரும் முஸ்லிம் பொது ஜனங்களிடம் வஞ்சகப் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டனர். ஆதலின் முஸ்லிம்கள் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பார்களாயின் பிறரின் கையாட்களான நம்மவர், முஸ்லிம் பாமர ஜனங்களை ஏமாற்றிவிடுவர் என்பது திண்ணம். ஆகவே, முஸ்லிம் தலைவர்களும், அறிஞர்களும் தங்களுக்குளுள்ள அபிப்பிராய பேதங்களையும்

விட்டுக்கொடுக்கா மனப் பான்மையையும், சுய நலத்தையும் ஒழித்து முஸ்லிம் சமுகத்தை முன்னேற்றும் பொருட்டு அவர்களை ஒன்றுபடுத்தவும், கிராமப் புனருத்தாரண வேலைகளைச் செய்து ஏழைமுஸ்லிம்களது கஷ்டத்தையும் அறியாமையையும் போக்கவும் முன் வருவார்களாக. இவ்வேலையில் இறங்காமல் வெறும் வாய்வீச்சுகளுடனும் அறிக்கைகளுடனும் இருப்பார்களாயின் அவர்கள் தங்களது செல்வாக்கை இழப்பதுடன் முஸ்லிம் பொது ஜனங்களையும் காட்டிக் கொடுத்தவர்க ளாவார்க ளென்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

நன்றியும் நன்றிமறந்த செய்கையும்

இஸ்லாத்தின் சரித்திரத்தை நோக்குமிடத்து கிறிஸ்துமதம் சகல துறையிலும் இஸ்லாத்துடன் போர் தொடுத்திருக்கிறது என்பது புலனாகும். இஸ்லாம் மதம் எவ்விதத்திலேனும் முன்னேற்றமடைவதைப் பார்க்க கிறிஸ்துமதம் சகிப்புக்கொள்வதில்லை என்றுதோன்றுகிறது. இஸ்லாம் ஆரம்பமானது முதற்கொண்டு இன்று வரை கிறிஸ்துமதம் இஸலாத்தின்மீது வஞ்சம்தீர்த்துக்கொண்டே வருகிறது. ஆனால், இஸ்லாம் அதற்குப் பதிலாக கிறிஸ்துவர்களை எப்பொழுதும் ஆதரித்துக்கொண்டே வந்திருக்கிறது. இதற்குச் சில உதாரணங்களைக் கீழே தருகிறோம்.

சென்ற 1857-ம் வருஷம் நிகழ்ந்த சிப்பாய்க் கலகத்தில் "முஸ்லிம்கள் அடைந்த கஷ்டம்" என்ற பிரவாசுத்தைக் குறித்து முஸ்லிம்களது ரத்தத்திற்கிருந்த மதிப்பையும் விலையையும் போக்கடித்து அதனை வீணாகச்சிந்துவதில் மும்முரமாக இருந்த ஜனங்களே கூறி இருக்கின்றனர். மொகலாய வம்சத்தின் கடைசிவிளக்கான ஸிராஜுத்தீன் ஷாஹ்ஜுபர் என்பவர் தமது செய்யுள்களில் "கலிமாச் சொல்பவர்களது" நாசத்தைப்பற்றிக் கூறி இருப்பதற்கு தற்போதுள்ள சரித்திரம் அதிகம் முக்கியாம்சத்தைக் கொடுக்காமலிருக்கலாம். என்றாலும், அச் செய்யுள்கள் இருதய கமலத்திலிருந்து வடிந்த இரத்தத்தினால் எழுதப்பட்டவை. அவைகளைப் படிக்கும்போது முஸ்லிம்களது உதிரத்திலுள்ள சிவந்த அணுக்கள் பிரகாசிக்கத் தொடங்குகின்றன. இந்தக் கலகத்தில் சம்மந்தப்பட்டுள்ள ஒரு முக்கியஸ்தர் கூறி இருக்கிற சாக்ஷியத்தை மட்டிலும் இங்கு தருகிறோம்.

1857-ம் வருஷத்தில் சிப்பாய்க் கலகம் நிகழ்ந்தபோது மிஸ்டர் ராபர்ட் என்பவர் பிரிட்டிஷ் படையில் லெப்டினன்ட் பதவியை வகித்துவந்தார். இவர் பிற்காலத்தில் லார்டு பட்டத்தையும் அடைந்தார். இவர் தனது தாயாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "நாங்கள் ஜஹ்லமிலிருந்து பிஷாவருக்குக் கால் நடையாக வந்தோம். வழியில் கலகக்காரர்களைக் கொலை செய்துகொண்டும், ராணுவங்களிலிருந்து ஆயுதங்களை வாங்கிக்கொண்டு மிருந்தோம். ஜனங்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை பீரங்கிகளால் நிறைவேற்றப்பட்டது. இது மிகவும் நல்ல பயனையளித்தது. இது மிகவும் பயங்கரமான காட்சியாகவுமிருந்தது. என்றாலும், இப்படிச் செய்யாமலிருக்க வேறு வழியில்லை. இவ்விதமான அநியாயங்களின் மூலமாக நாங்கள் இறைவனின் உதவியால் இந்தியாவைக் கைப்பற்றியே வருவோம் என்பதை துஷ்டர்களான முஸ்லிம்களுக்கு நாங்கள் அறிவித்துவிட விரும்புகிறோம்."

இவ் வாக்கியங்கள் திக்கற்ற நிரபராதியான ஷாஹ்ஜுபருடைய செய்யுள்களன்று. வேறு எந்த முஸ்லிமுடைய வாக்கியமுமன்று. பொறுப்பு வாய்ந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர் ஒருவர் தனது தாயாருக்கு எழுதியகடிதத்திலுள்ள விஷயங்களாகும். இவ் வார்த்தைகள் ஒரு பேனா முனையிலிருந்து வெளிப்பட்டனவாயினும் ஆங்கில சிப்பாய்களின் உள்ளக்கிடக்கையை இவைகள் வெளியிடுகின்றன. ஆங்கிலேயர்களுக்கு சீக்கியரிடம் விவாதமில்லை, ஹிந்துக்களிடமும் விவாதமில்லை, முஸ்லிம்களிடத்தான் விவாதமிருந்து வருகிறது. சத்தியம்

தின் பக்தர்கள்மீது செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்வதற்காக பீரங்கிகள் தடையின்றி உபயோகிக்கப்படுகின்றன.

இவ் விருத்தாந்தத்தை இங்கு எடுத்துக் காண்பித்ததன் நோக்கம் இஸ்லாத்தின்மீதும் முஸ்லிம்கள் மீதும் கிறிஸ்துவ மதத்திற்கு முற்காலத்திலிருந்தே விரோதம் இருந்து வந்திருக்கிறதென்பதையும், முஸ்லிம்கள் ஒவ்வொரு இடத்திலும் நசுக்கப்பட்டே வந்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுவதற்கேயாம். ஆனால், முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களை எல்லாக் காலத்திலும் நன்கு நடத்தி வந்தனர் என்பதற்கு சரித்திரம் சாக்ஷியங் கூறுகிறது. இந்தியாவினுள் அடியெடுத்து வைப்பதற்கு கிறிஸ்துவர்களை அனுமதித்தவர்கள் முஸ்லிம்கள்தாம். அக்காலத்தில் இந்தியாவிலுள்ள வீர சூர ராஜபுத்திரர்கள் முஸ்லிம்களுக்குமுன் தலைவணங்கித் தங்களது வாளாயுதங்களை ஒப்புவித்துக்கொண்டிருந்தனர். அத் தருணத்திலேனும் எந்தக் கிறிஸ்துவருக்கேனும் உயிர்பொருள் ஆகியவைகளில் மிகவும் அற்பமான நஷ்டமேனும் ஏற்பட்டதா என்பதை எவரேனும் ருஜுப்பிக்க முடியுமா? முஸ்லிம்கள் அக்காலத்தில் பலஹீனர்களாக இருக்கவில்லை. அப்படி இருந்தும் சுதேசக்கிறிஸ்துவர்கள்மீது முஸ்லிம்கள் தங்கள் பலத்தை உபயோகித்தார்களா? சரித்திரத்தில் இதற்கு எவ்வித உதாரணத்தையும் காண்பிக்க முடியாது. ஆனால், கிறிஸ்துவர்களுக்கு அபயங்கொடுத்து, தஞ்சமளித்துக் காப்பாற்றியவர்களது சந்ததியினரை கிறிஸ்துவ மதம் நடத்திய முறையை விபரமாகக் கூறுவதாயின் டில்லியிலுள்ள முஅல்லா என்ற கோட்டையின் உயிரற்ற சுவறுகளிலிருந்து ரத்தம் வடிந்தோடவாரம்பித்துவிடும். இது இவ்வாறிருக்க மற்றொரு சம்பவத்தைக் கீழே கூறுவாம்.

ஸ்பேய்ன் அரசர்

மூன்றாவது அப்துர் ரஹ்மான் ஸ்பேய்ன் தேசத்துச் சிம்மாசனத்திலேறியபோது அவர் மிகவும் சிறு வயதினையுடையவரா யிருந்தார். ஆனால், மனோ தைரியமும், அஞ்சாநெஞ்சமும், உறுதியும், பலமான எண்ணமும் கொண்டவர். அவர் தேசத்தின் நிலைமையை உற்று நோக்கினார். கிறிஸ்துவர்கள் தேசத்தைச் சின்னாபின்னப்படுத்தி, முஸ்லிம் சிற்றரசர்களது பலஹீனத்தையும் அராஜகத்தையும் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொண்டு கிறிஸ்துவர்கள் பலமடைந்து கொண்டிருந்தனர். கிறிஸ்துவ கலகக்காரர்களுக்கு தலைவனான இப்னுஹப்ஸூன் இஸ்லாமிய பட்டாளங்களைத் திணர வைத்துக்கொண்டும், வியாபாரத் தாவளக்காரர்களிடம் வழிப்பறி செய்துகொண்டும், தீவட்டிக் கொள்ளை யடித்துக்கொண்டுமிருந்தான். அவன் மிகவும் வயோதிகனாக இருந்ததுடன் முஸ்லிம்களது கையிலகப்படுவதற்குமுன்பே இறந்துபோயினன். ஆகவே, இவனது மரணத்தினால் கிறிஸ்துவர்களது இடுப்புமுறிந்துபோயிற்று. ஆகவே, கிறிஸ்தவர்கள் நிர்ப்பந்தமாகத் தங்கள் வாளாயுதங்களைக் கீழே வைத்ததுடன், அவர்களிருந்துகொண்டிருந்த கோட்டையையும் திறந்து விட்டனர். சுல்த்தான் அப்துர் ரஹமான் வெற்றிக் கொடியுடன் கோட்டையினுள் பிரவேசித்து அல்லாஹுதஆலாவிற்கு நன்றியாக இரண்டு ரக்கஅத்துத் தொழுதுவிட்டு, வெகுகாலமாக இஸ்லாமிய அரசாங்கத்தைத் திணர வைத்துக்கொண்டும், நாட்டில் அமைதியின்மையை யுண்டாக்கிக்கொண்டும், அரசாங்கத்திற்கு எதிராகப் போட்டி ராஜ்யமேற்படுத்திக்கொண்டு மிருந்த கிறிஸ்துவர்களை எவ்வித விசாரணையுமில்லாமல் யாவருக்கும் பொது மன்னிப்பளித்துவிட்டார். அத்துடன் இருக்காமல் அராஜக காலத்தில் நஷ்டமடைந்த கிறிஸ்துவர்களுக்கு பொது பண்டிலிருந்து உதவியும் புரிந்தார். இவ்விதமாக முஸ்லிம்கள் செய்த உபகாரத்தைக் கிறிஸ்துவர்கள் போற்றினார்களா? அன்று, அன்று, அவர்கள் நன்றி மறந்தனர்.

நன்றி மறந்த கிறிஸ்துவர்

அப்துர் ரஹ்மான் விடா முயற்சியுள்ளவராக இருந்ததுடன் நிபுணருமாவார். ஆதலின் தமது கடற்படையை மிகவும் அபிவிருத்தி செய்தார். வெகு சொற்ப காலத்திற்குள் ஜிப்ரால்டர் ஜலசந்தியிலும், மத்தியதரைக் கடலிலும் சுயேச்சையுடன் அவரது கடற்படை ஆதிக்கம் செலுத்தி வந்தது. கடற்படையின் அநேகம் திட்டங்கள் அவரது உதவியினால் தயாராயின. சுல்தான் அவர்கள் கடற்படையைப் பலப்படுத்துவதில் கவனஞ் செலுத்திக்கொண்டிருந்த காலத்தில் கிறிஸ்துவர்கள் படையெடுத்து வந்து உந்துலுஸ் மாகாணத்தின் எல்லைக்குள் பிரவேசித்து விட்டனர். முஸ்லிம்கள்கிறிஸ்துவர்களைப் பலஹீனர்கள் என்று மதித்திருந்தனராதலின் அவர்களது கிளர்ச்சிகளை அலக்ஷியம் செய்

தனர். முஸ்லிம்களது இவ் வலக்ஷியத்தை கிறிஸ்துவர்கள் நன்கு உபயோகித்துக்கொண்டு தங்களது பலத்தை அதிகப்படுத்திக் கொண்டனர். யுத்தத்திற்கு மிகவும் தயாரானவுடன் திடீரென அறபியர்மீது பாய்ந்து தேசத்தின் பல பாகங்களையும் கைப்பற்றிக் கொண்டனர். இதனால் ஒவ்வொரு சண்டையிலும் முஸ்லிம்கள் பின் வாங்கும்படி நேர்ந்தது. அறபியரிடமிருந்த முக்கிய பிரதேசங்களெல்லாம் அவர்கள் கையைவிட்டுச்சென்றன. ஆகவே, கிறிஸ்துவர்களுக்கு ஆதிக்கமேற்படவே தங்களது முன்னோர்களது மத துவேஷ நெருப்பு கொளுந்துவிட் டெரிந்தது. முஸ்லிம்கள்மீது சொல்லொணாத் துன்பங்களைச் செய்ய வாரம்பித்தனர். ஏழை முஸ்லிம்களுக்கு அவர்கள் செய்த கொடுமைகளை நினைத்தாலும் இன்றுங்கூட ஈரல் குலை நடுக்குறும்.

வயோதிகர்கள், வேலை வெட்டிகள் செய்ய இயலாதவர்களை வாளுக்கிரையாக்கினர். முஸ்லிம் ஸ்திரீகளின் மார்புகளை சனியன்களின் நுனிகளுக்குக் குறியாக்கினர். பால்குடிக்கும் பாலகர்களை கிறிஸ்துவ காட்டுமிராண்டிகள் பிடுங்கிச் சென்று புசித்தனர். கிறிஸ்துவர்களது வாளுக்கிரையாகாமல் தப்பியவர்களை நிர்ப்பந்தப்படுத்திகிறிஸ்துவமதத்தில் சேர்த்தனர். சிலரை அடிமைகளாகவும் ஆக்கினர்.

ஒருகாலத்தில் முஸ்லிம்களும் கிறிஸ்துவர்கள் மீது ஆதிக்கங் கொண்டிருந்தனர். ஆனால் அது பொழுது ஒரு கிறிஸ்துவர்கூட முஸ்லிம்களால் நஷ்டமடையவில்லை. மாதாகோவில்களிலுள்ள ஒருகல்கூட அதன் இடத்தைவிட் டகலவில்லை. ஆனால், கிறிஸ்துவர்கள் ஆதிக்கங் கொண்டவுடன், புஷ்பத்தால் எறிந்ததற்குப் பதிலாகக் கல்லாலெறிந்தனர். ஜீவிய நீர் அளித்ததற்கு பதிலாக வாளால் பதிற் கூறினர்.

இஸ்லாத்தின் வெற்றி

இவன் அரசனான இரண்டாவது அர்தூனி என்பவன் மிகவும் கபடமும், மத வைராக்கியமுமுள்ளவன். அவன்முஸ்லிம்களது எல்லைப்புறத்தின்மீது மிக உக்கிரமாகப் படையெடுத்தான். இவர்களைத் தடுப்பதற்காக அப்துர்ரஹ்மான் என்பவரும் தமதுபடைகளை அனுப்பினர். இச்சொற்பப் படை கிறிஸ்துவர்களைப் படுதோல்வியடையச் செய்தது. கிறிஸ்துவப்படைகள் சிதறியோடின. ஆனால், அர்தூனி மிகவும் திறமையுள்ளவனாதலின் சிதறியோடிய தமது படையைச் சீர்திருத்தி யமைத்து மறுபடியும் அறபியர்களை நெருக்கடி செய்தான். முஸ்லிம்கள்மீது திடீரெனப் படையெடுத்ததால் அவர்கள் அதிகச்சேதமடைந்து பலஹீனமடைந்தனர். என்றாலும், அறபித் தளகர்த்தர் போர்க்களத்தில் வாளேந்தி நேருக்கு நேராக யுத்தம் செய்து பகைவர்களை மிக உக்கிரமாக எதிர்த்தாராயினும் இறுதியாக ஷஹீதாகி விட்டார். ஷஹீதான முஸ்லிம் அறபி தளகர்த்தரது தலையை அர்தூனி என்ற அக்கிறிஸ்துவன் பன்றித் தலையுடன் சேர்த்து தமது கோட்டைச்சுவரில் தொங்கவிட்டான். இறுதியான அப்துர் ரஹ்மான் ஹிஜ்ரீ 208-வது வருஷத்தில் வீர அமீர்களைச் சேர்த்துக்கொண்டு கிறிஸ்துவர்களை அடக்குவதற்காகப் படை யெடுத்தார். அர்தூனிக்கு உதவியாக அநேகம் கிறிஸ்துவ அரசர்கள் சேனைகளை சேர்த்துகொண்டு போர்க்களத்திற்கு வந்தனர். மிகப் பலமான போராட்டம் நிகழ்ந்தது. சுல்தான் அப்துர் ரஹ்மான் தமது விசேஷப் படையுடன் பகைவர்களது படைகளுக்குள் நுழைந்து தாக்கியதால் கிறிஸ்துவர்கள் சிதறி நாலுபக்கங்களிலும் ஓடினர்; முஸ்லிம்களுக்கு வெற்றி யேற்பட்டது.

இந்த யுத்தத்திற்குப் பிறகு கிறிஸ்துவர்கள் மிகவும் பலஹீனராயினர். என்றாலும், அவர்களது விஷம வேலைகளை மட்டிலும் விடவில்லை. ஆகவே, அவர்களுக்கிருந்த அற்ப சொற்ப பலத்தையும் அப்துர் ரஹ்மான் ஒழிக்க வேண்டியதாயிற்று. முஸ்லிம்களுக்கு எல்லாப் போர்முனையிலும் இறைவனருளால் வெற்றி கிடைத்தது. இதன் ஞாபகார்த்தமாக பிரஜைகளது வேண்டுகோளின்பேரில் அப்துர் ரஹ்மான் "அன்னாஸிறு லி தீனில்லாஹி" என்ற பட்டத்தைத் தரித்துக்கொண்டார்.

முஸ்லிம்களது சரித்திரத்தை கவனமாகப் படியுங்கள்! படித்தபின் முற்காலத்து முஸ்லிம்களது வீரத்தையும் உறுதியையும் சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் உங்களது நிலைமையை விட்டு எழுந்து உங்களைத் திருத்திக்கொள்ளும் பக்ஷத்தில் றஹ்மானது சக்தி உங்களுக்கு இன்றும் உதவிபுரிய தயாராக இருக்கிறது. ஆனால், நீங்கள்தான் முதலில் பிரயத்தனப்பட வேண்டும்.

இஸ்லாம் மதமும் பிற்போக்கான சமூகங்களும்

கிறிஸ்துவர்களும், ஹிந்துக்களிற் சிலரும் ஏழை மக்களுக்காக தர்ம ஆஸ்பத்திரிகள், சத்திரங்கள், தர்ம ஸ்தாபனங்கள் முதலியவைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். வேறு சமூகங்களிலும் இதற்கு உதாரணங்களில்லாமலில்லை. ஆனால், தங்களது நியாயமான மனித உரிமைகளை அடையாமலிருக்கிறவர்களுக்கு அவர்களது பாத்தியதைகளைத் திரும்பக் கொடுத்ததற்கு உதாரணங்களை நீங்கள் பார்க்கமுடியாது. இந்தியாவிலுள்ள பூர்வீகக் குடிகளாகிய ஆதி ஹிந்துக்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன்னர் ஆரியர்களை எதிர்த்து நிற்க முடியாமல் சூத்திரர்களாகவும், சண்டாளர்களாகவும், ஹரிஜனங்களாகவும், மிலேச்சர்களாகவும், அடிமைகளாகவும் ஆக்கப்பட்டனர். இன்றுங்கூட இவர்கள் ஏறக்குறைய அதே நிலைமையிற் றானிருக்கிறார்கள். ஆதி ஹிந்துக்கள் தங்களது தாழ்ந்த இழிய நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு இடமில்லாதவாறு அவர்களை அழுத்தி வைப்பதற்கான அநேக மேற்பாடுகளை அப்பொழுதே செய்து வைத்திருக்கிறார்கள். அவர்களைக் கல்வி யறிவற்றவர்களாகச்செய்து அவர்களது அறிவை வளரவொட்டாமல் தூர வைப்பதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் முன்னேற்றத்தையோ அபிவிருத்தியையோ பற்றி சிந்திக்கவும்கூட இயலாத நிலைமையில் இன்னும் வைத்திருக்கின்றனர். அவர்கள் தீண்டப்படவும், கண்ணால் பார்க்கப்படவும்கூடத் தகாதவர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றனர். சில இடங்களில் ரஸ்தாவிற்கூட நடக்க விடாமற் றடுக்கப்பட்டிருக்கின்றனர். நெய் முதலியவைகளை உபயோகிப்பதையும்கூட சில இடங்களில் தடுத்து வைத்திருக்கிறார்கள். தாழ்ந்த வகுப்பினரின் இந்நிலைமையைச் சீர்திருத்தி அவர்களுக்குச் சமஉரிமை அளிப்பதற்கான உணர்ச்சி இன்னமும் ஹிந்துக்களிடம் உண்டாகவில்லை. ஆரியர்கள் தங்களது சுயநலத்திற்காக, முஸ்லிம்களது உரிமைகளை அபகரிப்பதற்காக ஆதி ஹிந்துகளுக்குச் சில உரிமைகளைக் கொடுப்பதாகச் சொல்லிக்கொள்கின்றர். சுயநலங் கொண்ட ஹிந்துக்களின் சூழ்ச்சியை முஸ்லிம்கள் மிக வீரத்துடன் எதிர்ப்பதைக் கண்ட ஆதி ஹிந்துக்களும் தங்களது உரிமையை அடைவதற்கு முஸ்லிம்களுடன் உறவு கொள்வது தங்களுக்கு மிகவும் பிரயோஜனகரமாக இருக்கும் என்பதை உத்தேசித்து லண்டனில் "சிறுபான்மையினர் ஒப்பந்தம்" என்பதாக ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். இவ்வொப்பந்தம் உறுதியாகி முஸ்லிம்களும் ஆதி ஹிந்துக்களும் ஒன்று சேர்ந்துவிட்டால் பெரும்பான்யான சமூகம் என்ற அந்தஸ்து ஹிந்துகளுக்கு இல்லாமற்போகுமே என்றஞ்சி ஆதி ஹிந்துக்களுக்குச் சாதகம் செய்வதாகக் கூறி முஸ்லிம்களைவிட்டு அவர்களைப் பிரிப்பதற்கா சூழ்ச்சினை செய்கின்றனர். கல்வி அறிவு ஆகியவைகளில் மிகவும் பிற்போக்கடைந்திருக்கின்ற ஆதி ஹிந்துக்கள் ஹிந்துக்களை மிகவும் கௌரவமாக மதித்து வந்திருப்பதால் அவர்களது சொற்களை மெய்யென்று நம்பி அவர்களது வலையிச் சிக்கிக் கொண்டனர். கண்ணைத் துடைக்கும் தோரணையில் அவர்களுக்கு ஏதேதோ உபகாரம் செய்வதாகக் காங்கிரஸ்காரர்கள் கூறி அவர்களுக்கு "ஹரிஜனங்ககள்" என்ற பழைய பெயரைப் புதிதாக மறுபடியும் சூட்டி ஹரிஜன ஊழியம் என்ற பெயரால் ஹிந்துக்களுக்கு ஆக்கம் தேடி வருகின்றனர். ஆதிகாலத்தில் ஆதி ஹிந்துக்களுக்கு ஆரியர்கள் சூட்டிய "ஹரிஜனங்கள்" என்ற பெயரைத் திரும்பவும் சூட்டி இருப்பது ஒன்றே ஹிந்துக்களின் சுயநலத்தை வெட்ட வெளிச்சமாக்குகிறது. ஆங்காங்கு இரண்டொரு தேவஸ்தானங்களில் கோவில்களைத் திறந்துவிடுவதாகவும் பொம்மலாட்டம் செய்கின்றனர். இவையெல்லாம் உண்மையாகவே ஆதி ஹிந்துக்களுக்குச் சாதகம் செய்வனவன்று என்பது பின்னர் வெளியாகாமற் போகாது. இப்பொழுதே சில ஆதி ஹிந்துத் தலைவர்கள் உயர்தர ஹிந்துத் தலைவர்களது சூழ்ச்சிகளைப் பற்றிப் பொல்லாங்கு சொல்லி

வருவது உலகிற்குத் தெரியாத விஷய மன்று.

ஐரோப்பியர்களும் தங்களது வணக்க ஸ்தலங்களில் இந்தியப்பாதிரிமார்களுக்கு குருஸ்தானத்தை அளிப்பதில்லை. ஜாதி வித்தியாசம் இல்லை என்றும், அதனை ஒழிப்பதாகவும் சொல்லிக் கொள்கிற ஐரோப்பியர் நிற வித்தியாசங்களைப் பாராட்டுவதுடன், இந்தியர்களில் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுபவர்களுக்கு அவர்களது ஜாதி வித்தியாசத்தை ஊர்ஜிதப்படுத்தி பள்ளக் கிறிஸ்துவர், பறைய கிறிஸ்துவர், முதலிக் கிறிஸ்துவர், நாய்டு கிறிஸ்துவர், பிள்ளைக் கிறிஸ்துவர், பாப்பாரக் கிறிஸ்துவர் என்றெல்லாம் பாகுபாடு செய்து வைத்திருக்கின்றனர்.

இனி இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பற்றிக் கவனியுங்கள்: சங்கைவான்களான ஸஹாபிகளில் பிலால் ஹபஷி (ரலி) யும் ஒருவராவர். இவர் அடிமையாக இருந்தவர். ஒன்றுக்குப் பலமுறை விற்கிரயம் செய்யப்பட்டுப் பல குடும்பங்களிலும் ஊழியக்காரராகவும் அடிமையாகவுமிருந்தவர். கருநிறத்தவர். இவர் இஸ்லாம் மதத்தைத் தழுவி இஸ்லாத்தின் ஒளியை அடைந்த பின்னர் அறபியரிலுள்ள மிகவும் உன்னதத்திலும் உன்னதமான குடும்பஸ்தர்களும், அரசர்களும், சுல்தான்களும் அவரது கால்களைப் பிடிப்பதற்குத் தயங்கினரில்லை. உலகிலுள்ள இருபெரும் ஏகாதிபத்தியத்தைத் தோற்கடித்து இஸ்லாத்தின் வெற்றிக்கொடியை நிலைநாட்டிய மகாப் பெரிய வீரதீரரான கலீபா உமர் பாறூக் (ரலி.) அவர்கள் இதே பிலால் ஹபஷி (ரலி.) அவர்களை "எனது தலைவரே! சர்தாரே! என்று அழைக்கத் தயங்கினார்களில்லை.

ஹஜ்றத் உஸாமத்துப்னுஜைத் (ரலி.) என்பவரும் ஸஹாபிகளிலொருவர். இவரை "அடிமையின் மகன் அடிமை" என்று ஜாஹிலிய்யத்தான காலத்தில் அறபியர் அழைத்தனர். இவர்கள் இஸ்லாம் தோன்றிய பிறகு ஒரு பெரும் படைக்குச் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டார்கள். உலகை ஜெயித்து வாகை மாலை சூடிய ஹஜ்றத் உமர் பாறூக் (ரலி.) அவர்கள் இவரது படையில் ஒரு சாமான்ய சிப்பாயாகவே இருந்தார்கள்.

ஹஜ்றத் உமர் பாறூக் (ரலி.) அவர்கள் கலீபாவாக இருந்தபொழுது மதீனா முனவ்வராவிலிருந்து பைத்துல் முகத்தஸை நோக்கி அவர்கள் சென்றபோது அவர்களுடன் ஒரு ஒட்டகையும், ஒரு அடிமையும்தான் சென்றனர். கொஞ்சதூரம் பாறூக் (ரலி.) அவர்கள் அவ்வொட்டகையில் சவாரி செய்தால் அப்புறம் அவ்வடிமை அதன்மீது சவாராகிக் கொள்வார். பாறூக் (ரலி.) அவர்கள் கால் நடையாக அவ்வொட்டகையின் மூக்குக் கயிற்றைப் பிடித்து அதனை ஓட்டிக்கொண்டு செல்வார்கள். இவ்விதமாக அந்தப் பிரயாணம் முடிவு பெற்று பைத்துல் முகத்தஸ் நகரில் பிரவேசிக்கும் போது அவ்வடிமை ஒட்டகையின்மீது சவாரியாகவும், பாறூக் (ரலி.) அவர்கள் அவ்வொட்டகையின் மூக்குக் கயிற்றைப் பிடித்து அதனை ஓட்டிக்கொண்டு போபவராகவும் சென்றனர். இஸ்லாம் மதம், அடிமை என்பதற்கு யாது பொருள் என்பதை மேற்கண்ட உதாரணங்களில் கண்டவாறு வியாக்யானத்தைக் கிரியாம்சையிற் காட்டி இருக்கிறது. மிகவும் கேவலமும் பலஹீனமுமாக இருந்த ஒரு கூட்டத்தினருக்கு இவ்விதமான அந்தஸ்தை அளித்திருக்கிறது.

இஸ்லாம் மதம் தோன்றுவதற்குமுன் அறப் நாட்டில் அடிமையின் பிள்ளையாகவோ அடிமைப் பெண்ணின் பிள்ளையாகவோ இருப்பது மிகவும் கேவலமாகக் கருதப்பட்டு வந்தது. ஹஜ்றத் உமர் பாறூக் (ரலி.) அவர்கள் ஸியாதுப்னு ஸமிய்யா (றஹ்.) என்பவரை பாரசீகத்தின் வைசராயாக அதாவது ராஜப் பிரதிநிதியாக நியமித்தார்கள். இவ்வரசப் பிரதிநிதியின் தாயான ஸமிய்யா என்பவள் 'ஹாரிதுப்னுகிலாப் தக்பி' என்பவரின் அடிமைப் பெண்ணாயிருந்தனள். ஹஜ்றத் அமீர் முஆவியா (ரலி.) அவர்கள் கலீபாவாக இருந்தபோது அபுல் முஹாஜிர் என்ற அடிமையை 'கைருவான்' மாகாண கவர்னராகவும் சேனாதிபதியாகவும் நியமித்தார்கள். ஸ்பெயின் தேசத்தை ஜெயித்து வாகை மாலை சூடியவரும், தமது ஞாபகார்த்தம் என்றும் அழியாவண்ணம் ஜிப்ரால்டரை யுண்டாக்கியவருமான 'தாரிக்குப்னுஜியாத்' என்பவர் 'மூஸப்னுநுஸைர்' என்பவரிடம் அடிமையாக இருந்து உரிமை விடப்பட்டவராவார். அப்புறம் அவர் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டு ஸ்பெயின் தேசத்தைக் கைப்பற்றினர்.

பனு உமய்யா வம்சத்தினர் கிலாபத் பதவியை வகித்து ஆட்சி புரிந்த காலத்தில் அடிமைகளுக்கும், ஈரானியருக்கும், ஆப்பிரிக்க நீக்ரோவருக்கும் எவ்வித வித்தியாசமும் பாராட்டா

மல் யாவருக்கும் சமமாகவே சிவில், ராணுவ உத்தியோகப் பதவிகளும் தலைமை அந்தஸ்து களும் கொடுக்கப்பட்டு வந்தன. அறபிப் பட்டாளத்திலுள்ள எந்தப் போர் வீரரும், எங்கள் வகுப்பினரல்லாத மற்றவர்களுக்கு எங்களின் மீது ஆதிக்கம் செய்யும்படி தலைமை பதவி ஏன் கொடுத்தீர்கள் என்று ஆக்ஷேபிக்கவுமில்லை, கலகஞ் செய்யவுமில்லை. அபூமுஸ்லிம் குராஸானி என்று கீர்த்தி பெற்ற 'இப்ராஹிமுப்னு முஸ்லிம்' என்பவர் ஈரானி வம்சத்தினர்; இஸ்பஹானில் பிறந்தவர்; துணி தைக்கும் தொழில் புரிந்தவர். இஸ்லாமிய ஆட்சி காலத்தில் அவர் முன்னேற்றமடைந்து மிகவும் உன்னத பதவியை அடைந்தார். பனூ உமைய்யா வம்சத்தினரிடமிருந்த கிலாபத் பதவியையும் அரசாங்கத்தையும் அப்பாஸிய்யா வம்சத்தினருக்கு அளிக்கும் ஆற்றல் அவரிடமிருந்தது. அவர்தான் பனூ அப்பாஸ் வம்சத்தினருக்கு அரசுரிமையையும் கிலாபத் பதவியையும் அளித்தார். ஈரான், குராஸான் மாகாணங்களிலுள்ள அநேகம் ஜனங்கள் இஸ்லாமிய ஆட்சி காலத்தில் மந்திரிப் பதவிகள், சேனாதிபதிப் பதவிகள் முதலிய உயர்தர அந்தஸ்துகளை அடைந்திருந்தனர். அநேகம் சந்தர்ப்பங்களில் அவர்களிடம் அரசாங்கத்தின் அரியணை ஒப்புவிக்கப்பட்டது. பராமிக்கா என்ற பிரபல குடும்பம் ஆதியில் மஜூஸி குடும்பத்தில் சேர்ந்திருந்தது. கலீபா 'வாதிக் பில்லா' என்பவர் தன்னுடைய துருக்கி அடிமையான 'அஷ்னுஸ்' என்பவரிடம் அரசாங்கத்தின் சகல பொறுப்புகளையும் ஒப்புவித்திருந்தார். இது போல இன்னும் அப்பாஸிய்யா வம்சத்தினரின் ஆட்சி காலத்தில் அநேக துருக்கி அடிமைகளுக்கு மந்திரிப் பதவியும் சேனாதிபதிப் பதவியும் இருந்து கொண்டிருந்தன. தைலம் என்ற ஒரு செம்படவர் இஸ்லாமிய அரசாங்கத்தில் முன்னேற்றமடைந்து மந்திரிப்பதவியை அடைந்துடன் நில்லாமல் நீண்ட காலம் வரை முஸ்லிம்கள் மீது பூரண சுயேச்சையுடன் ஆட்சி புரிந்தும் வந்தார். வட ஆப்பிரிக்காவில் பர்பரி வகுப்பினர் மிகவும் காட்டு மிராண்டிகளாகவும், நாகரீக மற்றவர்களாகவும், குற்றத்தொழில் புரியும் பரம்பரையினராகவும் இருந்தனர். முஸ்லிம்கள் அவர்களது பிராந்தியத்தை ஜெயித்து, அவர்களை அடக்கித் தங்களது நாகரீகத்தை அவர்களிற் புகுத்தினர். வெகு சில வருஷங்களுக்குள் அவர்களைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களது சைனியங்களுக்குத் தளகர்த்தர்களாகவும், மாகாண கவர்னர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இஸ்லாத்தின் சத்திய போதனைகளின் பயனாக அவர்கள் இறுதியாகப் பெரும் பெரும் அரசாங்கங்களை அமைத்து, கல்வி கைத்தொழில் முதலியவைகளை ஆதரிப்பதில் உலகப் பிரசித்தி பெற்றனர்.

முஸ்லிம் அரசாங்கத்தினுடையவும் இஸ்லாம் மதத்தினுடையவும் செல்வாக்கின் பயனாக எகிப்து தேசத்தில் ஹிஜ்ரீ 650 லிருந்து 922 வரையில் அடிமைகள் ஒருவருக்குப்பின் ஒருவராக அரசுபுரிந்து வந்தார்கள். அதுவும் தேச மகா ஜனங்களால் அரசர்களெனத் தெரிந்தெடுக்கப்பட்டு வந்தனர். எகிப்து தேசத்திலிருந்த இந்த அரசாங்க காலத்திற்கு "அடிமைகளின் ஆட்சி காலம்" என்று பெயர். இவ்வடிமைகள் ஆட்சி புரிந்துகொண்டிருந்த காலத்தில்தான் 'ஜங்கிஸ்கான்' எகிப்தின்மீது பலமுறை படையெடுத்துச் சென்றும் ஒவ்வொரு முறையிலும் தோல்வியே யடைந்தார். இவர்களது ஆட்சி காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வம்சத்தினராகிய ஸாதாத்துகளும், ஷெய்குகளும், உலமாக்களும் அரசாங்க உதவியாளராக இருந்தனர். இவர்களது ஆட்சி காலததில் இஸ்லாம் வளர்ந்தோங்கிற்று.

இஸ்லாமிய அரசாங்க காலத்தில் குர்தி வகுப்பினரும் அரசுபுரியும் அந்தஸ்தை யடைந்தனர். கிறிஸ்துவ உலகம் முழுவதும் ஒன்று திரண்டு இஸ்லாத்தை இல்லா தொழிப்பதற்காகவும், பைத்துல் முகத்தஸைக் கைப்பற்றுவதற்காகவும் படையெடுத்து வந்ததையும், இப்படைக்கு பிரிட்டிஷ் அரசரான ரிச்சார்டு என்பவர் பிரதம சேனாதிபதியாக இருந்ததையும், ஐரோப்பாவினுடையவும் கிறிஸ்துவ உலகத்தினுடையவும் ஏகோபித்த எதிர்ப்பைத் தாங்கி நின்று அவர்களைத் தோற்கடித்து வாகைமாலை சூடி அழியாப் புகழ்பெற்ற சுல்த்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி பாத்திஹே பைத்துல்முகத்தஸ் (றஹ்) அவர்களையும், அதுபோழ்து நிகழ்ந்த சிலுவை யுத்தத்தையும் இன்றுகூட பொது ஜனங்களை அறியாமலில்லை. இந்த யுத்தத்தில் முஸ்லிம்களை இரக்ஷித்து இஸ்லாத்திற்கு வெற்றியை வழங்கி, பைத்துல் முகத்தஸை கிறிஸ்துவ ஆதிக்கத்திலிருந்து மீட்டிய சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபி (றஹ்.) அவர்கள் இதே குர்தி வகுப்பினர்தான்.

ஜங்கி, ஹபஷீ ஆகிய ஜனங்களை பூர்வீக காலந் தொடுத்தே ஜனங்கள் தாழ்ந்தவர்கள் என்றும், இழிவானவர்கள் என்றும் கருதிக் கீழ்ப்படுத்தி வைத்திருந்தனர். இஸ்லாம் மதத்தில் அவர்கள் சேர்ந்ததன் பொருட்டால் இராக், ஷாம், பாரசீகம், பஹ்ரைன் ஆகிய நாடுகளில் ஜங்கிகளின் அரசாங்கங்கள் ஏற்பட்டன. இந்தியாவிலும்கூட இஸ்லாமிய ஆட்சி இருந்த காலத்தில் முஸ்லிம் அரசர்களில் பத்துப் பேர் அடிமைகளாகவே இருந்தனர். இவர்களுக்கு அடிமை வம்சத்தினர் என்றும், இவர்களது ஆட்சிக்கு அடிமையரின் ஆட்சியென்றும் இந்திய சரித்திரம் சாக்ஷி பகர்ந்துகொண்டிருக்கிறது. சுல்தான் மஹ்மூது கஜ்னவீ இந்தியாவிலுள்ள ஒரு அம்பட்டனுக்குத் தனது சேனையின் அதிபதியாக இருக்கும் அந்தஸ்தையளித்ததுடன் "ராஜா" என்ற பட்டத்தையும் கொடுத்தார். சுல்தான் அலாவுத்தீன்கில்ஜீ அவர்களும் அவரது சந்ததியினரும் குஜராத்திலுள்ள தாழ்ந்த வகுப்பினரில் பலரை தளகர்த்தர்களாகவும், மந்திரிகளாகவும் நியமித்தனர். சுல்த்தான் முஹம்மது துக்லக்கும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த இதர அரசர்களும் இந்தியாவில் தீண்டாத வகுப்பினரில் சிலரை மாகாணாதிபதிகளாகவும், தளகர்த்தர்களாகவும் நியமித்தனர். சுல்தான் 'பைரோஸ் துக்லக்' என்பவர் தீண்டப்படாதவர்களுக்குக் கல்வி போதிக்கவும், அவர்களது பொருளாதார நிலைமையை உயர்த்தவும் பிரத்தியேகமான ஒரு தனி இலாக்காவை ஏற்படுத்தி ஏராளமான திரவியத்தையுஞ் செலவு செய்தார். இதன்பயனாக அவர்களிற் பலர் பெரும் உத்தியோகப் பதவிகளை வகித்தனர். சிலர் கவர்னர்களாகவும்கூட இருந்தனர். லோடி வம்சத்தினர் காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் மிக முன்னேற்றமடைந்தனர். சூத்திரர்களில் ஒருவரெனக் கருதப்பட்ட காயசித்தி என்ற வகுப்பினர் சுல்தான் ஸிக்கந்தர் லோடியின் காலத்தில் இந்தியாவிலேயே அதிகம் படித்த வகுப்பினராக இருந்தனர். இஸ்லாமிய அரசாங்கத்தின் காரியாலயங்களிலெல்லாம் காயசித்தி வகுப்பினரே ஊழியம் புரிந்தனர். இதுபோல ஹிந்து சாஸ்திரங்களின் சட்டப்படி கேவலஸ்தர்களாகவும் அடிமையராகவும் நடத்தப்பட்டுவந்த ஆயிரக்கணக்கான சூத்திரர்கள் முஸ்லிம்களின்பொருட்டால் முன்னேற்ற மடைவதற்கான சந்தர்ப்பங்களையடைந்து, தங்களையும் மனிதர்கள்தாம் என்று சொல்லிக்கொள்ளத் தக்கவரானார்கள்.

நாகரீகம் முதிர்ந்துள்ளதாகக் கூறப்படும் இந்தக் காலத்திலும்கூட முஸ்லிம்கள் தங்களது ஆட்சி காலத்தில் காண்பித்த இவ்வுதாரணங்களைப்போல் முஸ்லிமல்லாத அரசாங்கங்களெதுவும் காண்பித்துக்கொள்ள முடியாது. எனவே, இஸ்லாம் இவ்வுலகிற்குச் செய்த அரும்பெருந் தொண்டுகள் பலவற்றுள் அடிமைகளையும், தாழ்த்தப்பட்டவர்களையும் உயர்த்தி அவர்களுக்கு விடுதலையளித்து மனிதத்துவத்தில் அவர்களுக்கு சமபாத்திய உரிமையை அளித்ததும் ஒன்றாகும். இதர மதங்கள் இவ்விஷயத்தில் இஸ்லாத்திற்கு நிகராக நிற்கமுடியாது என்பதற்கு சரித்திரம் சான்று பகருகின்றது.

தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு உதவிபுரிவதாக ஜாதி ஹிந்துக்களில் ஒரு கோஷ்டியினர் பாவனை செய்தாலும் அந்தரங்கத்தில் அவர்கள் உண்மையாகவே அதனை விரும்புகிறார்கள் என்பதற்குரிய அறிகுறியெதையும் காணோம். தாழ்த்தப்பட்ட மக்கள் ஹிந்து மதத்திலேயே இருந்துகொண்டு, ஹிந்து சகோதரர்களது உதவியினாலேயே முன்னேற்றமடைந்து விடலாம் என்று நினைப்பது எவ்வளவு அறியாமை என்பதை அவர்களது சென்ற கால சரித்திரங்களிலும் காங்கிரஸ்காரர்கள் செய்துவரும் நடைமுறையிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். உண்மையான மனமாற்றம் ஹிந்து சமூகம் முழுவதற்குமே ஏற்படும் வரையில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கென்று ஹரிஜனங்களென்றும், வேறு ஜனங்களென்றும் விதம்விதமான பெயர்கள் கொடுக்கப்படும் காலம் வரையில் அவர்கள் முன்னேற்றமடைவதென்பது குதிரைக் கொம்பேயாகும்.

இஸ்லாம் மதம் என்பது குறிப்பிட்ட ஒரு தேசத்தாருக்கோ அல்லது ஜாதியாருக்கோ அல்லது வகுப்பாருக்கோ சொந்தமாக இல்லை. எவர் அதனைப் பின்பற்றி நடக்க விரும்பினாலும் எவ்விதத் தடையுமில்லை. ஆகவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களது முன்னேற்றத்தையும் உயர்வையும் உண்மையாகவே விரும்புவார்களாயின் இஸ்லாத்தைத் தழுவாமல் அவர்கள் தங்களது கோரிக்கையில் சித்திபெற முடியாது என்பதை உணருவார்களாக.

உலகின் மிக நூதனமான நகரம்

நியூயார்க் என்பது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள மிகப் பிரமாண்டமான நகரம். உலகில் லண்டனுக்கு அடுத்தபடியாக அதிக ஜனத்தொகையுள்ளது. முற்காலத்தில் பாபிலோன் நகரம் மிக நூதனமானதென்றும், அக்காலத்திலுள்ள நாகரீகத்திற்கு அதுமுன்மாதிரியானதென்றும் கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஆனால், நியூயார்க் நகரமானது நவ நாகரீகத்திற்கு மிகவும் நூதனமான முன் மாதிரியாக இருந்துகொண்டிருக்கிறது. இந் நகருக்குச் சென்றுவந்த ஒரு பிரஞ்சு சஞ்சாரி தாம் கண்ட நூதன விபரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார். அதன் சாராம்சம் வருமாறு:—

ஒருகாலத்தில் மார்க்கோ போலு என்பவர் சீனா தேசம் சென்று தமது தாய்நாடு திரும்பி வந்து அங்கு தாம் கண்ட அனுபவங்களை ஜனங்களிடம் கூறியபோது ஜனங்கள் அவரை எள்ளி நகையாடினர். நெருப்புப் பற்றவைக்க உபயோகப்படும்படியான கல் உலகில் இருக்குமா என்றும், காகிதங்களைத் தங்கள் தொழில் முதலியவைகளில் உபயோகிக்கும் தேசம் உலகில் இருக்கமுடியுமா என்றும் ஜனங்கள் கூறி, சக்கிமுக்கிக் கல்லையும், கடிதப் போக்குவரத்துச் செய்வதையும் அவர்கள் நம்பவே இல்லையாம். இக்காலத்திலும்கூட ஒரு சஞ்சாரி நியூயார்க் நகர்சென்றுவந்து அங்கு காணும் ஆச்சரியங்களனைத்தையும் நமது தேசத்தாரிடம் கூறினால் மார்க்கோபோலு என்பவரை ஜனங்கள் பரிகசித்ததுபோல பரிகசிப்பார்களோ என்று நினைக்கவேண்டியதிருக்கிறது. மார்க்கோபோலு இப்பொழுது உயிர்பெற்றெழும்பி அமெரிக்காவிற்கு விஜயம் செய்து, உலகின் மிக நூதனமான நகரமாகிய நியூயார்க்கில் தாம்கண்ட அனுபவங்களை விபரித்துக் கூற விரும்புவாராயின் அவரிடம் அவைகளை உள்ளபடி யுரைப்பதற்கான வார்த்தைகளிருக்க மாட்டா தென்பது திண்ணம். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மெஷின்கள் நியூயார்க் நகரில் செய்யும் காரியங்களைப் பார்த்தால் எவரும் பிரமிப்படையாமலிருக்க முடியாது. சில மெஷின்கள் ஒற்றர்களைப்போல் மனிதர்கள் பேசிக்கொள்ளும் பேச்சுக்களைக் கேட்டு, அவைகளை இரகசியமாக குறித்து வைத்துக் கொள்கின்றன. சில மெஷின்கள் உயிருள்ள மனிதர்களைப்போல் சமாச்சாரங்களைக் கேட்டு, அவைகளின்படி அச்செழுத்துக்களை கப்போஸிங் செய்து (அடுக்கி) அச்சடிக்கும் மெஷின்களிடம் கொடுக்கின்றன. சில மெஷின்கள் கொஞ்சம்கூடத் தவறில்லாமல் கூட்டல் கழித்தல் முதலிய கணக்குகளைச் செய்கின்றன. வீட்டுக் காரியங்களெல்லாம் மின்சார சக்தியின் (எலக்ட்ரிக்) மூலம் மிக வேகமாகச் செய்து கொள்ளப்படுகின்றன. இவ்விதமான நூதன மெஷின்களும், பிரமிப்பையுண்டாக்கத் தக்க கருவிகளும் நியூயார்க் நகரில் மிக ஏராளமாக ஒவ்வொரு அடியிலும் இருந்து வருகின்றன. பாவம் அந்த ஏழை மார்க்கோபோலு இந்த மெஷின்களுக்கெல்லாம் எவ்விதமான பெயரைச் சொல்ல முடியும்? இவ் விஷயங்களை நாம் நேரில் பார்ப்பது குறைவாக இருந்தாலும் கேள்வியின்மூலம் அடிக்கடி நாம் தெரிந்திருப்பதால் இவைகளைப்பார்த்து நமக்கு அதிக ஆச்சரியம் தோன்றுவதில்லை. என்றாலும், நம்மில் பலர் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நவீனக் கருவிகளின் உபயோகத்தையும் முக்கியாம்சத்தையும் இன்னும் உணரவில்லை. உண்மையில் நியூயார்க் நகரம் மனித சக்தியையும், திறமையையும், தற்கால முன்னேற்றத்தையும் எடுத்துக் காண்பிக்கும்படியான ஒரு பரிபூரண முன்மாதிரியாக இருந்து வருகிறது என்பதிற் சந்தேகமில்லை.

வானளாவிய மாளிகைகள்

நியூயார்க்கிலுள்ள வானளாவிய மாளிகைகள் இராக் காலங்களில் மிகவும் விசாலமான ஆகாயத்தின் மத்தியில் மிகப் பெரிய பிரகாசமான ஒரு துண்டைப்போல் பிரகாசித்துக் கொண்டு நமது கண்களுக்குப் பிரமிப்பை யுண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. இது பூர்வீக காலத்திலுள்ள கட்டுக் கதைகளைப்போலிருந்தாலும் அக்கதைகளில் கண்டவற்றை நாம்

பிரத்தியக்ஷத்தில் பார்க்கவில்லை. ஆனால், இதனை நாம் நமது கண்களுக்கெதிரில் பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொண் டிருக்கிறோம்.

நியூயார்க் நகரம் இரவு பகல் ஆகிய எல்லாச் சமயத்திலும் நமக்குப் பல காக்ஷிகளை அளித்துக்கொண்டிருக்கிறது. அதிலும், இதன் ஒவ்வொரு காக்ஷியும் நம்மைப் பரவசப்படுத்தி வசீகரிக்கக்கூடியதாக இருக்கிறது. இராத்திரி வேளையில் எந்தச் சமயத்திலேனும் இங்குள்ள உயர்ந்த ஒரு இடத்தின்மீ தேறிக்கொண்டு இந்நகரை நாம் பார்ப்போமாயின் இதன் கட்டிடங்கள் அழகிலும் வனப்பிலும் உயரத்திலும் ஒன்றையொன்று முந்திக் கொண்டிருப்பதை நாம் காணலாம்.

நியூயார்க் நகரிலுள்ள கட்டிடங்களுக்கு இப்பொழுதிருக்கிற உயரமும் அழகும் வனப்பும் போதாதென்று நாளுக்குநாள் அவைகளை அதிகப்படுத்துவதிலேயே முயற்சி நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அங்குள்ள இஞ்ஜினீர்கள் வானத்தைப் பார்க்கினும் உயரமான கட்டிடங்களைக் கட்டுவதற்குத் திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்களோ என்றுகூட தோன்றும். அவர்களது இம்முயற்சியைப் பைத்தியக்காரத்தனமென்று சொல்லலாமாயினும் அவர்கள் இவ்வாறு முயலுவதற்குக் காரணங்களில்லாமலில்லை. பூமியின் அதிக விலையும், குடிக்கூலி மிகைத்திருப்பதும், அமெரிக்காவின் விசேஷமான உணர்ச்சியும் கட்டிடங்கள் உயர்ந்துகொண்டே போவதற்குக் காரணங்களாகும் என்று சொல்லமுடியும்.

இற்றைக்கு 50 வருஷங்களுக்கு முன்னர் முதல்முதலாக நான்கடுக்கு மெத்தையுள்ள வீடு நியூயார்க்கில் கட்டப்பட்டபோது அக்கம் பக்கத்து வீடுகளில் குடியிருப்பவர்கள் இக்கட்டிடம் இடிந்து தங்கள் வீடுகளை அழுத்தி விடுமோ என்று எந்நேரமும் பயந்துகொண்டிருக்கக் கூடும். அநேக ஜனங்கள் இப்பயத்தால் தங்கள் வீடுகளில் குடியிருக்காமல் வெளியேறி விட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், இக்கட்டிடம் பலகாலும் தோன்றி புயற்காற்று முதலியவைகளுக்கு அசையாமல் வெற்றி பெற்றதை ஜனங்கள் நாளடைவில் தெரிந்துகொண்டதால் அவர்களுடைய அச்சம் நீங்கி, இப்பொழுது 50 வருஷங்களுக்குள்ளாக அங்கு இவ்வளவு பெரிய மாறுதலேற்பட்டுவிட்டது. இப்பொழுது எங்கு பார்த்தாலும் 50-60 அடுக்கு மெத்தைக் கட்டிடங்கள் இருந்துவருகின்றன. 85 அடுக்குள்ள மெத்தைக் கட்டிடங்களுக்குப் பிளான்கள் போடப்பட்டு வருகின்றன.

ஆள்தூக்கிக் கருவி

இக்கட்டிடங்களில் பிரமிக்கத்தக்க மற்றொரு காக்ஷி யென்னவென்றால் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆள் தூக்கிக் கருவியாகும். இவைகள் மனிதரைத் தரையிலிருந்து அதன்கடைசி மேல்மாடி வரை கண்மூடி முழிக்குமுன் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகின்றன. இக்கருவிகள் தினந்தோறும் மேலும் கீழுமாக ஏறி இறங்குவதைப் பூமியின் நீளத்தில் அளந்து பார்த்தால் தினசரி நியூ யார்க்கிலிருந்து சிகாக்கோ நகரம் வரையுள்ள தூரத்திற்குச் செல்கின்றனவென்று சொல்லப்படுகிறது.

குடியிருக்கும் ஜனங்கள்

மிக வுயரமான இக்கட்டிடங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை பேர் வாசஞ் செய்கின்றனர் என்பதைக் கேட்க வாசக நேயர்கள் ஆச்சரியப்படாமலிருக்க மாட்டார்கள். இக்கட்டிடங்கள் ஒவ்வொன்றிலும் 5 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர்கள் வரை ஏககாலத்தில் குடித்தனம் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதாவது ஒவ்வொரு கட்டிடத்தையும் ஒரு தனி நகரம் என்றே சொல்லவேண்டும். மேலும், இக்கட்டிடங்களுக்குள்ளிலேயே வாழ்க்கைக்கு வேண்டிய அவசியமான எல்லாச் சாமான்களையும் மிகச் சுலபமாக எந்நேரத்திலும் வாங்கிக்கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் ஏற்படுகிற ஒவ்வொரு தேவையையும் மிகவும் குறைவான நேரத்திற்குள் நிறைவேற்றிக்கொள்ளத் தகுந்த வசதிகளெல்லாம் இக்கட்டிடங்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கபபட்டிருக்கின்றன.

நகர வாசிகளின் அலுவல்கள்

இந்நகருக்குள்ள மகத்துவம் இங்குள்ள வானளாவிய கட்டிடங்களினால் மட்டுமில்லை. இந்நகருக்குள்ள மகத்துவமும் முக்கியாம்சமும் இங்குள்ள ஜனங்களின் நடமாட்டத்தாலும், தொழில் முதலிய அலுவல்களினாலுமேயாகும். இது இந்நகரிலுள்ள ஒவ்வொரு தெருவிலும்பிரத்தியக்ஷமாகக் காணப்படுகிறது. இங்குள்ள எந்த வஸ்துவும் ஒரு அளவில் நிலைத்திருப்பதில்லை. அவைகள் எந்நேரமும் கைமாறிக்கொண்டே இருக்கின்றன. இங்கு எந்த வஸ்துவையும் ஒரே நிலைமையில் இரண்டு நாட்கள் பார்க்கமுடியாது என்பது இங்குள்ள பழமொழி. இன்று ஒரு

ரஸ்தாவின் வழியாக நீங்கள் சென்றீர்களேல் புத்தப் புதிதான கட்டிடத்தை நீங்கள் எதிரில் பார்ப்பீர்கள். மறுநாள் அந்த வழியாகப் போகும்போது அது பாழான ஒரு கட்டிடமாக விழுந்துகிடப்பதை நீங்கள் காண்பீர்கள். பின்னர் ஒரு வாரத்திற்குப்பிறகு அங்கு சென்றால் அந்த இடத்தில் அநேகம் அடுக்கு மெத்தையுள்ள இரும்புக் கட்டிடம் நிற்பதை நீங்கள் பார்க்க முடியும்.

நகரின் ஜனத் தொகை

இவ்வளவு நடமாட்டமும், கட்டிடங்களின் உயர்வும் உண்மையில் அங்கு ஜனங்கள் அதிகமாக வசிக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறது. நியூயார்க்கிலுள்ள ஒரு டிவிஷனில் மாத்திரம் பாரிஸ் நகர் முழுவதிலும் வசிக்கின்ற ஜனங்கள் குடித்தனம் செய்கின்றனர். நியூயார்க்கிலும், அதனை சுற்று வட்டாரங்களிலும் கிட்டத்தட்ட 90 லக்ஷம் ஜனங்கள் வசிக்கின்றனர். இது அமெரிக்காவிலுள்ள மொத்தம் ஜனத்தொகையில் பன்னிரண்டில் ஒரு பாகம். பிரான்சு தேசத்தின் ஜனத் தொகையில் ஐந்திலொரு பாகம். இங்கிலாந்தின் ஜனத்தொகையில் நான்கிலொரு பாகம். ஜெர்மனியின் ஜனத்தொகையில் ஆறிலொரு பாகம். இவ்வளவு அதிகமான ஜனத் தொகைக்குத் தக்கவாறு எந்நேரமும் அங்கு ஜன நடமாட்டமிருந்துவருகிறது. இரவு பகல் என்ற வித்தியாசமில்லாமல் எந்நேரமும் இடைவிடாமல் தொழில் நடந்துகொண்டே இருக்கிறது.

தொழில் முறைகள்

அமெரிக்காவின் எல்லா மூலை முடுக்குகளிலுமிருந்து ஜனங்கள் நியூயார்க்கை நோக்கி வந்துகொண்டே இருக்கிறார்கள். அவர்களனைவருக்கும் ஏதேனும் ஒருவகையில் பிழைப்பிற்கு வழி ஏற்படாமலிருப்பதில்லை. வேலையில்லாதவர் என்பது இங்கில்லை. இந்நகரம் மிகவும் ஆழமான ஒரு பொதும்பு என்று சொல்லலாம். இங்கு வருகிற ஜனங்களனைவரையும் இது விழுங்கி விடுகிறது. நியூயார்க்கில் வசிக்கிற ஜனங்களில் பெரும்பாலர் இதர நகர வாசிகளேயாவர். பிழைப்புக்கு வழிதேடி இங்கு வந்தவர்கள். இவர்கள் ஒருவரோடொருவர் கலந்துகொள்வதால் இங்கு மனிதவர்க்கத்தில் புதுப்புது வகுப்புகளும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இவ்வித நிலைமையை வேறெங்கும் பார்க்கமுடியாது. அமெரிக்கா ஐக்கிய நாடுகள் முழுவதிலும் உபயோகிக்கப்படுகின்ற துணிகளில் ஐந்திலொரு பாகம் இந்நகரில் மட்டிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. தையல்காரர்களது கூட்டத்தைப் பார்த்தால் அவர்களுக்கென இங்கு ஒரு தனி நகரம் இருக்கிறதோவென தோன்றும்.

அச்சு வேலை

அச்சு வேலைகளை விரித்துக்கூற முடியாது. அது விபரிக்கும் எல்லைக்குப் புறம்பானது. அச்சுவேலைகள் ஒவ்வொன்றும் இங்கு மின்சார விசையினால் நடைபெறுகின்றன. மெஷின்கள் பத்திரிகைகளை அச்சடித்து, வெட்டி, மடித்து வெளியிற் றள்ளிவிடுகின்றன. அச்சுக்கூடங்கள் பொதுவாக நகருக்கு வெளியிலேயே இருந்தாலும், நகருக்குள் மாத்திரம் 2000-க்கு அதிகமான அச்சுக்கூடங்களிருக்கின்றன. இவைகளில் 75 ஆயிரம் பேர்கள் வேலை செய்கின்றனர். அமெரிக்காவிலிருந்து பிரதி வருஷமும் ஏறக்குறைய 11 கோடி புத்தகங்கள் பிரசுரமாகின்றன. அவைகளில் எழுபது சத விகிதம் நியூயார்க்கில் மட்டிலும் வெளியிடப்படுகின்றன. இப்புத்தகங்களை அச்சிட்டுப்பிரசுரிக்கும் வேலைகளில் மூன்று சத விகிதமுள்ள வேலைகளில் தான் மனிதர்கள் தங்களது சக்தியை உபயோகிக்கின்றனர். பாக்கி வேலைகளெல்லாம் மெஷின்களது மூலமாகவே நிகழுகின்றன.

டேலிபோன், டேலிகிராப், ரஸ்தாக்கள்

நியூயார்க் நகரில் விசாலமானதும் பிரபலமானதுமான தெருக்கள் 124. இவைகளில் மொத்தம் 27 தபாலாபிசுகளிருக்கின்றன. நகரத்தின் லோக்கல் தபால்கள் பூமிக்குள் ஓடும் ரயில் மார்க்கமாக அனுப்பப்படுகின்றன.

டெலிபோனின் பிரதமக் காரியாலயம் பார்க்கத் தகுந்தது. இங்குள்ள டெலிபோனில் ஒரு செக்கண்டுக்கு 100 பேர் விகிதம் நம்பர் சேர்க்கும்படி அழைக்கின்றனர். தபால் தந்திக் காரியாலயங்கள் தனி நகரங்களென்றே சொல்லவேண்டும். ஒரு பெரிய கம்பெனி டிபார்ட்மென்ட் ஸ்டோர்ஸ் என்ற பெயரால் இருக்கிறது. அங்கு தினந்தோறும் 25 ஆயிரம் பேர் சாமான் வாங்குகின்றனர். இக்கம்பெனியில் வாங்கப்படும் சாமான்கள் கம்பெனி முதலாளிகளிடமிருந்து அவர்களிடமுள்ள சொந்தப் பாகத்தில் சாமான் வாங்குபவர்

208351

கள் வீடு கொண்டு போய்ச் சேர்க்கப்படுகின்றன.

வால்ஸ்டிரிட்

ஒருவர் நியூயார்க் சென்று அங்குள்ள வால்ஸ்டிரிட் என்ற தெருவைப் பார்க்காமலிருந்து விடுவாராயின் அவர் நியூயார்க்கில் ஒன்றையும் பார்க்கவே இல்லை என்றுதான் அர்த்தம். வால்ஸ்டிரீட்தான் நியூயார்க்கின் பண பஜார். அங்கு லேவாதேவிக்காரர்களது கடைகளும் பாங்கிகளும் நிரம்ப இருக்கின்றன. மகா யுத்தத்திற்குப் பிறகு வெகுகாலம் வரை வால்ஸ்டிரீட்தான் உலகம் முழுவதிலும் பண ஆதிக்கம் செலுத்தி வந்தது. இப்பொழுதுங்கூட உலகத்தின் பெரிய பெரிய கடன்களைப்பற்றிய பிரசினைகள் இங்குதான் முடிவடைகின்றன. உலகிலுள்ள செலவாணியின் உயர்வு தாழ்வில் இந்தத் தெருவிற்கு நெருங்கிய சம்மந்தமும் முக்கியாம்சமு முண்டு. அமெரிக்காவிலுள்ள பிரபல பெடரல் ரிசர்வ் பாங்க் இங்குதானிருக்கிறது. உலகத்திலுள்ள மொத்தம் தங்கத்தில் பன்னிரண்டில் ஒரு பாகம் இந்த பாங்கியில் தான் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தங்கக் களஞ்சியம் பூமிக்குள் பாதாளத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதனைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் மிகவும் தடிப்பமான இரும்புச் சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இதனைத் திறப்பதையும் அடைப்பதையும்பற்றிய இரகசியம் சில மனிதருக்குமட்டிலும்தான் தெரியும். இந்தக் களஞ்சியத்தில் தங்கரியம் செய்து வைக்கப்பட்டிருக்கிற அளவிற்கு தங்கமும் வெள்ளியும் வேறெந்த இடத்திலும் இல்லை.

கட்டிடச் செலவு

நியூயார்க்கிலுள்ள வானளாவிய உயர்ந்த கட்டிடங்களைப்பற்றிக் கூறியபின் அவைகளைக் கட்டுவதற்காக ஏற்படும் செலவுகளைப்பற்றிக் கூறுவதும் மிக அவசியமாகும். அங்குள்ள மிகவும் உயரமான கட்டிடங்களில் குரீஸலர் என்பதும் ஒன்றி. அதனைக் கட்டுவதற்கு 15 மிலியன் டாலர்களுக்கு அதிகமாகச் செலவாயிற்று. (ஒரு மிலியன் என்பது பத்து லக்ஷம்). இக்கட்டிடத்தில் 11 ஆயிரம் பேர்கள் வசிக்கிறார்கள். இவர்களுக்குள்ள வேலைக்காரர்கள் 150 பேர்கள் தாம். இவர்களது அலுவல்களிற் பெரும்பாலானவை மெஷிகளின் மூலமாக நிகழ்கின்றன.

மின்ஹாட்டன் பாங்கிக்காக 65 மெத்தையுள்ள கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதற்கு 20 மிலியன் டாலர் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விதமான பெரும் பெரும் கட்டிடங்களைக் கட்டும் வேலை பெரிய பெரிய கம்பெனிகளுடைய ஒத்துழைப்பு கூட்டுறவின் பேரிலேயே நடைபெறுகின்றன. நகரவாசிகளும் இதில் பங்கெடுத்துக் கொள்ளமுடியும். ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளல், கூட்டுறவு செய்து கொள்ளல் ஆகியவைகள் மூலமாகவே இங்குள்ள பெருங்காரியங்களெல்லாம் அநேகமாக நடைபெறுகின்றன. அமெரிக்காவிலுள்ள இரும்புக் கம்பெனியில் ஒரு லக்ஷத்து 20 ஆயிரத்துக்கு அதிகமான பங்குதாரர்கள் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள்.

நியூ யார்க்கிலுள்ள நவீனங்களைப்பற்றி இவைகள் மேலேழுந்தவாரியாகக் கூறப்பட்ட நமூனாவாகும். இங்குள்ள ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனியே எழுதுவதாயின் அது மிகப் பெரும் புத்தகமாகிவிடும்.

துருக்கியில் புதிய ஊர்கள் தயாரிப்பு

துருக்கி கவர்ன்மெண்டார் ஸ்மர்னாவுக்குச் சமீபத்தில் சில ஊர்களை உற்பத்திசெய்ய உத்தேசித்திருக்கின்றனர். அவ்வூர்களில் சிலவிடுதிகளை ஏற்படுத்தி ஒவ்வொன்றிலும் மும்மூன்று அறைகள் அமைப்பதென்றும், அவ்வீட்டிற்குச் சமீபமாய் ஒரு கொட்டகை போடுவதென்றும், துணிகளைத் துவைத்து சுத்தஞ்செய்யும் மிஷன் ஒவ்வொரு வீட்டிலும் அமைப்பதென்றும் முடிவு செய்திருக்கின்றனர். மேலும் அந்தந்த ஊர்களுக்கேற்றாற்போல் பலவாறான சிறிய மிஷன்களை அமைத்து கைத்தொழிலை விர்த்தி செய்ய உத்தேசித்திருக்கின்றனர். துணி நெய்தல், சாயம் துவைத்தல், சலவை செய்யல் ஆகிய காரியங்கள் நடைபெறும். இதற்குவேண்டிய மிஷன் முழுதும் கவர்ன்மெண்டாரால் கிராம வாசிகளுக்கு பங்கின்மீது கொடுக்கப்படும். அவர்கள் இம்மிஷன்கள் மூலம் வேலை செய்து மிஷன்களுக்குள்ள கிரயத்தை தவணையாக கவர்ன்மெண்டுக்கு நிறைவேற்றி விடுவார்கள். அத்துடன் அக்கிராம வாசிகள் சிக்கனத்தைக் கைக்கொள்ளும் முறைகளும் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்து வரப்படும்.

இஸ்லாமிய உலகின் முக்கால நிலைமை

உலகம் இப்பொழுது ஒரு புதிய சகாப்தத்தில், புதிய ராஜ தந்திரத்தில், புதிய ராஜிய கிளர்ச்சிகளுடன் ஒரு புதிய ராஜபாட்டையில் சென்றுகொண்டிருக்கிறது. புரட்சிகளின் அறிகுறிகள் நாலு பக்கங்களிலும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. தற்போதைய மாறுதல்கள் சென்றகாலங்களிலுள்ள சாமான்யமான படங்களில் புதிய நிறத்தையுண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுது நாம் சென்ற காலத்தைவிட்டு முன்னேறி ஒரு இடத்திற்கு வந்து நிற்கிறோம். இங்கு மனிதவர்க்கத்திலுள்ள ஒவ்வொரு கூட்டமும் தனது எதிர்காலத்தின் நிலைமை எப்படி இருக்குமென்பதைப் பார்த்துக் கொள்ளமுடியும். முஸ்லிம்களாகிய நாம் அதிகமாகக் கவனிக்கத் தகுந்ததும், இன்றைய நிலைமையில் நாம் அதிகமாகச் சிந்திக்கவேண்டுமென்று நம்மை அழைப்பதுமான நிலைமை என்னவென்றால் ராஜியம், அரசியலமைப்பு என்ற மத்தியஸ்தலத்தில் நமக்குரிய இடம் எங்கே இருக்கிறது என்பதையும், இஸ்லாமிய உலகத்தின் இதர முக்கிய மத்தியஸ்தலங்களுடன் நாம் எவ்வளவு தூரத்திலிருக்கிறோம் என்பதையும், இஸ்லாமிய உலகிலுள்ள சுயேச்சையான நாடுகள் எவ்வளவு சக்தியும் வல்லமையும் பொருந்தியனவாக இருக்கின்றன? அவைகள் தனித்தனியாகவும், ஒன்று சேர்ந்தும் எத்தனை அந்தஸ்தை அடைந்திருக்கின்றன, ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமுள்ள அரசாங்கங்களின் சக்திக்கு முன்னிலையில் இவைகளின் அந்தஸ்து என்னவென்பதையும் கவனிக்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அரை நூற்றாண்டாக தங்களுடைய ராஜிய அந்தஸ்தை இழந்துவிட்டனர். நாம் நமது அரசாங்கமிருந்த காலத்தில் இந்தியா என்ற நெஞ்சில் இருதயத்தின் அந்தஸ்திலிருந்தோம். என்றாலும், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிலேற்பட்ட பின்னர் முதல் முதலாவதாக நமது ராஜீய அந்தஸ்திற்கிருந்த முக்கியாம்சம்தான் ஒழிந்தது. அப்புறம் நம்முடைய கல்விக்கிருந்த அந்தஸ்துக்கும் முடிவுவந்தது. அப்புறம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிற நமது பொருளாதார நிலைமையானது நமது ஒழுக்கத்தைப் பாதித்தது. இதன் பலனாக நாம் அடைந்திருக்கிற தற்போதையநிலைமை நம்மனைவருக்கும் பிரத்தியக்ஷமாகத் தெரிந்த விஷயமேயாகும். இருந்தபோதினும் நமது ராஜீய அந்தஸ்தை இஸ்லாமிய உலகின் ராஜீய நிலைமையென்னும் கண்ணாடியின் முன் நாம் கவனிக்கவேண்டும்.

இப்பிரசினை மிகவும் முக்கியமானதாக இருப்பதுபோல மிகவும் விவாதத்திற்கிடமானதாகவுமிருக்கின்றதென்பதிலும், இவ்விவாதத்தை ஒரே பிரதியில் பிரசுரிக்கவும் முடியாதென்பதிலும், இதனைப்பற்றிப் பிரயோஜனகரமான முடிவுக்குவர முடியாதென்பதிலும் சந்தேகமில்லை. பொதுவாகக் கூறுமிடத்து இஸ்லாமிய உலகத்தினுடையவும், இஸ்லாமிய இந்தியாவினுடையவும் ராஜிய நிலைமையைப்பற்றிக் கவனிக்கவேண்டியது அவசியமென்பதில் சந்தேகமில்லை.

சென்ற 50 வருஷ காலத்து ராஜிய நிலைமைகளனைத்தையும் எழுதாமல் விட்டுவிட்டு 25 வருஷ காலத்தைய நிகழ்ச்சிகளைமட்டிலும் நாம் கவனித்தாலும் இஸ்லாமிய உலகில் பற்பல நாடுகளும் அடைந்துள்ள மாறுதல்களிலிருந்து பயங்கரமான அதிர்ச்சிகள் என்று சொல்லத்தக்க சம்பவங்களின் காரணமாக இஸ்லாமிய உலகம் ஆடிப்போய் விட்டதென்பது தெரியவரும்.

முஸ்லிம்லீக் ஸ்தாபனமும் இஸ்லாமிய நாடுகளின் விழிப்பும்

பிரிட்டிஷ் அரசாங்கமேற்பட்டபின் சென்ற 1905-ம் வருஷத்தில்தான் இஸ்லாமிய இந்தியாவின் ராஜீய விவகாரங்களுக்கான முயற்சி முதல் முதலாக இந்தியாவில் செய்யப்பட்டது. அது சென்ற 1919 முதல் 1922 வரையில் தனது வாலிப

தசையை அடைந்து அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டது. துருக்கியர் திருப்போலி யுத்தத்திலும் பால்கன் யுத்தத்திலும் சம்மந்தப்பட்டு, தங்களது ஜீவியத்தின் அந்தஸ்துக்குரிய நற்சாக்ஷிப் பத்திரத்தை உலக அரசாங்கங்களிடமிருந்து அடைந்தனர். எகிப்து, ஷாம், பலஸ்தீனம், திருப்போலி, இராக், அறப், யமன் ஆகிய தேசங்கள் இக்காலத்தில்தான் ஹஜ்றத் ஷெய்கு அஹ்மது ஸன்னூஸீ, அல்லாமா ஜமாலுத்தீன் அப்கானி, அல்லாமா அப்துல் அஜீஸ் ஜாவிஷ் முதலிய தலைவர்களின் இடையறு உழைப்பாலும், முயற்சியாலும் நித்திரையை விட்டெழுந்தன. என்றாலும், திருப்போலி மட்டிலும்தான் கடைசி வரை தன்னுடைய ஸ்தானத்தில் உறுதியாக நின்றது. தனது ராஜீய சுயேச்சைக்காக இத்தாலியுடன் நீண்ட நாள் யுத்தம் செய்து 5 லக்ஷம் திருப்போலி வாலிபர்களது உதிரத்தைப் பூமியில் சிந்திற்று. இறுதியாக 1931-ம் ஆண்டில் திருப்போலியிலிருந்த கடைசி முஜாஹிதான ஸெய்யிது உமர் முக்தார் என்பவரது இருதயம் காயமடைந்தது. இவ்விளவல் துப்பாக்கிக் குண்டைத் தமது மார்பில் தாங்கி இவ்வுலகத்தின் அழகிய சூரியனை இனி என்றும் பார்க்காதவாறு கண்ணை மூடிக்கொண்டார். அவர் தமது இறுதி உபதேசமாக "நான் ஒரு கடமையை நிறைவேற்றுவதற்காக இருபது வருஷ காலமாக வாளேந்தி யுத்தம் புரிந்தேன்; அந்த கடமையைப் பார்க்கினும் பெரிய கடமை வேறொன்றுமில்லை" என்று கூறினர். இவ்விளம் வாலிபரது மார்பின்மீது இத்தாலியரது குண்டு ஊடுருவிப் பாய்ந்தது. அதே தினத்திலிருந்து திருப்போலியின் உயிர் நாடியும் விழுந்துவிட்டது.

அறபியரின் சிதைவு

சென்ற 1914-ம் வருஷத்தைய மகா யுத்தம் துருக்கி ராணுவ சக்தியை நான்குபுறங்களிலும் நிர்ப்பந்தப்படுத்தி டார்டனல்ஸ் ஜல சந்தியில் கொண்டுவந்து நிறுத்திவிட்டது. துருக்கியரின் பால் பொல்லாங்கு சொல்லிக்கொண்டும், வருத்தப்பட்டுக்கொண்டுமிருந்த அறபியர் கர்னல் லாரன்ஸின் சதியாலோசனைகளுக்குக் கீழில் மக்கத்து ஷரீபான ஹுஸைனின் ஆதிக்கம் என்ற பெயரால் வசியப்படுத்தப்பட்டனர். தங்களது தேசத்தைத் துருக்கியர் சீர்திருத்தி கல்வி, நாகரீகம், ஒழுக்கம் ஆகியவைகளில் முன்னேற்றுவிக்கவில்லை என்பது அறபியர் கூறும் குறை. ஆனால், ஷரீப் ஹுஸைனின் கனவில் அறபி ஐக்கியம் தோன்றிக்கொண்டிருந்தது. இக்கனவின் தாற்பரியத்தை அறபியர் பிரித்தானியரிடம் கேட்டனர். இதன் பயனாக, ஒற்றுமை, ஐக்கியம், சுதந்திரம் என்ற பெயரால் அவர்களுக்கு அடிமைத்தனமும் பிளவும் ஏற்படுத்தப்பட்டது. ஷரீப் ஹுஸைனின் கண்களிலிருந்த திரை அகன்றதாயினும், இராக், ஷாம், லப்னான், டிரான்ஸ்ஜார்டோனியா, ஹிஜாஸ் ஆகிய பிராந்தியங்கள் பங்கு வைக்கப்பட்டுவிட்டன. இப்பிரிவினை, தந்திரக்காரர்களும் திறமையாளர்களுமான நேச தேசத்தாரால் முடிவுசெய்யப்பட்ட திட்டத்தின் கீழில் அமுலுக்கு வந்தது. ஆகவே, ஷரீப் ஹுஸைனின் முதலாவது ஆக்ஷேபனை வீணாகி விட்டது. இறுதியாக ராஜியத்தைத் துறந்து 'ஸைப்பிரஸ்' தீவில் தமது மரணத்தின் கடைசிவேளையை எதிர்பார்த்துக்கொண் டிருக்கும்படியாக அனுப்பப்பட்டார்.

ஷரீப் ஹுஸைனின் மரணத்திற்குப் பிறகும் கூட அறப் நாட்டில் பிரிட்டனின் ராஜதந்திரம் தழைத்துத் தானிருந்தது. ஆனால், ஒரு பக்கல் இமாம் யமனின் பலமான உணர்ச்சி வேலை செய்துகொண்டிருந்தது. மற்றொரு பக்கத்தில் சுல்தான் அப்துல் அஜீஜிப்னு ஸுஊதின் படைகள் மலிக்அலியின் ஆசனத்தின் ஸ்தானத்தில் தங்களது சுல்தானின் ஆசனத்தை ஏற்படுத்தி விட்டனர்.

இராக் சுயேச்சை

ஈரான் தேசத்தில் பிரிட்டனின் ராஜீய ஆதிக்கமும் செல்வாக்கும் ஒழிந்தது. பொது வுடமைப் புரட்சிக்காரர்கள் ருஷியாவினுடையவும் பிரிட்டனுடையவும் ஒற்றுமையை ஒழித்து ஈரானின் பூரண சுயேச்சையை அதன் உண்மையான உருவத்தில் சமர்ப்பித்தனர். ஆதலின் பிரிட்டிஷாரின் சகல நன்மைகளும் ஈரான் தேசத்தைவிட்டு பாரசீக வளை குடாவின்பால் திரும்பின. பிரிட்டிஷார் அறபி ஷெய்குமார்களுக்குத் தலைமை வகிக்கும் அந்தஸ்தையடைந்தபின் ஈரானுக்குப் பக்கத்தில் ஒரு புதிய இஸ்லாமிய அரசாங்கத்தை ஏற்படுத்தி, பாரசீக வளைகுடாவில் பிரிட்டனின் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பிரயோஜனமுள்ளதாக அதனை ஏற்படுத்தவேண்டும் என்று பிரிட்டன் உணர்ந்தது. பிரிட்டிஷ் நிபுணர்கள் நம்மைப் பார்க்கினும் தங்களது ராஜிய அநுகூலங்களை நன்கு அறிந்திருந்தனர். ஆகவே,

அவ்வனுகூலங்களை உத்தேசித்து இராக் தேசத்திற்கு சுயேச்சை யளிக்கப்பட்டது. மேலும் இராக் தேசம் சுயேச்சை யடைந்ததுடன் சர்வதேச சங்கத்திலும் ஒரு மெம்பராகி விட்டது. இந்த சுயேச்சை மிகத் துரிதமாக நிகழ்ந்தது. இச்சுயேச்சை யேற்படுவதற்கு இரண்டுவருஷங்களுக்கு முன்னர்தான் பிரிட்டனுக்கும் இராக்குக்கு மிடையில் ஒரு ஒப்பந்தம் நிகழ்ந்தது. இவ் வொப்பந்தம் சட்டப்படி 20 வருஷகாலம் வரை அமுலில் இருக்க வேண்டும். ஆனல் இச்சுயேச்சையின் பயனுக இவ்வொப்பந்தம் பஸராவிற்குப் பக்கத்தில் சமுத்திரத்தில் முழுகடிக்கப்பட்டுவிட்டது.

ஷாம்

இவ்வாறு இராக் சுயேச்சை யடைந்ததற்கு 5 வருஷங்களுக்குப்பின்னர் ஷாம் தேசத்திற்கு பெயருக்கு மாத்திரமேனும் சுயேச்சை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரான்சுக்கு ஏற்பட்டது. சென்ற 1936-ல் ஷாம் தேசம் சுயேச்சையடைந்தது. ஆனுல், இச்சிறிய தேசம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. இன்னும் அதிகமாகப் பாகம் போட இடமிருந்திருக்குமாயின் அவ்விதமே பங்கு போட்டிருப்பார்கள். 1. ஷாம். இதற்கு திமிஷ்கு தலைநகர். இப்பாகத்தில் சுன்னீ முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். 2. பிலாதே அலவிய்யா. இங்கு அலவிஷீயாக்களதிகமாக இருக்கின்றனர். 3. லப்னுன். இதற்கு பேரூத் தலைநகர். இங்கு கிறிஸ்துவர்கள் அதிகமாக இருக்கிறர்கள். எவ்வாருயினும், ஷாம் தேசத்திற்குக்கிடைத்த இச்சுயேச்சையின்மூலம் அது பலம் பெற்றுவிடும் என்பதும், சில வருஷ காலங்களுக்குள் அது தன்னைப் பலப்படுத்திக்கொண்டு பூரண சுயேச்சையின் கடைசி எல்லையை அடைந்துவிடும் என்பதும் நிச்சயம்.

பலஸ்தீனும் டிரான்ஸ் ஜார்டோனியாவும்

சென்ற 16 வருஷங்களுக்குமுன்னர் துருக்கியருக்கு விரோதமாகச் செய்த பாவத்திற்கும், கலகத்திற்கும் உரிய பிராயச் சித்தத்தை பாலஸ்தீனமும் டிரான்ஸ்ஜார்டோனியாவும் இன்னம் நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் என்னவெனில், பிரிட்டன் பாலஸ்தீனத்திலுள்ள ஹீபா விலிருந்து ஹிஜாஸிலுள்ள அக்பர் வரையில் ஒருகரை மார்க்கத்தை ஏற்படுத்த விரும்புகிறது. சூயஸ் கால்வாய் அடைக்கப்பட்டுவிட்டால் இந்தப் பாதை உபயோகப்பட வேண்டுமென்பது பிரிட்டனின் நோக்கம். மத்தியதரைக் கடலிலிருந்து செங்கடல் வரை யுத்தத் தளவாடங்களும், படைகளும், உணவுப் பொருள்களும் கொண்டுபோவதற்காக இந்தப் பாதை உபயோகமாக இருப்பது மட்டுமன்னியில் இராக், துருக்கி, ஈரான் ஆகிய தேசங்களுக்குப் பீதியையுண்டாக்கவும், முன்னேற்ற மடைந்துகொண்டு வருகிற ஹிஜாஸ், யமன் ஆகிய தேசங்களை அடக்கி வைக்கவும், பாரசீக வளைகுடாவின் மார்க்கமாக இந்தியாவின் எல்லைப்புறங்களில் ஆதிக்கமேற்படுத்தவும் முடியும் என்று கருதுகின்றனர். சிங்கப்பூர் கடற்படைத் தளத்தைப் பூர்த்தி செய்த பின்னர் ஹீபா, அக்பா ஆகிய கடற்படைத் தளங்களையும் புதிதாகப் பலப்படுத்த வேண்டும் என்பது பிரிட்டனின் நோக்கம். இத்திட்டத்திற்காக கோடிக்கணக்கான திரவியங்கள் செலவுசெய்யப்படும் என்பதிற் சந்தேகமில்லை. ஆனுல், சுயேச்சை என்ற நேத்திரமானது பாலஸ்தீனத்தைச்சமீபத்திலும், டிரான்ஸ் ஜார்டோனியாவை கொஞ்சம் தூரத்திலும் பார்த்துக்கொண்டிருக்கிறது என்பது நமதபிப்பிராயம்.

இஸ்லாமிய நாடுகளின் ஐக்கியம்

சுயேச்சையுள்ள இஸ்லாமிய நாடுகளில் ராஜீய பொருளாதார பிரச்சினைகளை அஸ்திவாரமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டு வருகிற ஐக்கியம் என்ற இயக்கமானது பிரிட்டனும் இத்தாலியும் பிணங்கிக்கொண்டிருப்பதன் காரணமாக புதிய திட்டத்தின்பேரில் முன்னேற்றமடையும். பிரிட்டன் தனது நன்மையை யுத்தேசித்து அநேக இடங்களில் இஸ்லாமிய ராஜீய உரிமையை ஆக்ஷேபிக்க முடியும். ஆனுலும், அதற்கேற்பட்டிருக்கிற சங்கடமான நிலைமையானது சமீப கிழ்ப் பிரதேசத்திலும், மத்திய ஆசியாவிலுமுள்ள இஸ்லாமிய அரசாங்கத்தின் உதவியைப் பெறவேண்டிய தவசியமாக இருக்கிறது. ஆதலால், ஆக்ஷேபனை செய்வதற்கிடமில்லாமற் போய்விட்டது.

முஸ்தபா கமால்பாஷா

துருக்கியின் தந்தை என்று விளங்கும் முஸ்தபா கமால்பாஷா "மத சம்பந்தமான முறையில் இஸ்லாமிய ஒற்றுமை என்பது விளங்கிக் கொள்ள முடியாத ஒரு யோசனை" என்பதா சென்ற 1934-ம் வருஷத்தில் ஓர் அறிக்கையிட்டாரெனினும் இது புதிய முறையில் அமலில்

வந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. துருக்கிகமால், ஈரானியரிஜா, ஆப்கானிய பைஜ் முஹம்மது, இராக்கிய காஜீ ஆகியவர்களது முயற்சியால் சர்வதேச சங்கத்தின் திட்டப்படி ஆசியாநாட்டுச் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கான முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இம் முயற்சி பயனடையும் பக்ஷத்தில் துருக்கி, ஈரான், அப்கானிஸ்தான், இராக் ஆகிய நான்கு நாடுகளையும் ஒன்றுபடுத்தி விடும். இந்நான்கு நாடுகளுடைய இவ்வொற்றுமைக்கு "இத்தி ஹாதே அஃலா" என்ற பெயர் ஏற்படும். இவ்வொற்றுமையை யனுசரித்து இராக், ஹிஜாஸ், யமன் ஆகிய மூன்று நாடுகளுக்கும் ஒரு ஒற்றுமை ஏற்படும். இதற்கு 'இத்திஹாதே அத்னா' என்று பெயர். எகிப்து, பலஸ்தீன், ஷாம், டிரான்ஸ்ஜார்டோனியா ஆகிய நான்கு நாடுகளும் இவ்வொற்றுமையில் சேர்ந்துகொள்வதற்காக அதன் தலைவாயல் திறந்து வைக்கப்பட்டிருக்கும். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இம் முயற்சியிலிருந்து இஸ்லாமிய உலகிலுள்ள அடிமை நாடுகளாகிய இஸ்லாமிய இந்தியா, திருப்போலி, எடன் பிரதேசங்கள், பஹ்றைன், அல்ஜீரியா, மொராக்கோ ஆகிய தேசங்களிலும் புத்துணர்ச்சி ஏற்படும். ஆனால், இவ்வுணர்ச்சி ராஜிய விஷயங்கள் மூலமாக அல்லாமல் தன்மையையும், நாகரீகத்தையும் பொறுத்து ஏற்படும்.

துருக்கி கிலாபத் பதவியை உதரித் தள்ளி, குடியரசுத் திட்டத்தை ஏற்படுத்தியபோது உதுமானிய ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கும் கோஷ்டியொன்று துருக்கியிலிருந்து கொண்டிருந்தது. கிலாபத் பதவி சம்மந்தமாய் துருக்கிக்கு ஏற்பட்டுள்ள தலைமைப் பதவியை விட்டுவிடக் கூடாது என்பது அந்தக் கோஷ்டியின் விருப்பமாக இருந்தது. ஆனால், கமாலிய துருக்கர்கள் இவ்விருப்பத்தை ஆழமான கப்றுக்குள் போட்டுப் புதைத்து விட்டனர். இஸ்லாமிய உலகத்தில் மிகவும் கண்டிப்பான ஊழியம் செய்பவரான மதத் தலைவர் ஒருவர், துருக்கித் தலைவரான முஸ்தபா கமால் பாஷாவிற்கு "முஜத்திதே கிலாபத்" அதாவது கிலாபத்தைப் புதுப்பித்தவர் என்ற பட்டம் கொடுத்தார். இதனால் துருக்கி வாலிபர்களது உணர்ச்சியைக் கிளப்பி விட்டதாயிற்று. கடைசி ஆலோசனை என்ற முறையில் அத்தலைவர் காஜீ கமால் பாஷாவினிடம் "உதுமானிய ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்துவது துருக்கியின் உள்நாட்டு நன்மைக்கு விரோதமாக இருக்கிறது என்றால், குடியரசுத் தலைவர் என்ற ஹோதாவிலாகிலும் கிலாபத்துப் பதவியை ஒப்புக்கொள்ளவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். துருக்கித் தலைவர் இவ்வேண்டுகோளின்பலத்தை மிகவும் உணர்ந்தாராயினும் 1924-ல் இது சம்பந்தமாகத் தனது அபிப்பிராயத்தை மிகவும் தெளிவான வார்த்தைகளில் சமர்ப்பித்தார். அதாவது :—"கிலாபத் பிரச்சினை அமல் நடத்த முடியாததாக இருக்கிறது; இஸ்லாமிய உலகம் கிலாபத்தின் மகத்தான அந்தஸ்தை மதிக்கவில்லை என்பது எங்களுக்கு அனுபவத்தில் தெரிந்துவிட்டது; இந்திய முஸ்லிம்கள் சிலுவைக் கொடியைக் கையிலேந்திக்கொண்டு கிலாபத் தலைவாசல் வரை வந்தனர்; அறபியர்கள் கிலாபத் என்னும் அங்கியை துண்டுதுண்டாகக் கிழித்துவிட்டனர்; அப்கானிஸ்தான் குறிப்பிட்ட உதவி கொடுக்க முடியாததாக இருந்தது; சுயேச்சையான கோத்திரக்காரர்கள் கலீபத்துல் முஸ்லிமீன்களது கட்டளைக்கு எவ்வித மதிப்பும் கொடுக்கவில்லை; இதற்கு நேர்மாறாக, கிலாபத் பதவியை துருக்கி ஏற்றுக்கொண்டதன் காரணமாக ஐரோப்பா முழுவதினுடையவும் எதிர்ப்பைத் தாங்கவேண்டிய நிர்ப்பந்தம் துருக்கிக்கு ஏற்பட்டது. ஆதலால், துருக்கி கிலாபத் பீடத்தை ஸ்தாபிப்பதை கிரியாம்சையில் ஆதரிக்க முடியாது. ஆனால், சர்வதேச நிலைமை கொந்தளிப்பிலிருந்து அடங்கி, சுயேச்சையுள்ள இஸ்லாமிய அரசாங்கங்களுக்குச் சக்தி ஏற்படுத்துவதன்பேரில் சட்டப்படியான உடன்படிக்கைகளின் மூலமாக ஐக்கிய இஸ்லாமிய பெடரேஷன் ஏற்படுத்தலாம். அதன் தலைவருக்கு கலீபாவிற்கிருந்த செல்வாக்கும் ஆதிக்கமும் போன்றதிருக்க வேண்டும்" என்பதாக அறிக்கையிட்டார்.

இவ்வறிக்கை பிரசுரமான சில காலங்களுக்குப் பின்னர் இவ்விதமான இஸ்லாமிய சர்வதேச சங்கம் ஏற்படுத்தும் முயற்சி உருக்கொண்டு வருவதை நாம் காண்கின்றோம். துருக்கி, ஈரான், அப்கானிஸ்தான், இராக், ஹிஜாஸ், யமன் ஆகியவைகளின் இவ்வொற்றுமை உறுதியாகிவிட்டால் அதன் செல்வாக்கானது இஸ்லாமிய உலகம் முழுவதையும் தனது மடியில் இழுத்துக்கொள்ள முடியும் என்று நம்புகிறோம்.

"பாருன்"

இஸ்லாமிய அரசாங்கங்களில் முஸ்லி மல்லாதாருக்களிக்கப்பட்டுள்ள உரிமைகள்

ஜாதித்துவேஷமும், மத வைராக்கியமும், குறுகிய மனப்பான்மையுமுள்ள முஸ்லிம் அல்லாதாரிற் பலர், முஸ்லிம் அரசர்கள் முஸ்லிம் அல்லாதாரை நேர்மையாக நடத்தவில்லை; முஸ்லிமல்லாதாருக்கு எப்பொழுதும் அனியாய அட்டூழியங்களைச் செய்து வந்தார்கள் என்றெல்லாம் குறை கூறிக்கொண்டே வந்திருக்கின்றனர். ஆனால், இஸ்லாமிய அரசாங்கம் ஆரம்ப முதற்கொண்டே சகலஜாதியாருக்கும் மத சமூகக் காரியங்களில் பூரண சுயேச்சையளித்து வந்திருக்கிறதென்பதற்கும், எந்த மனிதனும் அவனது மத நம்பிக்கை, அனுஷ்டானங்களின் காரணமாகக் கஷ்டப்படுத்தப்படவில்லை யென்பதற்கும் சரித்திரங்கள் சாக்ஷி கூறுகின்றன.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின்னர் முதல் முதலாவதாக கலீபா பதவியை அடைந்த ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்திக் (ரலி.), அவர்களுக்குப்பின் உமர் பாறூக் (ரலி.), உதுமான் கனீ (ரலி.), அலீமுர்த்தஜா (ரலி.) ஆகிய கலிபாக்களும் "முஸ்லிம் அல்லாதார் அனைவரும் மத சம்பிராயத்தைப் பொறுத்தமட்டில் முற்றிலும் சுயேச்சையுள்ளவர்களாகவே இருப்பார்கள், அவர்களது வணக்கத்திலும், ஆசாரங்களிலும் எவ்விதத்திலும் தலையிடமாட்டோம்" என்பதாக மிகவும் தெளிவாக அறிக்கை செய்தனர்.

ஐரோப்பாவிலுள்ள பிரபல சரித்திர ஆசிரியரான மிஸ்டர் ஸி. எச். ஷாஹ்மார்ஷ் என்பவர் தம்முடைய "எலக்சர் ஆன் இஸ்லாம்" என்ற நூலில் பின்வருமாறு எழுதி இருக்கிறார்:—

"கிலாபத்தேராஷிதாவின் ஆக்ஷி காலத்திலும் அதற்குப் பின்னரும் முஸ்லிம் அல்லாதாரின் எல்லா வணக்க ஸ்தலங்களும், தொழில் ஸ்தாபனங்களும், சமூக ஆசாரங்களும் எவ்விதமான கட்டுத்திட்டமுமில்லாமல் சுதந்தரமாக விடப்பட்டிருந்தன." என்பதே.

"இஸ்லாமியச் சட்டத்தில் சகல மதத்தினருக்கும், சமூகத்தினருக்கும் அவரவர் மதக்கிரியைகளில் பூரண சுயேச்சையளிக்கப்பட்டிருந்தது; விக்கிரக ஆராதனைக்காரர், கில்தானியர், இஸ்ராயீலியர், கிறிஸ்துவர் ஆகிய யாவரும் கலந்து வாழ்ந்து வந்தனர்; எல்லோரும் தங்கள் மதாசாரங்களில் சுயேச்சையுடனிருந்து வந்தனர்" என்பதாக "லைட் ஆப் தி இஸ்லாம்" என்ற நூலில் அதன் ஆசிரியர் கூறி இருக்கிறார்.

மோகலாய ஆட்சி காலம்

மொகலாய மன்னர்கள் இந்தியாவை ஆட்சி புரிந்த காலத்தில் அரசாங்க ஊழியங்களிலும், உத்யோகப் பதவிகளிலும் மதம், ஜாதி வித்யாசம் பாராட்டியதில்லை என்பதற்கும், இவ்விஷயங்களில் ஒவ்வொருவருக்கும் சம உரிமை இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது என்பதற்கும் சரித்திரம் சாக்ஷி பகருகின்றது.

"மொகலாய மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் ஒவ்வொரு சமூகத்திற்கும் மதம், ஆசாரம் ஆகியவைகளில் சுயேச்சையளிக்கப்பட்டிருந்தது; ஹிந்து அரசாங்கங்களுடன் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்திலும் முஸ்லிம்களது நீதி, நேர்மை ஆகியவைகளில் எவ்வித வித்தியாசமு மேற்படவில்லை; ஹிந்துக்களது வணக்க ஸ்தலங்கள், அவர்களது செல்வம், பூஸ்திதி, அவர்களது ஆசாரங்கள் ஆகியவைகளுக்கு அரசாங்கத்தின் தலையீட்டால் எவ்வித ஹானியுமேற்படாது அவைகளுக்குப் பூரண சுயேச்சை இருந்து வந்தது" என்பதாக பிரபல ஹிந்து ஆசிரியரான கோதாரிலால் என்பவர் தம்முடைய 'குல்ஷனேஹிந்து' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

துருக்கி

துருக்கி அரசாங்கத்திலும் ஒவ்வொரு சமூகத்தாரும் தங்களது வணக்கங்கள், நாகரீகம், வாழ்க்கை முறை, ஆசாரம் முதலியவைகளில் பூரணமான சுயேச்சை யளிக்கப்பட்டிருக்கி

றுர்கள். துருக்கியின் தலைநகராக இருந்த ஸ்தம்பூலிலுள்ள ஒரு கத்தோலிக் அறிஞர் மிஸ்டர் ஜோஸப் என்பவர் "துருக்கிச் சிப்பாய்கள் நம்முடைய மதத் தலைவர்களுக்கு மரியாதை செய்கின்றனர்; நம்முடைய ஆசாரங்களிலோ, மதக் கிரியைகளிலோ எவரேனும் இடைஞ்சல் விளைவிக்க முயற்சிப்பாராயின் முஸ்லிம்கள் தங்களை அபாயத்திற்குட்படுத்தி நம்மைக் காப்பாற்றுவதுடன் நம்முடைய மத உணர்ச்சியை மதித்து நடந்து கொள்கின்றனர்" என்று எழுதி இருக்கிறுர்.

ஈரான்

ஈரான் அரசாங்கத்திலும் கிறிஸ்துவர்கள், பாரசீகர்கள், இஸ்ராயீலிகள் முதலிய எல்லா சமூகத்தினருக்கும் மதம், ஆசாரம் ஆகியவைகளில் பூரண சுயேச்சையளிக்கப்பட்டிருக்கிறது. எந்த மனிதரும் அவருடைய மதக் கொள்கைகளுக்காக கஷ்டப்படுத்தப்படுவதில்லை. அஃலா ஹஜ்றத் மாஃலிமை தங்கிய ரிஜாஷாஹ் பஹ்லவி அவர்கள் சிம்மாசனமேறியவுடன் "முஸ்லிம் அல்லாதார் அனைவரும் மத விஷயத்தில் பூரண சுயேச்சையளிக்கப்பட்டிருக்கின்றனர்; அவர்களது வணக்கங்களிலும் ஆசாரங்களிலும் எவ்விதத்திலும் தலையிடப்படமாட்டாது" என்பதாக அறிக்கை வெளியிட்டார்.

இன்று ஈரானில் முஸ்லிம் அல்லாதாரின் வணக்க ஸ்தலங்களும், சமூகாசாரங்களும், சமூக வாழ்க்கை முறைகளும் எவ்விதக் கட்டுத்திட்டமுமின்றி சுயேச்சையாயிருந்து வருகின்றன. ஈரானிய ஆட்சியில் சகல மதத்தினருக்கும் அவரவருடைய வாழ்க்கை முறைகளில் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனல், அவர்கள் பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது என்பதுமட்டும் நிபந்தனை என்பதாக பைரோஜ் ஷாஹ் என்பவர் தமது 'ஸபர்நாமயே ஈரான்' என்ற கிரந்தத்தில் எழுதி இருக்கிறுர்.

அப்கானிஸ்தான்

அப்கானிஸ்தானத்திலும் ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அவரவர் மதாசாரம், நாகரீகம் ஆகியவைகளில் பூரண சுயேச்சையளிக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஹிந்து, இஸ்ராயீலி, கிறிஸ்துவர் முதலிய எல்லா சமூகத்தினரும் கலந்து வசித்து வருகின்றனர். ஒவ்வொருவரும் சுயேச்சையாகவே இருக்கின்றனர். மதம், கலை, உடை, ஆசாரம், பழக்க வழக்கம் ஆகிய எக்காரியத்திலும் அரசாங்கத்தின் சார்பாக எவ்விதத் தலையீடும் கிடையாது.

இராக்

இராக் அரசாங்கத்திலும் ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் வணக்கங்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவைகளில் சுதந்திரமளிக்கப்பட்டிருக்கின்றனர். எவரையும் அவருடைய மத நம்பிக்கையின் காரணமாக எவ்வித கஷ்டத்திற்கும் உட்படுத்துவதில்லை. அங்கு கிறிஸ்துவர்களும் யூதரும் ஏராளமாக வசிக்கின்றனர். அவர்களது கௌரவம், செல்வம், தனிப்பட்ட சுதந்திரம், வாக்குச் சுதந்திரம் ஆகியவைகளில் அரசாங்கத்தினர் எவ்விதத்திலும் தலையிடுவதில்லை.

எகிப்து

எகிப்திலும் சகல மதத்தினருக்கும் அவர்களது மதக்கிரியைகள், பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள் ஆகியவைகளில் பூரணசுதந்திரமளிக்கப்பட்டிருக்கிறது. எகிப்தில் ஆயிரக்கணக்கான கிப்தியர் வசிக்கின்றனர். அவர்களது கௌரவம், செல்வம், தனிப்பட்ட உரிமை, வாக்குச் சுதந்திரம் ஆகியவைகளில் அரசாங்கம் தலையிடுவதில்லை. மந்திரிச் சபையில் தங்களுக்கு ஒரு ஸ்தானம் வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டபோது அவர்களுக்கு இரண்டு ஸ்தானங்கள் அளிப்பதாக வாக்குறுதி செய்யப்பட்டது. அரசாங்க உத்தியோகப் பதவிகளிலும் கூட அவர்களுக்குரிய பங்கு தாராளமாக அளிக்கப்பட்டிருக்கிறது.

ஹைதராபாத்

இந்தியாவிலுள்ள ஹைதராபாத் சமஸ்தானத்திலும் சட்டப்படி சர்க்கார் உத்தியோகப் பதவிக்கு ஜாதி மத வித்தியாசம் பாராட்டப்படுவதில்லை. ஒவ்வொரு சமூகத்திற்கும் சம உரிமை இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் எல்லா காரியாலயங்களிலும் முஸ்லிம் முஸ்லிமல்லாதார் என்ற வித்தியாசம் பாராட்டாமல் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவ்வரசாங்கம் ஏற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை முஸ்லிம் அல்லாதாருக்குப் பொறுப்பு வாய்ந்த பெரிய உத்தியோகப் பதவிகள் அளிக்கப்பட்டே வந்திருக்கின்றன. அவர்கள் முன்னேற்றமடைவதற்காக அதிக சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டு வந்

திருக்கின்றன. அரசாங்கச் சட்டத்தில் ஒவ்வொரு மதத்தையும், சமூகத்தையும் சேர்ந்த ஜனங்களுக்கு அவர்களுடைய மதாசார விஷயங்களில் பூரண சுயேச்சையளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்கள் பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது. இவ்வுண்மைகளை மறுப்பதானது நீதியைக் கொலை செய்வதற்கு ஒப்பாகவே இருக்கும்.

இஸ்லாமிய தாராள நோக்கம்

ஸர் பி. ஸி. ராய் வங்காள மாணவர் கான்பரன்சில் ஒரு முக்கிய பிரசங்கம் செய்த போழ்து அடியிற் கண்ட விபரத்தை அறிவித்துள்ளார்:—

"வங்காளம் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இருப்பதைப் பார்க்கினும் முஸ்லிம் அரசாங்கத்தின் கீழ் அதிகமான செல்வத்துடனிருந்தது. ஔரங்கஜேப் மத வைராக்கியமுள்ளவரென்றும், ஹிந்துக்களை வெறுப்பவரென்றும், பிரிட்டிஷ் சரித்திரக்காரர்கள் கூறி இருக்கின்றனர். ராஜீய வியவகாரங்களுக்காக பொய்யான சமாச்சாரத்தைக் கட்டிவிடுவது மிகவும் வெட்கக்கேடான காரியம். ஔரங்கஜேப் வங்காள ஹிந்துக்களிடம் 'ஜிஸ்யா' தலைவரி வாங்கினார் என்று எவரேனும் ருஜூப்பிக்க முடியுமா? என்று நான் எல்லாச் சரித்திராசிரியர்களையும் வினவுகின்றேன். ஔரங்கஜேப் வங்காள ஹிந்துக்களுக்கு பெரும் பெரும் ஜாகீர்களை வழங்கி இருக்கிறார். அவர்களைப் பெரிய ஜமீந்தார்களாக ஆக்கி இருக்கிறார். அவர் ஹிந்துக்களை கவர்னராகவும், கவர்னர் ஜெனரலாகவும் நியமித்தார். வைசிராயாகவும் கமாண்டர்-இன் சீபாகவும்கூடநியமித்திருக்கிறார். இதுமட்டுமா? கலப்பற்ற இஸ்லாமிய மாகாணமாகிய அப்கானிஸ்தானத்தில் ராஜபுத்திர வகுப்பைச் சேர்ந்த ஒரு ஹிந்துவைத்தான் தமது வைசிராயாக நியமித்தார். ஆகவே, அவர் காட்டிய தாராள சிந்தையிலும் பெருந் தன்மையிலும் ஆயிரத்திலொன்றைக்கூட பிரிட்டிஷ் அரசாங்கத்தில் காண்பிக்க முடியுமா?"

முஸ்லிம் அரசாங்கங்கள் இவ்வாறு நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்துகொண்டிருக்கும் போது இந்தியாவிலுள்ள ஹிந்துக்களில் சிலர் முஸ்லிம்கள்மீது வீண் பழியைக்கூறி சமூக ஒற்றுமை ஏற்படாவண்ணம் துவேஷத்தையும் வெறுப்பையும் உண்டாக்கி வருகின்றனர். இந்தியாவின் சிற்சில இடங்களில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக இருந்துவரும் குக்கிராமங்களில் மதவைராக்கியம் கொண்ட சீக்கியராலும் ஆரியராலும் ஏற்படும் அவஸ்தை சொல்லத் தரமன்று. முன்னம் ஒருசமயம் "மஃரிப்" தொழுகைக்காக பாங்குசொன்ன குற்றத்திற்காக முஅத்தினும், தொழச் சென்றிருந்த இரண்டு முஸ்லிம்களும் சீக்கியரால் கொலைசெய்யப்பட்டனர் என்றும், திரு குர்ஆனைக் காலையில் தினந்தோறும் ஓதிவந்த குற்றத்திற்கு முஸ்லிம் வேலைக்காரனை அவனது மத துவேஷம் பூண்ட எஜமான் உதைத்துத் துன்புறுத்தி திரு குர்ஆனைக் கிழித்துக் காலால் மிதித்தான் என்றும், நாய்க்கும், கழுதைக்கும், அபூபக்ர், உமர், முஹம்மத் என்று நாமம் வைத்து அழைத்ததாகவும் இன்னும் பலப்பலவாறு பத்திரிகைகள் மூலம் சமாச்சாரங்கள் எட்டிக்கொண்டே இருக்கின்றன. சீக்கியர்கள் ஆட்சிபுரிந்த காலத்தில் பஞ்சாபிலுள்ள அனேகம் மஸ்ஜிதுகள் சீக்கியரால் அக்கிரமிக்கப்பட்டதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. சுமார் 2 வருஷங்களுக்குமுன் மத்திய இந்தியாவிலுள்ள தார் என்ற ஹிந்து சமஸ்தானத்தில் சுல்தான்மஹ்மூது கில்ஜீ அவர்களால் கட்டப்பட்ட ஜாமிஆ மஸ்ஜிது அச்சமஸ்தான மராட்டிய திவானின் கட்டளைப்படிராஜா போஜ் பாடசாலையாக மாற்றப்பட்டதும், அதில் பாடசாலையின் ஸைன்போர்டு தொங்கவிடப்பட்டதும், முஸ்லிம்களது கிளர்ச்சியின்பேரில் அது பூட்டப்பட்டதும், இதனைப்பற்றி நாடெங்கும் கிளர்ச்சி நடந்ததும் தெரியாத விஷயமன்று. தற்கால இந்தியாவில் சமூக ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின், பிரிட்டிஷ் இந்தியாவிலும் சரி சுதேச ஸமஸ்தானங்களிலும் சரி ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் பூரண மத சுதந்திரமும் பாதுகாப்பும் இல்லாதவரை ஒற்றுமை ஏற்படப் போவதில்லை. முஸ்லிம்கள் தங்கள் உயிர், பொருள், மனைவி, மக்கள் ஆகிய எல்லாவற்றைப் பார்க்கினும் மதத்தை அதிகமாக நேசிப்பவர்களாதலின் முஸ்லிம் அல்லாதாரிற் சிலர் செய்யும் துவேஷமான காரியங்களைக் கண்டஞ்சி தங்கள் மத சுதந்திரத்தை விட்டுக் கொடுத்துவிடுவார்கள் என்று நினைப்பது வீண்எண்ணமாகும் என்பதை அவர்கள் உணருவார்களாக.

முஸ்லிம் பெண் கல்வியும் கல்வி சீர்திருத்தமும்

பெண் கல்வியைப்பற்றிப் போதுமான அளவிற்கு விவாதம் செய்யப்பட்டிருக்கிறதாயினும், சிற்சில விஷயங்களைப்பற்றி மாத்திரம் சுருக்கமாக இங்கு கூற விரும்புகின்றனம். இவைகளை அறிஞர்களும் மற்றும் ஏனையோர்களும் கவனிப்பார்களாக. பெண்களுக்குக் கல்வி போதிக்கும் விஷயத்தில் அவர்களுக்கு இயற்கையாகத் தேவையுள்ளதையும், அவர்களுக்குப் பொருத்தமானதையும்பற்றி நாம் சரியாக கவனிப்பதேயில்லை. இப்படி இருப்பது அஸ்திவாரமான ஒரு தவறாகும். தற்போதைய கல்வி முறையானது வாலிபர்களை எவ்வித வீணான கானல் வாழ்க்கையின் பக்கல் இழுத்துச் செல்கிறதென்பது நமக்குப் பிரத்தியக்ஷமாகத் தெரிந்த விஷயம். ஆகவே, அதே முறையில் நமது பெண்களையும் நாம் அனுப்பி, "பரீக்ஷிக்கப்பட்டதையே திரும்ப பரீக்ஷித்தல் அறியாமையாகும்" என்ற பழமொழிக்கேற்ப நாம் நடந்துகொள்ளக் கூடாது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலையைப் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்பதை முதுகுக்கப்புறம் போட்டுவிட்டு, கைத்தொழில் கல்வியைப்பற்றிக் கொஞ்சமும் சிரத்தை கொள்ளாமல் மேனாட்டைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி மனித சமூகத்திலுள்ள ஆண் பெண் என்ற முரண்பட்ட இரண்டு ஜாதியை வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு துறையிலும் சரிசமமாக நிறுத்திவைக்க நாம் முயலுகின்றோம். உலக நிகழ்ச்சிகள் நமக்கும் படிப்பினையை அளிக்கக் கூடுமாயின், "முந்தின அனுபவத்தை அனுசரித்துப் புதிய காரியத்தைப் புரிகையில் அதனால் விளையும் இறுதிப் பயனையும் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, நமது கல்வியானது எவர் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதோ அவர்களைப்பற்றியும் அதாவது உபாத்தியாயர்களைப்பற்றியும் உங்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இவர்கள் ஒருகாலத்தில் மிகவும் கண்ணியமாக மதிக்கப்பட்டும், நம்மால் கொண்டாடப்பட்டும் வந்தார்கள். இன்று அவர்கள் கேட்பாரில்லாத நிலைமையி லிருக்கின்றனர். உபாத்தியாயர்களை நாம் ஆத்மார்த்தத் தந்தை என்ற கௌரவ சிறப்புப் பெயரால் அழைத்துவந்தோம். அவர்களுக்கு மரியாதை செய்வதையும் கண்ணியப்படுத்துவதையும் ஒவ்வொரு சமயமும் நாம் மறக்காம லனுஷ்டித்து வந்தோம். அவர்கள் நம்மைக் கண்டித்துத் தண்டித்துப் பயமுறுத்துவதை மாதா பிதாக்கள் நம்மை அன்புடன் அரவணிப்பதைப் பார்க்கினும் சிறந்ததாக மதித்து வந்தோம். அவர்களும் பெருந் தன்மையுடன் நமக்கு பட்சத்தோடு கல்வியையும் பயிற்சியையும் அளித்துவந்தனர். இன்றைய நிலைமை அவ்வாறில்லை. உபாத்தியாயர்களுக்கு கௌரவம் கொடுக்கவேண்டுமென்ற விஷயம் ஒரு பக்கமிருக்கட்டும், மாணாக்கர்களும்கூட அவர்களை ஒரு கூலிக்காரன் என்றே மதித்து வருகின்றனர். இதனால் விளைந்த பயனென்னவெனில், உபாத்தியாயர்களுக்கு மாணவர்களிடம் அன்பில்லை; தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஒரு திட்டப்படி மட்டிலும் சொல்லிக் கொடுத்துவிட்டு மாணவர்களது ஒழுக்கங்களைப் பயிற்சிசெய்விக்கும் காரியத்தில் அசிரத்தையாயிருந்து விடுகின்றனர். இதனால்தான் நமது வாலிபர்கள் ஒழுக்கத்தில் வீழ்ச்சி யடைந்தவர்களாக இருந்துவருகின்றனர். "நல்லோர்களிடமிருந்து நல்லது வெளியாகும்" என்பதை உண்மையாகவே நம்புவீர்களாயின் கல்வியைச் சீர்திருத்துவதற்கு முதலில் உபாத்தியாயர்களில் நல்ல அம்சங்களுண்டாகும்படி முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். இது நம் சமூகத்தவர் உபாத்தியாயர்களுக்கு கௌரவத்தைக் கொடுத்து, உயர்ந்த அந்தஸ்தை அளித்து அவர்களில் சுயமதிப்பு ஏற்படுவதுடன், அவர்கள் தங்களுடைய முக்கியமான கடமைகளை நிறைவேற்றுவதற்கான நல்லுணர்ச்சியை அவர்களில் உண்டாக்குவதுமாகும். இன்றுங்கூட நமது சமூகத்திற்கு நன்மையோ அல்லது தீமையோ செய்வதாயின் உபாத்தியாயர்களைப் பார்க்கினும் வேறு யாரும் அதிகமாகச் செய்யமுடியாது என்பது உண்மை. ஆகவே, உங்களது மக்களின் நன்மையின்பொருட்டு அவர்களுக்குக் கற்பிக்கும்

உபாத்தியாயர்களை மதியுங்கள்! கண்ணியப்படுத்துங்கள்! அவர்களது நிலைமையை மேன்மையுள்ளதாகச் செய்யுங்கள்! அவர்கள் க்ஷேமமாக இருப்பதில்தான் நமது வரும் காலத்தைய க்ஷேமம் அடங்கி இருக்கிறது. ஆகவே, முஸ்லிம் கல்வியைச் சீர்திருத்துவதற்கு முன் உபாத்தியாயர்களைத் திருத்துவது மிகவும் அவசியமாகும்.

ஆசியா ஐரோப்பா கற்றுக்கொண்டதென்னே?

கி. பி. 651-ம் ஆண்டுவரை ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள நாடுகளிற் பெரும்பாலானவை சத்தியக்கொள்கை, நற்கிரியை என்ற பிரகாசங்களைவிட்டு நீங்கி இருள்களுக்குள் தத்தளித்துக் கொண்டிருந்தன வென்பதை நியாயவாதிகளான சரித்திரக்காரர்கள் ஒரு முகமாய்க்கூறி இருக்கின்றனர். இத்தேசங்களில் காட்டுமிராண்டித்தனமான செய்கைகள் தாண்டவமாடின. சுயநலம்என்பது ஒவ்வொருவரையும் ஆட்டிவைத்துக்கொண்டிருந்தது. அமைதியின்மை எங்கும் நிலவி இருந்தது. மனிதத்தன்மைஎன்பது இல்லாதொழிந்திருந்தது.

இவ்வித நிலைமையில் இஸ்லாமிய அரசாங்கம் சில பிரதிநிதிகளை ஆசியா ஐரோப்பா ஆகிய கண்டங்களிலுள்ள சில பாகங்களுக்கு அனுப்பி வைத்தது. அவர்கள் தங்களிடமுள்ள சில விசேஷத் தன்மைகளுடன் அத்தேசங்களுக்குச் சென்றனர். அவர்கள் தங்களது விடா முயற்சியினுலும், குன்ருு ஊக்கத்தினுலும் உழைத்ததன் பயனுக சத்தியக் கொள்கை, நற்கிரியை ஆகியவைகளின் மூலமாக உலகில் ஒரு பெரும் மாறுதலை உண்டாக்கினர்.

இம் மாறுதலைப்பற்றிய விபரத்தைக் குறித்து, யூத ஆசிரியர் ஒருவர் எழுதி இருப்பது வருமாறு:—

"கி. பி. ஏழாவது நூற்ருண்டின் ஆரம்பத்தில் ஆசியா ஐரோப்பா ஆகிய கண்டங்களிலுள்ள பெரும்பாலான தேசங்கள் கடுமையான இருளினுள் இருந்தன; மதம், ஒழுக்கம் ஆகியவைகள் சம்பந்தமான விதிவிலக்குகள் குழம்பி இருந்தன; மனிதத்துவம் என்பது மறைந்து போயிருந்தது. இந்நிலைமையில் இஸ்லாமியப் பிரசாரகர்களிற் சிலர் ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமுள்ள பலபாகங்களுக்கும் சென்று ஆங்கு ஒழுக்கத்தை திருத்தும் பணியை மிக நேர்மையாக ஆற்றினர்.

இந்த இஸ்லாமியப் பிரசாரகர்கள், தற்போதுள்ள மதப்பிரசாரகர்கள் தங்களுக்கு விசேஷ அறிகுறியாக வைத்துக்கொண்டிருக்கிற மனப்பான்மை, கேவலமான உணர்ச்சி, அற்ப குணங்கள் ஆகியவைகளைவிட்டும் சுத்தமானவர்களாக இருந்தார்கள். உண்மையில் இவர்கள் உச்சி தொடுத்து உள்ளங்கால் வரை உண்மை, அந்தரங்க சுத்தி, அன்பு இவைகளது மயமாகவே இருந்தனர்.

உலக சம்பந்தமான அதிகாரங்களும், செல்வங்களும் அவர்கள்முன் மிக அற்பமாகவே இருந்தன. அவர்கள் ஏழையையும், பணக்காரனையும் ஒன்றுபோல அன்புடன் ஆதரித்து நடத்தினர். அவர்கள் தங்கள் அகத்தை ஆளும் சக்திபெற்றிருந்தனர். அவர்களது நீதியானது மனித ஒழுக்கத்திற்கு பிரமிக்கத் தக்க அற்புதச் செய்கையாக இருந்தது. அவர்கள் இரக்கச் சித்தமுள்ளவர்களாயிருந்தனர். ஆனுல், அநியாய அக்கிரமங்களை எதிர்ப்பதில் உறுதியுள்ளவர்களாகவும், உதாரணமுள்ளவர்களாகவும், பெருந் தன்மையுள்ளவர்களாகவு மிருந்தனர். என்றுலும், நீதி நேர்மை என்ற முந்தாணியை எந்நிலைமையிலும் கைதவரவிட மாட்டார்கள். அவர்களது ஏழைகளைப் பராமரிக்கும் தன்மை, அவர்களது கற்பு, பாபத்தை விட்டு விலகுதல் ஆகியவைகள் இதர சமூகத்தினருக்கு முன்மாதிரியாக இருந்தது. இத்தியாதி தன்மைகளினுல் அவர்கள் எல்லா இடங்களிலும் வெற்றி பெற்றனர்; அவர்களது பிரசாரமும், சன்மார்க்க அழைப்பும் தோல்வியுறவில்லை.

அவர்களது சன்மார்க்க அழைப்புக்கிணங்கி அவர்களுடன் சேர்ந்துகொள்ளாத ஜனங்களும் கூட திரைக்கப்பாலிருந்துகொண்டு இஸ்லாத்தின் பூந்தோட்டத்தில் மனத்தை வசியப்படுத்துகிற சில பூக்களைக் கொய்துகொண்டனர். சம

உரிமையளித்தல், வாக்குத்தத்தத்தை நிறைவேற்றல், நீதி, நேர்மை, ஏழைகளை ஆதரித்தல், இரக்கம், தயாளம், தியாகம், உறுதி, துணிவு, பொறை, பணிவு ஆகியவைகள் அம்மலர்களிற் சிலவாகும்.''

இஸ்லாத்தின் பைத்துல்மாலிலிருந்து ஐரோப்பா ஆசியா ஆகிய கண்டங்களிலுள்ள அறிவாளிகளும், புத்திசாலிகளும், சீர்திருத்த வாதிகளும் இந்த ரத்தினக் கற்களை அடைந்துகொண்டனர். இந்தப் பாடங்களைத்தான் இஸ்லாமியப் பிரசாரகர்கள் தங்களது ஆசியா ஐரோப்பிய மாணவர்களுக்குக் கற்பித்தனர்.

சோதரீர்! முற்காலத்தில் நம்மவர் உலகத்தை ஜெயித்து வாகைமாலை சூடியதற்கும், உலக மக்களின் அந்தகார அஞ்ஞானத்தைப் போக்கி, அவர்களது இருதயங்களைக் கைப்பற்றியதற்கும் அவர்களிடமுள்ள வாள் பலம் காரணமென்று நினைக்கின்றீர்கள்? முற்காலத்திலுள்ள நமது பெரியார்களிடமிருந்த இச்சீரிய தன்மைகள்தான் அவர்கள் சென்றவிடங்களிலெல்லாம் அவர்களை மக்கள் மதிக்கவும், அவர்களது நாவிலிருந்து வெளியேறும் ஒரு அற்பக் கட்டளைக்காக மக்கள் தங்கள் உயிர்களைக்கொடுத்தேனும் அவைகளை நிறைவேற்றவும் செய்தது. இத்தகைய அரும்பெரும் தன்மைகள் அவர்களிடமில்லாதிருக்கும் பக்ஷத்தில் கோடிக்கணக்கான ஜனங்களை தங்கள் வயப்படுத்தி இஸ்லாத்திற் சேர்க்கும்படிச் செய்ய இயன்றிருக்காது. ஆகவே, தற்போதுள்ள நம்மவர்கள் நமது முன்னோரின் இத்தன்மைகளிலிருந்து பாடங் கற்றுக்கொண்டு இவ்வுலகிலும் அவ்வுலகிலும் வெற்றியாளராகத் திகழ்வார்களாக.

பாலஸ்தீன் பிரசினை

பாலஸ்தீனிலேற்பட்டுள்ள யூத அரபிக்கலகத்திற்குப் பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் ஒரு விசாரணைக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. இக்கமிஷன் சென்ற ஜனவரிமீ 20உ தனது வேலையை முடித்துக்கொண்டு, பாலஸ்தீனைவிட்டுச் சென்றது. அரபியர் இக்கமிஷனின் விசாரணையை பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஆரம்பத்தில் முடிவு செய்திருந்தார்களாயினும் அரபி அரசர்களின் ஆலோசனையின்பேரில் ஒத்துழைத்தனர். தங்களுக்குள்ள குறைகளையும் கோரிக்கைகளையும் மிகத் தெளிவாகவும் தைரியமாவும் கூறினர். இவ்விசாரணைக் கமிஷன் முன்னிலையில் அறபியரினுடையவும், யூதரினுடையவும் நோக்கங்களும், கோரிக்கைகளும் தெளிவாகிவிட்டன. இவ்விசாரணைக் கமிஷன் தனது முடிவை பிரிட்டிஷ் பார்லிமென்டில் சமர்ப்பிக்கும்.

இக்கமிஷன் முடிவு யாது? இதனை அரசாங்கம் எவ்வாறு அமல் நடத்திவைக்கும் என்பதைப்பற்றி உறுதியாக நாம் இப்பொழுது ஒன்றுங் கூறுவதற்கில்லையாயினும் இக்கமிஷனின் சிபாரிஷ்கள் யாதாம் என்பதைப்பற்றிய சில தகவல்கள் வெளிவராமலில்லை. இதுவரை கிடைத்துள்ள தகவலிலிருந்து பிரிட்டன் அரபியருக்கு நீதி செய்யும் எண்ணத்திலில்லையென்றும், கமிஷனின் சிபாரிஷ்களை பாலஸ்தீனத்து அறபியர்கள் அங்கீகரிக்கவில்லையென்றும், மறுபடியும் கலகம் செய்வதற்காக யூதரும் அறபியரும் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது.

ஆனால், ஒரு விஷயத்தைமட்டிலும் இங்கு தெளிவாக அறிவித்துவிட விரும்புகிறோம். கமிஷனை நியமிப்பதானது பெரும்பாலும் அரசாங்கத்தின் ராஜ தந்திரங்களிலொன்றாகவே வந்திருக்கிறது என்பதுமட்டிலும் அனுபவப்பூர்வமாகத் தெரிந்த விஷயம். ஜனங்களிடம் ஏற்பட்டுள்ள ஆத்திரத்தை உடனே அடக்கி ஜனங்களது கவனத்தை வேறுபக்கல் திருப்பி விடுவதுதான் இதன் நோக்கமாக இருக்கிறது. மேலும், ஒரு பிரசினையைச் சீக்கிரம் முடிவு செய்யாமல் தள்ளி வைக்கவேண்டுமென்று விரும்பினால் உடனே அதனைப்பற்றி ஒரு விசாரணைக் கமிஷனை நியமிப்பதும், அக்கமிஷன் விசாரணை புரிவதும், ரிப்போர்ட்டு தயார் செய்வதும், அதனைப்பற்றி விவாதம் நிகழ்வதுமாகக் காலதாமதஞ் செய்யப்படுவதும், அதற்குள்

ளாக அரசாங்கம் வேறு யுக்திகளால் நிலைமையைச் சீர்படுத்திவிட முயலுவதும் சகஜமாக இருந்து வருகிறது. இம்முறையில் பெரும்பாலும் அரசாங்கம் தனது நோக்கத்தில் காரிய சித்தியடைந்து கொண்டே வருகிறது.

இதே நோக்கம்தான் பாலஸ்தீன் கமிஷன் நியமனத்திலுமிருப்பதாகத் தோன்றுகிறது. பாலஸ்தீனத்தை சண்டை சச்சரவுகளையும் கலகங்களையும்விட்டுச் சுத்தப்படுத்தவேண்டும் என்ற நல்ல எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்குமாயின், அதற்காக கமிஷன் நியமிக்கவோ, அதன் செலவிற்காக லக்ஷக்கணக்கான பணத்தைச் செலவிடவோ வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. அறபியருக்கும் யூதருக்கும் நிகழுகிற இக்கலகங்களுக்குக் காரணம் யாது? தற்போது பாலஸ்தீனத்தில் குழப்பம் நடந்து கொண்டிருப்பதேன்? என்ற விபரத்தை பிரிட்டனிலுள்ள சிறு சிறு குழந்தைகளும்கூட நன்கு தெரிந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன் ஒருமுறை ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு, யூத அறபிய போராட்டத்திற்குக் காரணமென்ன வென்பதைப்பற்றி விசாரணை புரிந்திருக்கிறது. அல்லாமலும் பொறுப்பு வாய்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பல சமயங்களிலும் இதனைப்பற்றிக் கவனித்திருக்கிறார்கள். ஆதலின், யூத அறபிய கலகங்களுக்குரிய காரணங்களைப்பற்றி கமிஷன் நியமிக்கவேண்டிய அவசியமுமில்லை, விசாரணை புரிந்து ரிப்போர்ட் செய்யவேண்டிய தேவையுமில்லை. இவ்வித நிலைமையில் பாலஸ்தீனத்தில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துவதற்கு, நேரானதும் தெளிவானதுமான மார்க்கத்தை விட்டுவிட்டு கமிஷன் நியமித்தல்போன்ற குறுக்கு வழிகளில் இறங்கினால், அரசாங்கம் கலகத்தை ஒடுக்கும் நோக்கங் கொண்டிருக்கவில்லை என்றும், வேறு ஏதோ ஒரு நோக்கத்திற்காக இதனைச் செய்கிறதென்றும் நினைப்பதற்கு ஹேது உண்டாகமாட்டாதா? இவ்விதமான சந்தேகத்தினால்தான் பாலஸ்தீனத்தின் அறபியர் இக்கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஆரம்பத்தில் முடிவு செய்தனர்.

மேலும், அரசாங்கத்தாரால் நியமிக்கப்படும் விசாரணைக் கமிஷன் அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் நன்மைக்கும் மாறாக ரிப்போர்ட்டுச் செய்வது வழக்கமில்லை. ஏனெனில், இவ்வித கமிஷனில் அங்கத்தினராக நியமிக்கப்படுபவர்கள் தங்கள் சமூக நலனைப் பார்க்கினும் சத்தியத்திற்கும் நேர்மைக்கும் அதிகமான சலுகை காட்டுவதில்லை. ஒருக்கால் அக்கமிஷன் அங்கத்தினர்கள் சத்தியத்தின்படி நேர்மையாக நடந்துகொள்ள நாடினாலும், அவர்களால் அவ்வாறு நடந்துகொள்ள இயலாது. ஏனெனில், கமிஷன் அங்கத்தினர்கள் இதனை உணர்ந்து கொள்ள முடியாதபடிக்கான நிலைமைகள் அவர்களுக்கு எடுத்துக் காண்பிக்கப்படுகின்றன. பாலஸ்தீனத்தின் கமிஷன் விசாரணை செய்து கொண்டிருந்த காலத்தில், அங்குள்ள உயர்தர உத்தியோகஸ்தர்களெல்லாரும் பொதுவாக ஐரோப்பியர்களாகவே இருந்தனராதலின், அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சாக்ஷியங்களிலெல்லாம் உண்மை விஷயங்களை மறைத்துக்கூறவும், விஷயத்தைத் திரித்துக் கூறவுமே முயற்சி நடைபெற்றிருக்கிறது. உதாரணத்திற்காக இங்கு ஒரு சாக்ஷியத்தைமட்டிலும் தருகிறோம்: பாலஸ்தீனத்திலுள்ள கல்வி இலாக்கா டைரக்டர் பாலஸ்தீனத்தில் யூதருக்கும் அரபியருக்குமிடையிலுள்ள பிளவிற்குக் காரணம் "இவ்விரு வகுப்பினரும் தங்கள் கல்விச் சாலைகளில் தங்களது பாஷையிலேயே கல்வி போதிக்க வேண்டுமென்று பிடிவாதஞ் செய்கின்றனர்; அரபி யூதக் குழந்தைகள் ஒன்றாக உட்கார்ந்து கல்வி கற்றுக் கொள்ளத்தக்க ஸ்கூல் எதுவும் இங்கு ஏற்படுத்த முடியாது; ஆதலால், பாலஸ்தீனத்து ஸ்கூலில் ஆங்கிலங் கற்பிக்கவேண்டும்; இப்படிச் செய்தால் வகுப்பு ஒற்றுமை யுணர்ச்சியேற்பட வழி பிறக்கும்" என்று சாக்ஷியங் கூறி இருக்கிறார்.

கலகக்காரர்களாகவும், வைராக்கியங்கொண்டவர்களாகவும், அடங்காதவர்களாகவும் கருதப்படுகிற அரபியரின் சாக்ஷியங்களைப் பார்க்கினும் தங்கள் இனத்தைச் சேர்ந்த உயர்தர உத்தியோஸ்தர் ஒருவருடைய இந்த சாக்ஷியம் மிகவும் நேர்மையானதென்று அக்கமிஷன் கருதுவதும், அதனை ஆதாரமாகக்கொண்டு அரபியருக்கும் யூதருக்குமிடையில் ஒற்றுமை ஏற்படுவதற்காக அங்கு ஆங்கில பாஷையின் மூலம் கல்வி போதிக்க வேண்டும் என்று சிபாரிஷ் செய்து இந்தியாவைப்போல் பாலஸ்தீனிலுள்ளவர்களது சுயேச்சை யுணர்ச்சியையும் கூட முடிவடையும்படி செய்வதற்கு ஏற்பாடு நடப்பதும் ஆச்சரியப்படத்தக்க விஷயமன்று.

கல்வி இலாக்கா டைரக்டர் தமக்கு இஷ்டமானபடி சாக்ஷியங் கூறலாம்; அவரது வாயை ஒருவரும் பொத்தப் போவதில்லை. ஆனால்,

அவர் உண்மையை வெளியிடவில்லை என்று உலகம் கூறமுடியும். ஏனெனில், மகா யுத்தம் நடப்பதற்கு முன்னாலுங்கூட பாலஸ்தீனத்தில் யூதர்கள் வசித்துக்கொண்டுதானிருந்தார்கள். அக்காலத்தில் ஸ்கூல்களில் ஆங்கில பாஷையின் மூலம் கல்வி கற்பிக்கப்படவில்லை. அக்காலத்தில் யூதருக்கும் அரபியருக்குமிடையில் இவ்விதமான சச்சரவுகளிருக்கவில்லை. எல்லோரும் அவரவர் அலுவல்களைக் கவனித்துக்கொண்டு சந்தோஷமாகவே இருந்தனர். ஆங்கிலேயர்களது காலடிப்பட்டதிலிருந்துதான் அங்கு யூதருக்கும் அரபியருக்கும் கலகமுண்டாகி இருப்பதாக தெரிகிறது. லார்ட்பால்போர்ட் என்பவர் தமது அரசாங்கத்தின் நன்மையை யுத்தேசித்து, இரட்டைக் கொள்கைத் திட்டத்தைப்பற்றி அறிக்கை வெளியிட்டார். இவ்வறிக்கைதான் இக்குழப்பததிற்கும் கலகத்திற்கும் ஆணிவேருகும். அவ்வறிக்கை வருமாறு:—

"பாலஸ்தீனத்தில் யூதருக்குத் தாய் நாடு ஏற்படுத்துவதை பிரிட்டிஷ் அரசாங்கம் ஆதரிக்கிறது. இதற்காக யூதருக்கு உதவி செய்யவும், அவர்களுக்குச் சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆனல், பாலஸ்தீனத்திலுள்ள யூதரல்லாத குடிகளுக்கு விரோதமாக இருப்பதையோ, அல்லது அந்நிய நாட்டில் வாழும் யூதர்களுரிமையைப் பாதிப்பதாக இருக்கிற எவ்விஷயத்தையோ ஆதரிக்க முடியாது"

யூதர்கள் உலகில் மிகவும் துரதிர்ஷ்டமுள்ள ஒரு சமூகத்தினர். உலகம் இவ்வளவு பிரமாண்டமாக இருந்தும் அவர்களுக்கு அது மிகவும் நெருக்கமாகவே இருக்கிறது. அச்சமூகத்தைத் தனது நாட்டில் கால் வைப்பதற்கு அனுமதிக்கக்கூடிய தேசம் எதுவுமில்லை. இதற்குக் காரணமென்னவெனில், இவர்கள் எந்த தேசந்திற்குச் சென்றாலும், அத்தேசத்தின் செல்வமும் செழிப்பும் அவர்களது மூலதனத்திற்கு அற்பணமாகி விடுகின்றன. இதே காரணத்தினுல்தான் ஜெர்மன் தலைவர் ஹெர் ஹிட்லர் அவர்களைத் தனது நாட்டைவிட்டு முற்றிலும் ஒழித்துவிட்டார். அவர் இப்படிச் செய்ததை நாட்டுக்குச் செய்த ஒப்பற்ற பெருங் கைங்கரியம் எனக் கருதுகிறார். இதர தேசங்களும்கூட இவர்களைத் தூரத்திலிருந்துகொண்டே சலாம் செய்து அனுப்பி விடுகின்றன. ஆனல், பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்கள்மீது அனுதாபம் கொண்டிருப்பதாக வெளிக்குத்தோன்றுகிறது. என்றாலும், தென்னப்பிரிக்காவிலுள்ள யூனியன் அஸம்பிளி ஒரு சட்டம் செய்து யூதர்கள் அங்கு குடியேறுவதைத் தடைசெய்து, அவர்கள்பால் தங்களுக்கு எவ்வித அனுதாபமுமில்லையென்பதை ருஜூப்படுத்திவிட்டது. இதிலிருந்து பிரிட்டன் தனது ராஜிய நன்மையின் நிமித்தம் யூதர்களை பாலஸ்தீனத்தில் குடியேற்றி அறபியரின் அமைதியை நெருக்க விரும்புகிறது என்பது விளங்குகிறது. இதனை அஸ்திவாரமாகக்கொண்டே பால்போர்ட் பிரபுவும் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் என்பது புலனாகின்றது.

யூதர்கள் உலகிலுள்ள சகல தேசங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டனர். எந்த தேசமும் அவர்களை ஏற்றுகொள்ளத் தயாராக இல்லை என்பதையும், தங்களது கால்களை எங்கும் ஸ்திரமாக ஊன்றமுடியாது என்பதையும் அவர்கள் உணர்ந்துகொண்டனர். ஆகவே, தங்களுக்கென ஒரு சொந்த நாட்டை உண்டுபண்ணிக் கொள்ள வேண்டுமென்று விரும்பி, தங்களுக்குள்ள பல சௌகரியங்களையும் உத்தேசித்து பாலஸ்தீனத்தைத் தெரிந்தெடுத்துக் கொண்டனர். யூதர்கள் எவ்விதமான சமூகத்தினராக இருந்தாலும் பணத்தில் அவர்களை எந்தச் சமூகமும் எதிர்க்க முடியாது. ஆகவே, அவர்கள் தங்களது மூலதனத்தின் உதவியால் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள விரும்பினர். தற்போது உலகம் முதலாளித்துவத்தை எதிர்த்தபோதினும் முதலாளித்துவத்திற்கு ஐக்கியப்படாத சமூகம் எதுவுமில்லை. இதற்கேற்ப, யூதர்கள் தங்கள் பணத்தின் உதவியால் பாலஸ்தீனத்தைத் தங்கள் தாய் நாடாக ஏற்படுத்தும் விஷயத்தில் பெரும் பெரும் அரசாங்கங்களையெல்லாம் தங்கள் வசப்படுத்திக்கொண்டனர். தற்செயலாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ராஜிய தன்மையும் பாலஸ்தீனத்தில் பணக்காரச் சமூகத்தைக் கூடியேற்றுவதற்கு ஏற்றதாக அமைந்துவிட்டது. ஆகவே, பிரிட்டன், யூதர்கள் அங்கு குடியேறுவதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வாரம்பித்து, அங்கு அவர்களைக் குடியேற்றுவதற்கான சௌகரியங்களையும் உண்டுபண்ணிக் கொடுக்கத் தொடங்கிவிட்டது.

யூதர்கள் எல்லா தேசங்களிலும் அன்னியராகவே பாவிக்கப்பட்டு வந்தனர். சுதேசிகளைப் போல் நடத்த எந்த நாடும் தயாராக இருக்க

வில்லை. ஆதலின், யூதர்கள் உலகெங்குமிருந்து பெருவாரியாக பாலஸ்தீனத்தில் குடியேறத் தொடங்கினர். சில வருஷ காலத்திற்குள் பாலஸ்தீனத்தில் யூதரின் ஜனத் தொகை பல லக்ஷத்திற்கு உயர்ந்துவிட்டது. ஏழை அறபியரின் பூமிகளும் காணிகளும் அவர்களது ஆதிக்கத்திலும் சொந்தத்திலும் மாற்ற மடையத் தொடங்கின.

மகா யுத்த காலத்தில் அறபி அரசாங்கமேற்படுத்திக் கொடுப்பதாக அறபியருக்கு பிரிட்டன் வாக்குறுதி செய்ததை நிறைவேற்றாததனால் அறபியரின் இருதயங்களை ஆரம்பத்திலேயே பிரிட்டன் புண்படுத்திவிட்டது. பின்னர், அரசாங்கத்தின் உதவியினாலும், உற்சாகமூட்டுகையினாலும் யூதர்கள் பெரும் ஆபத்தைப்போல் அவர்கள்மீது வந்து விழுந்து, அவர்களது பூஸ்திதிகளையும் காணிகளையும் கைப்பற்றவாரம்பித்ததிலிருந்து ஒரு பக்கல் பிரிட்டன்மீது அவர்களுக்குக் கோபத்தணல் கொழுந்துவிட்டெரிந்தது. மற்றொரு புறத்தில் யூதர்கள்பால் அவர்களுக்கு ஆத்திரமும் வெறுப்பும் உண்டாயிற்று. இறுதியாக 1929-ம் வருஷத்தில் யூதருக்கும் அறபியருக்குமிடையில் கலகம் மூண்டது. இதனைப்பற்றி விசாரணைபுரிய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ராயல் கமிஷன் "யூதர்கள் பாலஸ்தீனத்தைத் தங்கள் தாய்நாடாக்கிக்கொண்டு, அறபியரின் ஜீவியத்தைச் சகலதுறையிலும் சம்பந்தமற்றதாகச் செய்கின்றனர் என்று அறபியருக்குப் பீதியுண்டாகிவிட்டது" என்பதாக ரிப்போர்ட்டுச் செய்தது.

அரசாங்கம் இந்த ரிப்போர்ட்டை லக்ஷியம் செய்யாமல், அறபியரின் இந்தச் சந்தேகத்தை நிவர்த்திக்க முயலாமல், மற்றொரு அறிக்கையின்மூலம் அவர்களது புண்ணை மறுபடியும் கிளறிவிட்டது. "இது சம்பந்தமாக இரட்டிப்புப் பொறுப்புகள் பிரிட்டன்மீது ஏற்பட்டிருக்கின்றன. யூதர்கள் சம்மந்தமாக ஒன்று. பாலஸ்தீனத்து யூதரல்லாத பிரஜைகள் சம்மந்தமாக மற்றொன்று. பிரிட்டிஷ் அரசாங்கம் இவ்விரு பொறுப்புகளையும், தனது முழு பலத்தையும் கொண்டு நிறைவேற்றும், இரு வகுப்பாருக்கும் பூரண நீதி வழங்கும்" என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி 1930 ஏப்ரல் 13-ந் தேதி காமன்ஸ் சபையில் அறிக்கை செய்தார். இவ்வறிக்கைக்குப் பிறகு அறபியரின் அமைதியின்மை இன்னும் அதிகமாகிவிட்டது. ஆகவே, அரசாங்கம் மறுபடியும் விசாரணைக் கமிஷனை நியமித்து இந்தக் கொந்தளிப்பை அடக்க விரும்பி ஸர் ஜான் ஹோப் ஸிம்ஸனை இதற்காக நியமித்தது.

எதிர்பார்த்ததுபோல் ஸர் ஜான் ஹோப் அறபியரின் அமைதியின்மையை அகற்றுவதற்காக விவசாயத்தில் சீர்திருத்தம் செய்வதைப் பலமாக வற்புறுத்தினாராயினும், நீதியைக் கடைப்பிடித்து, "இனி அதிகப்படியாக வந்து குடியேறிக்கொண்டிருக்கிற யூதருக்கு இன்னமும் பூமிகளைக் கொடுக்கக்கூடாது, வேலையில்லாமல் திண்டாடுகிற அறபித் தொழிலாளர்கள் இருக்கும்போது, அந்நிய நாடுகளிலிருந்து யூதர்களை பாலஸ்தீனத்தில் குடியேற்றி அவர்களைக் கொண்டு வேலை வாங்குவது நீதியன்று" என்பதாக ரிப்போர்ட்டுச் செய்தார்.

ஆனால், அரசாங்கம் இந்த ரிப்போர்ட்டின்படி நடந்து யூதர்களை அதிருப்தி செய்து கொள்ள விரும்பவில்லை. இதன்பலனாக சென்ற வருஷத்தில் மறுபடியும் கலகம் தோன்றிற்று. இதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் கமிஷன் பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து செழிப்பான பாகத்தை யூதருக்குக்கொடுக்கவும், காடுகளை அறபியருக்குக் கொடுத்து டிரான்ஸ்ஜார்டோனியாவுடன் அறபியரின் பாகத்தை இணைக்கவும் முடிவுசெய்துள்ளது. இந்த ரிப்போர்ட்டும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இரண்டுபட்டகொள்கையாகிய பால்போர்ட் பிரபுவின் அறிக்கையை நிறைவேற்றுவதாக இருக்கிறதேயன்றி அறபியரின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. ஆகவே, அறபியர் இதனை எதிர்க்கத் தயாராகி வருவதாகப் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. அறபியருக்கும் யூதருக்குமேற்பட்ட இக்குழப்பம் அடங்கி தேசத்தில் அமைதியும் சமாதானமு மேற்படவேண்டுமாயின் இரண்டுபட்டகொள்கையை அரசாங்கம் கைவிட்டு, பாலஸ்தீனத்தின் பிரதம முப்தீ அவர்கள் கமிஷன்முன்கூறிய சாக்ஷியத்தின்படி அமுல் நடத்தாதவரை பாலஸ்தீனத்தில் கலகமும் அமைதியின்மையும் அடங்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி.)

ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி.) அவர்கள் தந்தை ஹஜ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்களுடன் சிறு பிராயத்திலேயே இஸ்லாம் மதத்தைத் தழுவியுள்ளார்கள். அவர்கள் சிறு வயதையுடையவர்களா யிருந்ததால், 'பத்ர்' போரில் கலந்துகொள்ள அனுமதியளிக்கப்பட வில்லை. ஆனால் 'கத்தக்' அகிழி யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். அதுபொழுது 15 வயதை அடைந்திருந்தார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் ஈமானில் உறுதியுடைய வர்களாகவிருந்ததால் உண்மையை எடுத்து ரைப்பதில் யாருக்கும் சற்றேனும் அஞ்சுபவர் களாகவிருக்கவில்லை. ஒருநாள் ஹஜ்ஜாஜுப்னு ஈசுப் என்னும் கலீபா பிரசங்கம் புரிந்துகொண் டிருப்பதினிடையே ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு ஜுபைர் (ரலி.) விஷயமாய் "இவர் குர்ஆன் ஷரீபை மாற்றிவிட்டார்" எனக் குறிப்பிட்டார். அக்கூட்டத்தில் வீற்றிருந்த ஹஸ்ரத் அப் துல்லாஹிப்னு உமர் (ரலி.) அவர்கள் எழுந்து கலீபா கூறுவது பொய்யாகும்; குர்ஆன்ஷரீபை மாற்றிவிடுவதற்கு யாருக்கும் சக்தி கிடையாது என, அறிவித்தார்கள்.

ஒருநாளன்று கலீபா ஹஜ்ஜாஜுப்னு ஈசுப் அஸருக்குப்பின் பிரசங்கம் புரிந்துகொண்டிருக் கும்போது மக்ரிப் நேரம் அடுத்தும் அவர் பிர சங்கத்தை முடிவுக்கு கொண்டுவரவில்லை. ஹஸ் ரத் அவர்கள் குறுக்கிட்டும் கலீபா சற்றேனும் கவனியாது பிரசங்கம் புரிந்துகொண்டேயிருந்த தால், ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி.) அவர்கள் எழுந்து நின்று சபையோர்களை நோக்கி, இவர் தொழுகையின் நேரத்தை வீணில் போக்குகின்றார்; ஆதலின் யான் எழுந்து போகிறேன்; நீங்களெல்லாரும் என் னுடன் வருகின்றீர்களாவென, வினவியபோது, மக்கள் எல்லோரும் ஆமென, ஒப்புக்கொண்ட னர். இவ்விஷயத்தை அறிந்த கலீபா உடனே பிரசங்கத்தை நிறுத்திவிட்டு தொழுகையிலீடு பட்டார். பின்னர் ஹஜ்ரத்தை நோக்கி, துரிதப் பட்டதின் காரணத்தை விசாரித்தார். உடனே ஹஸ்ரத் அவர்கள் தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றிவிட்டு அதன்பின் நீண்டநேரம் பிரசங்கம் புரிவதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை எனத் தெரிவித் தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு ஜுபைர் (ரலி.) அவர்களுக்கு விரோதமாய், அப்துல் மலிக்கின் கட்டளையின்மீது ஹஜ்ஜாஜ் மக்கமா நகர்மீது படை எடுத்து, ஜனங்கள் ஹஜ்ஜுக்குச் செல்ல லாகாதென, தடைசெய்தபோது சற்றும் பயப் படாது அஞ்சாநெஞ்சத்தோடு அவரின் கட்ட ளைக்கு மாற்றஞ் செய்து ஹஜ்ஜுக்குப் புறப்பட் டவர்களில் முதன்மையானவர்கள் ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி.) அவர்களே யாவர்.

பெருமானார் மீது பிரீதி

ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி.) அவர்கள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது அளவற்ற பிரீதி கொண்டிருந்தார் களாதலின், பெருமானார் எந்த மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்களோ அந்த மரத்தடியில் தாங்களும் உட்கார்ந்து கொள்வார்கள். அந்த மரத்திற்கு தண்ணீர் ஊற்றி அது காய்ந்து போகாது காப்பாற்றி வருவார்கள். நபிகள் தில கம் (ஸல்.) அவர்கள் நடந்து செல்லும் வழியில் எங்காகிலும் உட்கார்ந்து சென்றிருப்பார்களா யின் ஹஸ்ரத் அவர்களும் ஆங்கெல்லாம் உட்கார் வார்கள். சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் எங் கெந்த இடத்தில் தொழுகையை நிறைவேற் றிச் செல்வார்களோ ஆங்கெல்லாம் ஹஸ்ரத் அவர்களும் தொழுகையை நிறைவேற்றுவார் கள். இவைகளெல்லாம் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது ஹஸ்ரத் அவர்களுக்கு ஏற்பட்ட அன்பின் பிரீதியேயாகும்.

உலக சம்மந்தம்

அல்லாஹ்தஆலாவை வணங்குவதில் ஏதாகி லும் குறைவு ஏற்பட்டுவிடுமென்பதை அஞ்சி ஹஸ்ரத் அவர்கள் அநேகம் ஆண்டு வயிறு நிறம்ப சாப்பிடாதே யிருந்து வந்திருக்கிறார் கள்.

ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள் ஷஹீ தாக்கப்பட்டவுடன் ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு

உமர் (ரலி.) அவர்கள் கலீபாப் பதவி வகிக்க வேண்டுமென எவ்வளவோ வற்புறுத்தப்பட்டும் சற்றும் இணங்கினார்களில்லை. கலீபாப் பதவியை ஏற்றுக்கொள்ளாவிடின் கொல்லப்பட்டு விடுவீர்களென ஜனங்கள் பயமுறுத்திக் கூறியும் ஹஸ்ரத் அவர்கள் சற்றேனும் சம்மதித்தார்களில்லை. "யான் கலீபாப் பதவி ஏற்றுக் கொண்டபின் யாராகிலும் எனக்கு மாறுசெய்வார்களாயின் அதுபொழுது அவரை என்ன செய்வீர்கள்" என வினவியபோது, "அவரைக் கொன்றுவிடுவோம்" என மக்கள் அறிவித்தனர். அதுபொழுது ஹஸ்ரத் அவர்கள் "எனக்கு இவ்வாறான கலீபாப் பதவி வேண்டாம்" என, அறிவித்துவிட்டார்கள். கிலாபத் பதவி சம்பந்தமாய் எவ்வளவு தக்ராரர்களும் யுத்தங்களும் நடைபெற்றனவோ அவைகள் யாவற்றின்மீதும் ஹஸ்ரத்அவர்கள் வெறுப்புக்கொண்டிருந்தார்கள். அதுபொழுது ஹஸ்ரத் அவர்கள், ஏற்கனவே நாம் அல்லாஹ்வுக்காக யுத்தஞ் செய்துகொண்டிருந்தோம், இதுபொழுது சுயநலங் கொண்டு யுத்தம் புரிகின்றோம் என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் சதாவும் சமாதானத்தையே விரும்பியவர்களாக விருந்ததால் ஹஜ்ஜாஜு போலொத்தவர்களுக்குப்பின் நின்று கூட தொழுகையை நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். மிகுதம் பேர் யாரை கலீபாவாக ஒப்புக்கொள்கின்றார்களோ அன்றையே ஹஸ்ரத் அவர்களும் கலீபாவாக ஏற்று வந்திருக்கிறார்கள்.

ஹஸ்ரத் அம்ருப்னு ஆஸ் (ரலி.) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி.) அவர்களை நோக்கி, தாங்கள் சிரேஷ்டமானவராக விளங்குவதுடன் கலீபாப் பதவியை ஏன் ஏற்றுக் கொள்கிறீர்களில்லை, நாங்களெல்லோரும் ஏகோபித்து தங்களுக்கு அப்பதவியை அளிக்க நாடுகின்றோம், எனக் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், மூன்று பேர்களாயினும் என்னை கலீபாவாக ஏற்றுக்கொள்வதை மறுப்பார்களாயின் அதுபொழுது யான் அப் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவேன் என, அறிவித்து விட்டார்கள். ஹஸ்ரத் அவர்கள் இவ்வாறு கலீபாப் பதவியின்மீது வெறுப்புக் கொண்டிருப்பதைக் கண்ட ஹஸ்ரத் அம்றுப்னு ஆஸ் (ரலி.) அவர்கள், முஆவியாவின் குமாரர் எஜீதை கலீபாவாக ஏற்றுக்கொள்வீர்களாயின் பல லக்ஷக்கணக்கான ரூபாய்களும் அநேக சன்மானங்களும் கிடைக்கும், அதைக்கொண்டு எத்தனையோ சந்ததிகள் கஷ்டமில்லாது சந்தோஷமாய் ஜீவனஞ் செய்துகொள்ள முடியும், எனக் கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் அவர்கள், "இவ்வாறான வார்த்தைகள் பேசிக்கொண்டு என்னிடம் வரவேண்டாம்; காசு பணத்திற்கு என்னையும் என் ஈமானையும் விலைக்கு வாங்க முடியாதென்பது உங்களுக்குத் தெரியாதா? யான் மரணமடையும் சமயம் என் முந்தாணி உலகின் ஆசாபாசங்களை விட்டு துப்பரவாக யிருக்கவேண்டுமென யான் சதா வேண்டுதல் புரிந்துகொண்டே யிருக்கிறேன்" எனத் தெரிவித்து விட்டார்கள்.

இச்சம்பவம் நடந்த சில நாட்களுக்குப்பின் அமீர் முஆவியா பல லக்ஷ ரூபாய்களை ஹஸ்ரத் அவர்கள் சமூகம் அனுப்பிவைத்து, தன் குமாரர் எஜீதை கலீபாவாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். ஹஸ்ரத் அவர்கள் அவைகளை திருப்பி அனுப்பிவிட்டு, முஆவியா என்னையும் என் மார்க்கத்தையும் இவ்வளவு இலேசாக நினைப்பது சற்றும் பொருத்தமுடைய காரியமாக மாட்டாதென, அறிவித்து விட்டார்கள்.

தயாளதன்மை

ஒரு நாள் ஒருவர் 20 ஆயிரம் தங்க நாணயங்களை ஹதியாவாக ஹஸ்ரத் அவர்களிடம் அனுப்பி வைத்தார். ஹஸ்ரத் அவர்கள் அதனை ஏற்று அந்த இடத்திலேயே யிருந்து கொண்டு அவை யாவற்றையும் ஏழைகளுக்கு பங்கிட்டுக் கொடுக்க ஆரம்பித்தார்கள். அந்த 20 ஆயிர நாணயங்களும் போதாமல் தங்கள் சட்டைப் பையிலிருந்தும் சிலவற்றை எடுத்துக் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் எம்பொழுதும் ஏழை மிஸ்கீன்கள் இல்லாது சாப்பிடச் செல்லமாட்டார்கள். அநேகமாய் தங்கள் சாப்பாட்டை ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு தாங்கள் பசியுடனிருப்பார்கள். இதன் காரணமாய் ஹஸ்ரத் அவர்கள் மெலிந்து, பலம் குன்றியவர்களாய் விட்டார்கள். இதனால் மக்கள் ஹஸ்ரத் அவர்களின் மனையாளை நோக்கி, தங்கள் அருமை பர்த்தாவை நல்ல விதமாய் கவனிப்பதில்லையோவென வினவியபோது, யான் என்ன செய்வது? என் எஜமானிடம் சமர்ப்பிக்கும் ஆகாரம் முழுதையும் ஏழைகளுக்கு அளித்துவிட்டு, தாங்கள் பசியுடனிருக்கிறார்கள்; அவர்களின் இத்தயாளத்தன்மையைத் தெரிந்து கொண்ட

ஏழை மக்கள், அவர்கள் வரும் வழியில் உட்கார்ந்து கொள்வதால் தொழுகையை நிறைவேற்றிவிட்டு திரும்புங்காலே அன்னோர்களை அழைத்து வந்து தங்களுக்குள்ள சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு, தாங்கள் பசியுடனிருந்து விடுகின்றார்கள்; இவ்வாறே எத்தனையோ தினங்கள் செல்படியாகின்றன, என அம்மாது அறிவித்தார்கள்.

ஒருநாள் அருமைப் பத்தினியார் அங்கு வீற்றிருக்கும் ஏழைகளிடம் ஆள் அனுப்பி வழி நடைப்பாதையில் உட்கார்ந்திருக்க வேண்டாமென, அறிவித்தார்கள். அன்றைய தினம் ஹஸ்ரத் அவர்கள் சாப்பாட்டிற்காக வீடு வருங்காலே மிஸ்கீன்கள் யாரும் அங்கில்லாதிருப்பதைக் கண்டு ஆள்விட்டுக் கூப்பிட்டனுப்பினார்கள். எந்த மிஸ்கீனும் வராததால் ஹஸ்ரத் அவர்கள் விஷயத்தைத் தெரிந்துகொண்டு, "யான் இன்றிரவு சாப்பிடாதிருக்க வேண்டுமென, நீங்கள் கருதுகின்றீர்கள் போலும்" என்பதாய்க் கூறிவிட்டு அன்றிரவை பசியுடன் போக்கி வைத்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் அவர்கள் நோய்வாய்ப்பட்டுப் போனபொழுது வைத்தியர் திராக்ஷை சாப்பிடுமாறு கூறினார். அதுபோல் கடைத் தெருவிலிருந்து திராக்ஷை வாங்கிவரப்பட்டது. அதுபொழுது ஒரு ஏழை அப்பக்கல் சென்றார். உடனே அத்திராக்ஷையை அவரிடம் கொடுத்து விடுமாறு ஹஸ்ரத் அவர்கள் கூறினார்கள். அங்கு வீற்றிருந்தோர் யாவரும் வேறு வஸ்துவை அவருக்குக் கொடுக்கிறோமென, பன்முறை வற்புறுத்திக் கூறியும், ஹஸ்ரத் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளாது அத்திராக்ஷையையே அவரிடம் கொடுத்துவிடுமாறு வற்புறுத்திக் கொடுக்கச் செய்துவிட்டார்கள். இவ்வாறே ஒருமுறை பிரியத்தோடு மீன் சமையல் செய்யப்பட்டது. அதுபொழுதும் ஒரு மிஸ்கீன் அவ்விடம் வந்தவுடன் மீன் முழுதையும் அவரிடம் கொடுத்துவிட்டார்கள். சுருங்கக் கூறின், எந்த வஸ்து தங்களுக்கு மிகப்பிரியமாகயிருக்கிறதோ அதனை அல்லாஹ்வின் பாதையில் தானஞ்செய்து விடுவது ஹஸ்ரத் அவர்களுக்கு மிக மிகப் பிரியமாகவிருந்ததெனக் கூறலாம்.

தங்கள் அடிமை, வெள்ளாட்டிகளில் யாருடையபேச்சு வார்த்தைகள் தங்களுக்கு திருப்தி அளிக்கிறதோ அன்னோரை உரிமை விடுபவர்களாயிருந்தார்கள். எல்லோரையும்விட தங்களுக்கு அதிகப் பிரியமுடைய ஒரு வெள்ளாட்டியை அல்லாஹ்வுக்காக உரிமைவிட்டு தங்கள் அடிமையுடன் விவாகஞ்செய்து வைத்தார்கள். தங்களது இக்குணத்தை வெள்ளாட்டிகள் தெரிந்துகொண்டதால் மிகுதமாய் அல்லாஹ்வை வணங்குவதிலீடுபட்டுவிடுவார்கள். இதனைப் பார்த்தவுடன் அவ்வெள்ளாட்டிகளை ஹஸ்ரத் அவர்கள் உரிமைவிட்டு விடுவார்கள். இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்ட நண்பர்கள், இவ்வெள்ளாட்டிகள் முழுமனதோடு அல்லாஹ்வின் வணக்கத்திலீடுபடுவதில்லை; இவர்கள் உரிமையாய்விடும் நோக்கத்தோடே இவ்வாறு செய்கின்றனர் என, தெரிவிப்பார்கள். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், யார் அல்லாஹ்வுக்காக என்னை ஏமாற்றிவிடுகின்றனரோ யான் அந்த ஏமாற்றுதலுக்குட்பட்டுப் போவேன், என அறிவிப்பார்கள்.

இதரார்களின் அடிமை, வெள்ளாட்டிகளில் வணக்கஸ்தர்களாகவிருப்பவர்களை கிரயத்திற்கு வாங்கி ஹஸ்ரத் அவர்கள் உரிமைவிடுவார்கள். ஒருமுறை ஹஸ்ரத் அவர்கள் ஒரு ஒட்டகையை விலைக்கு வாங்கினார்கள். அதன் நடத்தை தங்களுக்கு பிடித்தமாகவிருந்ததால், அல்லாஹ்தஆலாவிற்காக பலியிடப்படும் மிருகங்களில் இவ்வொட்டகையையும் சேர்த்துக் கொள்ளுமாறு தங்கள் அடிமைக்குக் கட்டளையிட்டார்கள்.

சாதரணத்தன்மை

ஹஸ்ரத் அவர்கள் இத்தியாதி சற்குணங்களோடு சிறப்புற்று விளங்கி வருங்காலே, தங்கள் மனதில் சற்றேனும் அகப்பெருமை ஏற்படுவதே கிடையாது. எப்பொழுதும் தாழ்மையையே கைகொண்டு காரியாதிகளை நடத்திச் செல்வார்கள். ஒருமுறை ஒருவர் விலையுயர்ந்த அழகிய போர்வையை ஹஸ்ரத் அவர்களுக்குச் சன்மானமளித்தார். ஹஸ்ரத் அவர்கள் இவ்வாறான போர்வையை அணிவதுகொண்டு ஒருக்கால் எங்கோ மனதில் பெருமை ஏற்பட்டு விடப்போகிறதென்பதையுன்னி அதனை ஏற்றுக்கொள்ளாது மறுத்துவிட்டார்கள்.

சஹாபாக்கள் அநேகமாய் ஹஸ்ரத் அவர்களுடன் பிரயாணத்தில் செல்வார்கள். ஆனால் ஒரு போதும் ஹஸ்ரத் அவர்கள் தங்கள் வேலையை இதரார்கள் புரியும்படி விடுவதில்லை. தங்களுக்கு தாகம் மேலிட்டபொழுது தண்ணீர் கேட்டார்கள். கண்ணாடி கிளாஸில் தண்ணீர் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் அவர்கள் தாகம் அதிகமாக

விருக்கும் நிலைமையிலும் அதனை மறுத்துவிட்டார்கள். கடைசியாக மண் பாத்திரத்தில் கொடுக்கப்பட்டபோது அதனை அருந்தினர்கள்.

இவைகள்தான் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் காலத்திலிருந்த முஸ்லிம்களது குணங்களாகவிருந்தது பாருங்கள்! இவ்வாறுன அருங்குணங்களையும், சமாதானத்தையும் நாம் உண்டாக்கிக்கொள்ளாதவரை இஸ்லாத்தின் இன்பத்தை நாம் ஒருக்காலும் அனுபவிக்க முடியாது. மேலே கூறப்பட்டுள்ள அருங்குணங்களினல்தான் பெருமானர் (ஸல்.) அவர்கள் காலத்திலிருந்த முஸ்லிம்கள் உலகத்தை தங்களுக்கு வசப்படுத்திக்கொண்டிருந்தனர். இவ்வாறுன சற்குணங்களை நாமும் பின்பற்றி நடந்து, உத்தம சீலர்களாகத் திகழ, ஏகவல்லோன் அருள்புரிவானுக.

திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம்களின் விழிப்பு

[தென்காசி. மௌலவி. மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் வரைவது.]

அன்பும் ஆர்வமுமிக்க முஸ்லிம் சகோதரர்காள்!

நமது பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தில் பிரசாரத்தைப்பற்றி எத்துணை கண்டிப்பாய்க் கட்டளையிடப்பட்டுள்ளதோ மென்பதை சொற்ப அறிவுள்ள யாவரும் நன்குணர்ந்து கொள்வர். அக்கட்டளையை அனுசரித்தே இன்று வரை முஸ்லிம் பெரியார்களும், மார்க்க அறிஞர்களும் தங்களாலியன்றவரை பிரசாரம் புரிந்திருக்கின்றனர்; புரிந்தும் வருகின்றனர். ஆனல், தற்காலே அத்திப்பூத்தாற்போல் எவ்வறிஞரேனும் இஸ்லாமியத் தொண்டாற்ற, பிரசாரம் புரிய முன்வரின் அவருக்கு உதவியாளரும், ஊக்கங்காட்டுவோரும் இல்லாமையால், அவ்வறிஞருக்கு இடைஞ்சல்செய்து பல கஷ்ட சங்கடங்களை விளைவித்து, அவரின் அவ்வுயரிய நோக்கங்களைக் கெடுத்து விடுகின்றனர். இது தற்கால வழமையாக விருக்கின்றதென்பதை ஒவ்வொரு இஸ்லாமிய பக்தரும் கண்கூடாகக் கண்டு கண்ணீர் வடிக்காமலில்லை.

இவ்வுயரிய பொறுப்பை, மஹா கஷ்டம் நிறைந்த இவ்வேலையை சென்ற சில வருஷங்களாக நமது சென்னை மாகாணத்தில், சிரமேற்கொண்டு உழைத்துவந்த கம்பம் இஷாஅத்துல் இஸ்லாம் சபை தற்பொழுது பல காரணங்களால் வேலைசெய்யாது மௌனமுடன் இருந்து வருகின்றதென்பதைக் கவனித்த யார் தான் வருந்தாமலிருப்பர். இது நமது தென்னட்டிற்கே மத்திய இஷாஅத்துல் இஸ்லாம் சபையாக கீர்த்தியுடன் பெயர் வாங்கியதென்பதையும், வடநாட்டின் பல தலைவர்களும் இதைப் பாராட்டியதுடன் கம்பம் வந்து நேரில் பார்த்து, இச்சபையின் முயற்சியைப் பாராட்டினர்களென்பதும் யாவரின் ஹிருதயங்களை விட்டும் அகன்றிருக்காதென்பது திண்ணம். இறைவன், இச்சபையினர்கட்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஈந்து, மீண்டும் முன்னையை விட பன்மடங்கு அதி விமரிசையான முறையில் உழைக்க கிருபை செய்வானுக. ஆமீன்.

மேற் வரைந்தவாறு கம்பம் இஷாஅத்துல் இஸ்லாம் சபை மௌனமுற்றிருப்பதை யுத்தேசித்தும், சமீபத்தில் தோன்றிய தாழ்த்தப்பட்டவர்களின் மதமாற்ற கிளர்ச்சியை யுத்தேசித்தும், இன்னும் பலர்கள் இஸ்லாத்தைத் தழுவவும், அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவும் முன்வருவதைக் கவனித்தும் திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் தலைவர்களின் ஒரு கூட்டம் சென்ற 26-7-36-ல் திருநெல்வேலி ஜங்ஷன் லோக்கல் பண்டு முஹம்மதிய சத்திரத்தில் கூடி, இந்த ஜில்லாவின் நிலைமையை ஆலோசித்து "திருநெல்வேலி ஜில்லா இஸ்லாமியப் பிரசார சபை" என்ற நாமத்துடன் ஒருசபையை ஸ்தாபித்தனரென்பதும், இந்த ஜில்லா சபைக்கு ஜில்லா காரியதரிசியாக பிரபல அறிஞரும், மார்க்க பக்தரும், இங்கர் "முஸ்லிம் மஹா சபை" உப தலைவருமான ஆலி ஜனப் மு. ந. அப்துர் ரஹ்மான் ஸாஹிப் பஹதூர் அவர்களை நியமிக்கப்

பட்டதென்பதும் பத்திரிகை பார்க்கும் நண்பர்களுக்கு மறைந்ததல்ல.

மேலும், இச்சபையின் மூலமாக புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய நவ் முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பலர் இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். பல நவ் முஸ்லிம்களுக்கு இதரர்களால் விழையவிருந்த பல கஷ்ட நஷ்டங்களை இச்சபையார் தலையிட்டு நிவர்த்தி செய்திருக்கின்றனர். நல்ல ஆராய்ச்சிசெய்து கிறிஸ்தவ மதத்திலிருந்து இஸ்லாத்தைத் தழுவிய இரு நவ் முஸ்லிம் சகோதரர்கள் இச்சபையின் சார்பாக பல கிராமங்களுக்கும் சென்று இஸ்லாமியப் பிரசாரம் புரிந்து வருகின்றனர்.

மேலும், இச்சபையினர் சில மாதங்களுக்கு முன் சபைக்குரிய சட்ட திட்டங்கள், நோக்கங்கள் முதலியவைகளை புத்தகமாக அச்சிட்டு வெளிப்படுத்தி, தென்காசியிலும் கடைய நல்லூரிலும், இதைச் சேர்ந்த கிராமங்களிலும் தக்கவாறு பிரசாரம் புரிந்து பல கிளை ஸ்தாபனங்களை நல்ல முறையில் ஸ்தாபித்துள்ளனர். சென்ற இரண்டு மூன்று மாதங்களாக தேர்தல் சம்பந்தமான பிரச்சினைகள் பலமாக விருந்ததால் இச்சபையினர் சற்று வேலைகளைத் துரிதமாய்ச் செய்யாதிருந்தனர். இப்பொழுது மீண்டும், இந்த ஜில்லாவின் இதர தாலுகாக்களிலும் கிளை ஸ்தாபனங்களை நிறுவ முயற்சித்து வேலை செய்து வருகின்றனர். எல்லாம் வல்ல நாயன் இச்சபையை மென்மேலும் நல்ல முறையில் இஸ்லாத்திற்குழைக்க உதவி செய்வானாக. ஆமீன்.

இதர ஜில்லா முஸ்லிம் வாலிபர்களே!

அறிஞர்களே!!

இந்த திருவேளையில் திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம்களைப்போல் நீங்களும் சிறிது முயற்சித்து, ஜில்லா தாலுகா சபைகளை நிறுவி, தக்க மார்க்க அறிஞர்களைக்கொண்டு பிரசாரம் புரிந்து அனுஷ்டானத்தில் இஸ்லாமிய பக்தியைக் காட்ட முன்வருவீர்களாக. இதரர்களிடம் பிரசாரம் புரிய அறவே அனுமதிக்கப்படாத மதத்தினர்களான ஆரிய ஹிந்துக்களும், கிறிஸ்தவர்களும் தத்தம் மதப் பிரசார வேலையில் எடுத்துக்கொள்ளும் முயற்சியையும், ஊக்கத்தையும், அவர்கள் செய்யும் தியாகத்தையும் கவனித்தாவது நீங்கள் விழிக்கலாகாதா? சத்தியத் தொண்டாற்ற முன் வரலாகாதா? சென்ற பல வருஷங்களுக்குமுன் வட இந்தியாவில் சுத்தி இயக்கப் பிரசாரத்தால் முஸ்லிம்களுக்கு எத்துணைக் கஷ்டமும், சங்கடமும் ஏற்பட்டதோ அதைப்போல், நமது தென்னாட்டிலும் ஏற்படுமோவென்று பயப்பட வேண்டியிருக்கின்றது. அல்லாஹ் அவ்வாறு ஏற்படாதவாறு காப்பாற்ற வேண்டும். வெள்ளம் வருமுன் அணைகட்டி விடுவதுபோல் இப்பொழுதே நாம் விழித்து வேலை செய்தால் தான் இறைவனது உதவியும் நமக்குக் கிடைக்கும். நாம் யாருக்கு வந்த விருந்தோவென்று கவலையற்று முழுச் சோம்பேறிகளாக இருப்போமாயின், பிற்காலத்தில் வருந்தவேண்டி வரும். இஸ்லாத்தில் ஹிருதயப் பூர்வமாகச் சேர்ந்த நமது புதிய முஸ்லிம் சகோதரர்களை மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்க்க சுத்தி இயக்கத்தினர் நமது தென்னாட்டில் எடுத்துவரும் முயற்சியைப் பார்த்தாவது உண்மை உணர்ச்சியுடன் உழைக்க முன் வாலாகாதா? ஆதலின், உடனே ஆவன செய்ய அன்புடன் முன்வாருங்கள்! அருளாளனின் அருளைப் பெற ஆவலுடன் உழையுங்கள்!! வஸ்ஸலாம்.

நேயர்கட்கு!

அநேக நண்பர்கள் பற்பல விஷயங்களை அறிய விரும்பி கடிதங்கள் வரைந்து நமக்கு அனுப்பிவைக்கின்றனர். அவைகளுக்கு உடனே பதிலைத் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாக இருப்பதாயும் தெரிவித்துக் கொள்கின்றனர். ஆனால் பதில் அனுப்புவதற்குள்ள தபால் ஸ்டாம்பை அனுப்பிவைக்கின்றார்களில்லை. ஆகவே, பதில் எழுத ஸ்டாம்பு அனுப்பிவைக்கும் கடிதங்களில் முக்கியமென கருதப்படுபவைகளுக்குத்தான் பதில் வரைந்து அனுப்பப்படுமென்பதை அன்பர்கட்கு அறிவித்துக் கொள்கிறோம்.

நான் ஏன் மதம் மாறினேன் ?

(வி. சவரித்து உபாத்தியாயர் என்ற ஷௌகத் அலீ வரைவது).

நான் ஒரு பஞ்சம குலத்தைச் சேர்ந்த ஓர் ஏழைக் கிறிஸ்தவக் குடும்பத்திலுள்ளவன். நான் சிறியவனுயிருக்கும்போதே என் பிதா காலஞ்சென்று போனுர். 12-வது வயதில் மாதாவும் மறைந்தார். என் பிதா இங்கிலாந்து சர்ச்சுமிஷன் என்ற C. M. S. வேத சபையைச் சேர்ந்தவர். என் மாதாவோ, ரோமன் காதலிக் என்ற வேத மார்க்கத்தைச் சேர்ந்தவர். என்மாதா உயிரோடிருக்கும்போது எனக்கும் என் சகோதரிக்கும் ரோமன் காதலிக்கிலுள்ள தேவபக்திக்குரிய கருமங்களையும், அம்மத ஆசாரங்களையும், நன்கு கற்பித்து அதில் பழக்கி வந்தார். நாங்களும் அவ்வாறே கழுத்தில் உத்தரிக்கமும் கையில் பித்தளையால் செய்த சிலுவையையும் புதுமை நூலையும் கட்டிக்கொண்டு மத ஆசாரப்படி நடந்துவந்தோம். இந்நிலைமையில் யான் சிலோன் C.M.S. மிஷின் ஸ்கூலில் வாசித்துக் கொண்டிருக்கும்போது என் மாதா காலஞ் சென்றுவிட்டார். அதன் பின் சிலகாலம் என் சோதரியின்கீழ் இருந்து வந்தேன். அதுபொழுது கொழும்பு டவுனிலிருந்து 100 மைலுக்கு அப்பாலுள்ள சந்தணமாதா என்ற வேதக் கோவிலுக்கு இரண்டு தடவை நடந்துபோயிருக்கிறேன். அதாவது, அந்தக் கோவிலில் (புதுமை) அற்புதம் நடக்கிறதென்று அம்மார்க்கத்தைப் பின்பற்றி நடக்கும் ஜனங்களும், அம்மார்க்கக் குருக்கள்களும் சொல்வதைக் கேட்டு, அங்கு நடந்து செல்வது பெரும் புண்ணியமென்று கருதியதால் அவ்வாறு சென்றேன். குருக்களும் இதரர்களும், கூறியவைகளெல்லாம் முழுப் பொய்யேயொழிய, வேறல்ல என்பதையும், ஜனங்களை ஏமாற்றி அங்கு வரவழைத்து காணிக்கை போடுங்கள் என்று கூறி, ரூபாய் சேகரிக்கும் முறை கையாளப்படுகிறதென்பதையும் அறிந்தேன். மேலும், இம்மதக் கொள்கைகளும், மதப் போதனைகளும் கீழே காட்டியபடி என் மனதுக்கு பெரும் குழப்பத்தையும் மத வெறுப்பையும் உண்டாக்கின. ஷை குருக்களது புரட்டின் விபரமாவது :—1-வது மதப்புரட்டு எப்படியெனில், கிறிஸ்துவின் தாயாகிய மரியம் ஸித்தீகா (ரலி.) அவர்கள் கிறிஸ்துவைப் பெற்ற பிறகு கன்னிகையாகவே இருந்தார்கள் ஆதலின், அவர்களால் மோக்ஷகரைச் சேரலாம் என்றும், இன்னும் அவர்களிடமும் மற்றும் பரிசுத்தவான்களிடமும் நாம் விண்ணப்பித்துக் கொண்டால் நம்மை அவர்கள் மோக்ஷகரை சேர்த்து விடுவார்கள் என்றும் அவர்கள் கூறும் போதனை எனக்கு வெறுப்பையே கொடுத்து வந்தது. 2-வது குருக்கள்கள் பாவங்களை மன்னிக்க அதிகாரம்கொடுக்கப்பட்டிருக்கிறுர்களாம், அவர்கள் தேவனிடம் கேட்டால் பாவங்கள் மன்னிக்கப்பட்டுப் போம் என்ற போதனையும், 3-வது பாவ சங்கீர்த்தனம் பண்ண வருகிற பெண்களிடமும், ஆண்களிடமும், குருக்கள் (சாமியார்) தகாத வார்த்தையாடுதலும், 4-வது நற்கருணை பாத்திரத்தில் கிறிஸ்து எழுந்தருளியிருக்கிறுர் என்பதும், 5-வது காணிக்கைகொடுத்தால் மரித்துப்போன ஆத்மாக்கள் நரகத்திலிருக்கின்றனவா ? மோக்ஷத்தி லிருக்கின்றனவா ? என்று அறிந்து சொல்லுவதாய் பாதிரிகள் கூறுவதும், 6-வது குருக்கள் சாபமிட்டால் சாபமிடப்பட்டவன் கெட்டுப்போவான் என்று பயமுறுத்தும் சூக்ஷியும், இன்னும் சிலகொள்கைகளும் என் மனதுக்கு அதிக வெறுப்பையே கொடுத்துவந்தது. இதுவன்றி இம் மதத்தில் ஜாதி வித்தியாசமும், வர்ண பாகுபாடும் மிதமிஞ்சி காணப்பட்டதால் எனக்கு இம் மார்க்கத்தின்மீதுள்ள பற்று அறவே நீங்கிவிட்டது. உடனே கழுத்திலிருந்த உத்திரிக்கத்தையும், கையில் கட்டியிருந்த பித்தளையால் செய்த சிலுவையையும் நூலையும் அறுத்தெரிந்து விட்டேன். அதற்குப்பின்பு இந்துமார்க்க விடலைப் பையன்களோடு சிநேகம்செய்து, இந்து முறைப்படி திருநீரும் பூசிக்கொண்டு வேடிக்கையாகவும் உல்லாசமாகவும் திரிய ஆரம்பித்தேன். அவ்விதம் நடந்துவரும் காலே, ஒருநாள் ரோட்டில் வேதத்தின் பிரிவுள்ள இரக்ஷண்ய சேனை மதத்

தைச்சேர்ந்த சில வாலிப பெண்களும் ஆண்களும் தப்பு அடித்துப் பாட்டுப் பாடிக்கொண்டுப் பிரசங்கம் செய்கிறதைக்கண்டு அங்கு நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் இந்து திருமூர்த்திகளின் துர்நடக்கைகளையும், மற்ற இந்து மதாசாரங்களின் ஊழல்களையும் விரிவாய் எடுத்துக் கூறினர்கள். அதுபொழுது எனக்கு இந்து மார்க்கத்திலும் அதிக வெறுப்பு உண்டாகவே, வீட்டிற்கு வந்து எனது இந்து நண்பர்களிடம் இந்துப் புராணங்களை வாங்கி வாசித்துப் பார்த்தேன். கிறிஸ்துவ பாதிரிகள் கூறி வந்தவைகட்டுமேல் பதின்மடங்கு அதிகமான ஊழல்கள் இதிலிருப்பதாகத் தெரிந்து உடனே அம்மார்க்க ஆசாரமாகிய திருநீரு பூசுதலையும் அறவே ஒழித்துவிட்டு, மறுபடியும் பழைய மார்க்கமாகிய ரோமன் கத்தோலிக் மார்க்கத்தையே ஏற்று அதனைப் பின்பற்றி நடந்து வந்தேன். ஆனல் இம்மத ஆசாரங்கள் என் மனதுக்கு மிகுந்த வெறுப்பையேயுண்டு பண்ணிக்கொண்டிருந்ததால் என் நடத்தைகளெல்லாம் பக்தியில்லாத நடத்தையாயிருந்தது. இந்நிலைமையில் ஒருநாள் எனது சிநேகிதனை C. M. S. வேதமார்க்கத்தைச் சேர்ந்த ஒருவாலிபர் என்னிடம் வந்து பல மதங்களின் விஷயங்களையும் எடுத்துக்கூறி, C. M. S. வேத மார்க்கம்தான் சக்கிரவர்த்திகள் கைக்கொண்டு வருகிற சுத்த மார்க்கம் என்று அறிவித்ததோடு வேதபைபிளிலுள்ள சில முக்கிய போதனைகளையும், சில வேதவாக்கியங்களையும் எடுத்துக்காட்டி கிறிஸ்துவால் எல்லாம் நடந்தேறும், தேவன் தான் மறுப்பிறப்பாக அவதாரப் புருஷராய் மண்ணுலகில் அவதரித்து உலகத்தின் பாவத்தைச் சுமந்து சிலுவையில் மரணம் அடைந்து 3-ம் நாளில் எழும்பி பாவிகளை இரக்ஷித்தார்; அவர்தான் கிறிஸ்து என்றெல்லாம் பலவாருக்கூறி என் மனதைக் கவரச்செய்து மார்க்கப்பற்றை உண்டாக்கினர். உடனே நான் அவருடன் C. M. S. வேத கோவிலுக்குப்போய் அம்மார்க்கக் குருவிடம் பல போதனைகள் அடைந்து அம்மதத்திற்குள்ளானேன். இம் இம்மதத்திற்கு வந்தபிறகு நான் பாளையங்கோட்டை C. M. S. செக்கெண்டெரி ட்ரெயினிங் ஸ்கூலில் 1915ஞு முதல் படிக்க ஆரம்பித்துப் பாஸ்பண்ணினேன். ஷெ ஸ்கூலிலிருக்கும்போதே, மதப்போதக ஊழியத்திற்காக வேத பைபிள் புஸ்தகம் முழுதும் படித்துக் கொடுக்கப்பட்டது. அதில் மனதுக்கு ஒவ்வாத வசனங்களைக் குருக்களிடம் கேட்டால், அந்த ஞான அர்த்தம் மனுஷருக்குத் தென்படாது; தேவ இரகசியம் என்று சொல்லிவிடுவார். ஷெ ட்ரெயினிங் ஸ்கூலில் படித்து முடிந்ததும் C. M. S. வேத பாடசாலையிலே வேலை பார்த்து வந்தேன். அதாவது திருநெல்வேலித் தாலூகாவைச் சேர்ந்த 7, 8 கிராமங்களில் உபாத்திமை வேலையும், வேத போதக வேலையும் செய்து வந்ததோடு ஒவ்வொரு ஊர்களிலும் இந்துக்களைக் கிறிஸ்து மார்க்கத்தில் சேர்த்துப் பள்ளிக்கூடங்களும் கிணறுகளும் கோவில்களும் கட்டுவதற்கு முயற்சித்து, கிறிஸ்து மார்க்கத்தைத் தைரியமாகவும் உற்சாகமாகவும் போதித்துவரும் காலத்தில், கிறிஸ்தவர்களில் உயர்குலம் என்று சொல்லப்படுபவர்களும், இம்மார்க்கக் குருக்கள்களாகிய பாதிரிமார்களும் செய்து வருகிற ஒவ்வொரு மதப்புரட்டு, ஒழுங்கின்மை, கலப்பு விவாகமில்லாமை, சமபந்தி போஜன ஒழுங்கின்மை, ஜாதித்துவேஷம், சமதத்துவமில்லாத்தன்மை இன்னும் இவைபோன்ற அநேக விஷயங்களை நான் தெரிந்துகொண்டதால் என் மனம் புண்பட்டு வந்தது. மேலும், பாதிரிமார்கள் கிறிஸ்துவின் போதனைகளை அலங்காரமாய்ச் சொல்வார்களேயன்றி, அதனை அவர்கள் நடத்தையில் காண்பிக்காது அதற்கு எதிர்மாற்றமாகவே நடந்து வரக்கண்டேன். அதாவது, வேத பைபிள் வாக்கியம் ஒன்றுண்டு. மத்தேயு 7, 3-ல் உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? என்று சொல்லி இருப்பதற்கேற்ப தன்மீது ஏற்படும் குற்றங்களை உணராமல் மற்ற ஜனங்களைக் குற்றப்படுத்துவார்களே தவிர, தன்னுடைய நடத்தையை சீர்படுத்துகிறதில்லை. மேலும், அவர்கள் தன் இனத்தாருக்கு ஒரு விதமாகவும், இதரர்களுக்கு வேறுவிதமாகவும் பேசுகிறதை முகமுகமாய் அறியலானேன். மேலும் வேத பைபிளிலுள்ள சில விஷயங்களும் என் மனதில் மதவெறுப்பை கொடுத்துக் கொண்டிருந்தது. அதாவது, 1. தேவனும், கிறிஸ்துவும் ஒருவரே என்பதும், 2. கிறிஸ்து மரித்தது உலகோருடைய பாவங்களுக்காகவென்பதில் கிறிஸ்து பிறப்பதற்குமுன்னிருந்தவர்களுக்காகவா, அல்லது கிறிஸ்து பூமியில் சஞ்சரித்த காலங்களில் இருந்தவர்களுக்காகவா? அல்லது கிறிஸ்து பரலோகம் போனபின்பு இருந்தவர்களுக்

காகவா? என்ற சந்தேகமும், உலகத்தின் பாவங்களை எல்லாம் சுமந்து தீர்த்தார் என்று வேதம் கூறுவதில், கிறிஸ்து மரிக்கவேண்டியது அவசியமா? கிறிஸ்து மரித்ததினால் எப்படி மனிதர்களுடைய பாவங்கள் நீங்கும் என்பதும், "அவனவன் செய்த பாவபுண்ணியத்துக்குத் தக்கவாறு அவனவனுக்கு பலன் அளிக்கப்படும் என்ற வாக்கியத்திற்கு மேலே கூறப்படுபவை முரண்படுவதும் என் மனதில் பெரும் சந்தேகங்களை உண்டாக்கிக் கொண்டேயிருந்தது. இதுவன்றி இன்னும் அனேக வேத பைபிள் வசனங்களும் என்னை இம்மதத்தை வெறுக்கச் செய்துகொண்டிருந்தது. மேலும் உயர்குலம் என்று சொல்லப்படும் கிறிஸ்தவர்களுடைய ஊழல்களும், பாதிரிமார்களுடைய ஊழல்களும், மத ஊழல்களும் இப்படியிருக்க, பாதிரிமார்களோ பற்பல மதங்களைப்பற்றியும், அம்மதாசாரங்களைப்பற்றியும் அடிக்கடி குறைகூறிப் போதிப்பதுமுண்டு. உதாரணமாக, முஹம்மது (ஸல்.) மார்க்கம் ஆயுதபாணத்தினால் உண்டான மார்க்கம் என்றும், இம்மார்க்கக் கிரந்த கர்த்தா மதுபானப் பிரியரென்றும், மதுபான வெறியினால் அவ்வேதம் எழுதப்பட்டதென்றும், சண்டைசெய்து உலகத்தை எல்லாம் ஜெயித்து, தாம் இராஜ்ய பாரம் ஆளவேண்டுமென்று முஹம்மது (ஸல்.) பிரயாசை எடுத்து மார்க்கத்தைப் பரப்பினர் என்பதாகவும் பல விதமாக மதத்தைப்பற்றி குறைகூறுவார்கள். இவர்களின் போதனையைச் செவியேற்று யானும் இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இப்படியே போதித்திருக்கிறேன். ஆனால் வெளிப்படையாக முஹம்மது (ஸல்.) மார்க்கம் சமத்துவமும், சகோதரத்துவமும் உள்ளது என்பது அப்போதே நான் கண்ட காக்ஷிகளிலொன்று. இது விஷயத்தில் முஹம்மது (ஸல்.)மார்க்கம் நேர்வழியுள்ளது என்பது என் மனதுக்கு பிடித்தமாகவிருந்து வந்தது. இக்குழப்பத்தினிடையே சிக்கிக்கொண்டிருந்த யான், "வழிகாட்டியருள்வாயாகவென" கடவுளிடம் பிரார்த்தனை புரிந்துகொண்டிருந்தேன். இப்படியே காலம் கழிந்துவரும்போது, முஹம்மது (ஸல்.) மார்க்கத்திலுள்ள சில நண்பர்களால் முஹம்மது நபியின் (ஸல்.) ஜீவிய சரித்திரம் அடங்கிய புஸ்தகத்தையும், ஷை மார்க்க அனுஷ்டான முறைகளடங்கிய சில புஸ்தகங்களையும் வாங்கி வாசித்து வந்தேன். அப்புஸ்தகங்களையும் எனக்குத் தெரியாமல் எனது சில நண்பர்கள் எடுத்துத் தீயில் போட்டதாக அறிந்து மறுபடியும் ஷை புஸ்தகங்களை வாங்கி வாசித்து வர வர, என் மனதுக்கு இஸ்லாம் மார்க்கமே தகுதியுள்ளது, மோக்ஷகதி யளிக்கக்கூடியது என்பதையும், வேத பாதிரிமார்கள் கூறிய சமாசாரங்கள் யாவும் பொய்யே என்றும், திட்டமாய்த் தெரிந்துகொண்டு, மக்கள் உற்றார் உறவினர் முதலிய யாவருக்கும் தெரிவிக்காது மேலப்பாளையம் வந்து திருக்கலிமாச் சொல்லி பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்திற்குள்ளானேன். இதுவிஷயத்தை அறிந்த பாதிரிமார்கள் இரண்டு முறை என்னிடம் வந்து இஸ்லாத்தைவிட்டு என்னைப் பிரிக்க வேண்டிய பிரயத்தனங்கள் பல செய்தும், முடியாமல் போய் விட்டனர். அதன்பின் பாளையங்கோட்டை ஜான்ஸ் காலேஜில் வாசித்துக் கொண்டிருந்த என் பையன்களும் (என் மக்கள்) இஸ்லாம் மதத்தைத் தழுவினர். பின்பு என் மனைவியும் ஒருமகனும் இஸ்லாத்தைத் தழுவ முடியாதென அறிவித்துவிட்டனர். உடனே யான், இவ்வுலக வாழ்வையும் பரலோக வாழ்வையும் இழந்தவர்களாய் விட்டீர்களென, கூறிவிட்டு அவர்களை வெறுத்து விட்டேன்.

கடவுள் மனிதர்களுக்கு எல்லா சுதந்தரத்தையும் கொடுத்திருக்க, நாம் தாம் யோசித்து இது நன்மை, இது தீமை என்று உணராமல் நடந்து வருகிறோம். மேலும், நாம் ஒவ்வொருவரும் நன்கு யோசித்து பகுத்தறிந்து எம் மதத்தில், இவ்வுலகில் சகோதரத்துவமும், சமத்துவமும், முக்திபெறும் முறை அனுஷ்டானங்களும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறதென்று தெரிந்து நடக்கவேண்டியது பிரதானமாகும்.

ஆகையால் மேலே காட்டியபடி, சமுத்துவமும், சகோதரதத்துவமும், முக்திதரும் சுத்த சத்திய மார்க்க ஒழுக்கங்களும், வேறு எந்த மார்க்கங்களிலுமில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பார்க்கலாம். ஆனால் முஹம்மது நபி (ஸல்.) அவர்களுக்கு அருளப்பட்ட இஸ்லாம் மார்க்கத்தில்மட்டும் இவையடங்கலும் ஒழுங்காயமைந்திருக்கின்றன என்பதை யான் கண்கண்ட சாக்ஷியாகக் கூறுகிறேன். அல்லாஹ் எல்லாவற்றிர்க்கும் போதுமானவன்.

(வஸ்ஸலாம்.)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
208351
சென்னை-600 008

சுகாதாரம்-ஆரோக்கியம்

ஆரோக்கியம்' என்பதற்கு 'ஒற்றுமை' என்றர்த்தம். தேகத்திற்கும் மனதிற்கும் ஒற்றுமை இருந்தாலொழிய, ஆரோக்கியம் அடைவதரிது. மேலான எண்ணத்தினால் மனதின் ஆரோக்கியத்தை அடையும் விதத்தையும், சாமான்ய வாழ்வும், மேலான எண்ணமும் கூடினால், தேகாரோக்கியம், மனோரோக்கியம் இவ்விரண்டும் ஒருங்கே அடையும் விதத்தையும் இங்கே எடுத்துக் காட்டுவோம். "ஆரோக்கியமான தேகத்தில் ஆரோக்கியமான மனதுளது" என்று அடிக்கடி பழமொழி ஒன்று சொல்லப்படுவதுண்டு. இப்பழமொழி வாஸ்தவம் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. தேகத்தில் உண்டாகும் வியாதிகளைக் கண்டறிந்து, அவற்றிற்குத் தக்க வைத்திய சிகிச்சைசெய்து, அவைகளைச் சொஸ்தம் செய்வது சாத்தியமான விஷயம். ஆனால் ஒருவனது மனதிற்குள் நுழைந்து பார்த்து அவன் மனோ வியாதிக்குச் சிகிச்சைசெய்வது கடினம். மிகைப்படச் சொல்லல் என்னும் குற்றத்திற்கு ஆளாகாமலும், எதிர்வாதத்திற்குப் பயப்படாமலும் ஒரு விஷயம்மட்டும் சொல்லக்கூடும். அதாவது, அநேகவித தேக வியாதிகளுக்கு மனதே காரணம் என்பதேயாம். ஒழுங்கில்லாத எண்ணமும், தன்னைத்தானே அடக்காமலிருத்தலும், பயமும், ஆச்சரியமும் கோபமும் மனோ வியாதிக்கும், மனக்கோளாறுக்கும் காரணம். உதாரணமாக, மனோவிவகாரமும், மனோ சஞ்சலமும் இருந்தால், பசி அடங்கிப்போய், அது குன்ம வியாதிக்குக் காரணமாகும். கோபத்தினால் ஹிருதயம் நின்றுபோகும்; அல்லது ஜன்னி உண்டாகும். ஒரு கோபி தனது தேகத்திற்குக் கெடுதலையை உண்டுபண்ணி, தனது உயிருக்கே ஆபத்தை விளைவித்துக் கொள்வதுடன், தன் அண்டை அயலில் உள்ளவர்களுக்கும், தனது வேலைக்காரர்களுக்குங் கூட கெடுதலையை உண்டுபண்ணி, அவர்களுடைய உயிர்களுக்கும் ஆபத்தை விளைவிப்பான். மனக் கொதிப்புள்ளபோது, ஒருவன் கொலை, தற்கொலை முதலிய கொடிய பாதகங்களைச் செய்யக்கூடும். ஆனதுபற்றி, இதைச் செய்யவொட்டாமல் தடுப்பதற்கு, மனதிற்கு நிம்மதியும் அடக்கமும் உண்டாகும்படி அதைப் பயிற்சி செய்யவேண்டும். இந்தப் பயிற்சி இளம்பிராத்திலேயே ஆரம்பமாக வேண்டும். அப்படியானால், ஒரு குழந்தைக்கு சுகாதாரப்பழக்கங்களையும், சீக்கிரம் படுக்கப் போவது, அதிகாலையில் எழுந்திருப்பது, ஒழுங்கான காலவிடைகளில் ஆகாரம் உண்பது முதலிய பழக்கங்களையும் கற்றுக்கொடுக்கிறோமோ அப்படியே அதற்கு, தைரியம், பொறுமை, மற்றவர்களிடத்தில் மரியாதை, சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளல், தன்னைத்தானே அடக்கிக்கொள்ளுதல் முதலிய பழக்கங்களையும் கற்றுக்கொடுக்கவேண்டும். பெரியவர்களுக்கு இது அலக்ஷியமாகத் தோன்றலாம். ஆனால், குழந்தைகளின் வாழ்நாட்கள் சுகமாகவிருப்பதற்கு இது முக்கியமானது.

மனதிற்கு மனதே இடம்; அது நல்லதை கெட்டதாகவும், கெட்டதை நல்லதாகவும் ஆக்கவல்லது. ஒரு மனிதனுக்கு யோசனா சக்தியும், நல்லது கெட்டது என்பதைப் பகுத்தறியும் குணமும் அளிக்கப்படடிருப்பதால், அவன் மனதை அடக்கி, தன்வசப்படுத்திக் கொள்ள முயலவேண்டுமேயொழிய, மனது தன்னை அடக்கி, அதற்குத்தான் அடிமையாகும்படி விடப்படாது. மேலான எண்ணம் இதற்கு உதவிபுரியும். ஒருவன் மனோநிம்மதியுடன் இருக்கும்போது தன்னைத்தானே சில கேள்விகள் கேட்டுக்கொள்ளவேண்டும். அதாவது, நான் யார்? நான் உற்பவித்த காரியமென்ன? நான் இப்பூவுலகில் பிறப்பதற்கு முன் எவ்வாறிருந்தேன்? நான் இறந்தபிறகு என் கதி என்ன? இப்பிரசனைகளைத் தீர்க்க எத்தனிக்கையில், இவ்வாழ்நாளில் தான் செய்யக்கூடியது ஒரே ஒரு காரியந்தான். அதாவது, அல்லாஹ்வுக்கு அடிபணிந்து மற்ற ஜீவராசிகளுக்கு உழைப்பதேயாகும், என்று தெரிந்து கொள்வான். இம்மாதிரியான தத்துவத்தில் ஈடுபட்டு, மனதை நிலைநிறுத்தி எவ்வாறுதான் அல்லாஹ்வுக்கும், தன் உற்றார் உறவினருக்கும், பொதுவாய் பூலோகத்திலுள்ள ஜனங்களுக்கே தொண்டுசெய்யக்கூடும் என்பதை யோசிக்கும் போது, தன் மனதில் உண்டாகும் துர் எண்ணங்கள் யாவும் பறந்தோடிப்போகும்.

மௌலானு ஸித்தீகி அவர்கள் ஸ்ரீமுகம்.

ஜே. யெம். ஹஜ்ஜுக் காபிலா ஷெய்கும், இஸ்லாமியப் பிரசாரத் தலைவரும், தற்போது மதீனு முனவ்வராவில் தங்கியிருப்பவருமான மேன்மைதங்கிய அல்லாமா ஹிஸ் ஹோலினஸ் மௌலானு மௌலவீ காரீ ஹாபிஜ் அல்ஹாஜ் ஷாஹ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகியுல் சாதரீ மீரட் அவர்கள், கூத்தாநல்லூர் பிரபல மிராஸ்தாரும், ஆலிம்களின் அன்பரும், ஜே. யெம். ஹஜ்ஜுகாபிலா தலைவருமான ஆலீஜனுப் அல்ஹாஜ் முகம்மது இஸ்மாயீல் ருவுத்தர் அவர்களுக்கு அனுப்பிய திருபத்தில், தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் மதீனுவில் க்ஷேமமாக இருப்பதாய் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்விபரம் மௌலானு அவர்களது அன்பர்களுக்கும், சிஷ்யர்களுக்கும் தனித்தனியே தெரிவிப்பது அசாத்தியமாகுமாதலின் பத்திரிகைமூலம் அறிவிக்கப்படுகிறது.

N. B:—மேன்மைதங்கிய மௌலானு அவர்கள் இன்ஷா அல்லாஹ் இந்த ரபீஉல் அவ்வலுக்குப்பின் மதீனுவிலிருந்து புறப்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அன்பீர்!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா பணத்தை வருட ஆரம்பத்தில் கொடுத்து, அரும்மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது உங்களெல்லோருக்கும் தெரியாத விஷயமன்று. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள், சென்ற வருடத்திய சந்தா ரூபாயை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றீர்கள். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பாக்கிகளை தாமிதமின்றி நேரில் நமக்காவது, அல்லது அங்கு விடத்திய நமது ஏஜண்டு அவர்கள் மூலமாவது அனுப்பிக் கொடுத்து உதவி புரிவீர்களென எதிர்பார்க்கிறோம். வி. பி. செய்வதுகொண்டு வீண் செலவு ஏற்படுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

நமது பத்திரிகை கிடைக்குமிடங்கள் :—

மெஸ்ஸர்ஸ் A. M. K. ஹாஜி ஸ்டோர்,
220, 2-ம் குறுக்குத் தெரு, கொழும்பு

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப் அவர்கள்,
144, கைஸர் ஸ்டீட், கொழும்பு

ஜனாப் M. O. முகம்மது யூசுப் அவர்கள்,
45, குயின் ஸ்டீட், பினங்

ஜனாப் S. முகம்மது அப்துல்காதிர் அவர்கள்,
No. 30, பஜார், முன்னார்

தமிழ்நாடு ... காப்பக ... சென்னை-600 008

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T., Madras.